
அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
CENTUM Optima Mortgages Inc.
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும் செப்ரெம்பர் 2007

வீடு வாங்க, விற்க மற்றும் income tax, mortgage சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்
HOMELIFE Higher Standards
T: 416.264.0101
C: 416.568.4301
SELVA VETTYVEL
Broker of Record
HomeLife Future Realty Inc. Brokerage
262 Markham Road Scarborough, On M1J 3C5


# ‘டயற்’ குளிர்பானங்களால் உடல்பருமன் அதிகரிப்பு!

டயற் குளிர்பானமா அல்லது சாதாரண குளிர்பானமா சிறந்தது? இரண்டுமேயல்ல. சிறந்ததென்பது அவரவர் தெரிவைப் பொறு த்தது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

பொதுவாக டயற் குளிர்பானங்களை உடல் நிறைக் குறைப்புடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் வழக்கம் இருந்துவருகின்றது. ஆனால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி “டயற்” குளிர்பானங்கள் பசியை அதிகரிக்கச் செய்கின்றன. அதனால் அதிக உணவை உட்கொள்ள உடல் தூண்டப்படுகிறது. உதாரணமாக ஒரு டயற் கோலாவை குடித்தபின் ஒரு கப் அளவு உருளைக்கிழங்குப் பொரியலை உண்பதைப் போன்றது.

கடந்தமாதம் உடற்பருமன் தொடர்பாக அல்பேட்டா பல்கலைக்கழகத்தினால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வொன்றிலேயே அந்தத் தகவல்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன. அந்த ஆய்வில் எலிகளுக்கு டயற் குளிர்பானங் களைக் கொடுத்தபோது அவை அதிக உணவை உட்கொண்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதே வேளை 2005ம் ஆண்டு ரெக்ஸஸ் பல்கலைக்கழகத்தினால் நடாத் தப்பட்ட ஆய்வொன்றில் ஒரு டயற் சோடா அருந்தும்போதும் உடல் பருமனாவதற்கான வாய்ப்பு 41வீதம் அதிகரிக்கிறது. ஆனால் சாதாரண இனிப்புள்ள சோடாவை அருந் தும்போது உடல்பருமனாவதற்கான வாய்ப்பு 30வீதமே அதிகரிக்கிறது.



Guna Selliah
Life Insurance Broker
416.371.7776

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
Tel: 416 321 1100 Fax: 416 321 1107
gary@galaw.ca

BUYING, SELLING,
INVESTING & MORTGAGE NEEDS CALL
SUN SANMUGATHAS
Broker & Manager
One stop shopping for all your mortgage & realestate needs.
Dir: 416.948.0693
Bus: 416.291.3000
PROPERTY MAX Realty Inc. Brokerage
PMCI MORTGAGE CANADA


Ask Us How You Can Own Your Home Today!
• Mortgages • Refinancing
• Debt Consolidation
• Insurance
Cash Point Mortgages
Tel: 416.284-0005,
Sutha: 416.824-6605
3852 Finch Avenue E., Unit 202, Scar, ON


PMCI MORTGAGE CANADA
PROPERTY MAX Realty Inc. Brokerage
One Source For Many Type of Properties & Mortgages
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300


இனிய இல்லம் ஒளிமயமான எதிர்காலதிற்கு அடித்தளம்
மகேன் சிங்கராஜா
Sales Representative
Direct: 416.302.7283 (SAVE)
E-mail: msingarajah@trebnet.com
web: www.mahenonline.com
RE/MAX Vision Realty Inc., Realtor
2210 Marham Road, Unit-1, Toronto, ON M1B 5V6
Tel: 416.321.2228, Fax: 416.321.0002

CANADIAN HOME APPRAISALS INC.
Residential and Commerical Appraisals
CHAI CANADIAN HOME APPRAISALS INC.
S.K. Bales, CRA.
W.E. Doolittle, AACI.
Our firm is listed on major Banks and Trust Companies' approved appraisal list.
www.chainc.ca, Email: chai@chainc.ca
Tel: 905-947-4647, Fax: 905-947-9048, Cel: 416-801-3219

## தாயகத்தின் நினைவுகளை மீட்டுத்தரும்

# மூங்கில் நாட்காட்டி




digi Media

நீங்கள் உங்கள் வாடிக்கையாளர்களுக்கு 2008ம் ஆண்டு நாட்காட்டிகளளை வழங்க விரும்புகிறீர்களா? மூங்கில் நிறுவனத்தின் நாட்காட்டிகளை வழங்குங்கள். மூங்கில் நிறுவனம் தமிழீழத்தின் இயற்கை எழிலையும், மனிதர்களையும், பண்பாட்டு அழகையும் வருடம் முழுவதும் அழகிய நாட்காட்டிப் படங்களாக அழைத்துவருகிறது. பதின்மூன்று மாதத்திற்கான விபரங்களைக் கொண்ட இந்த நிறுவனத்தின் புகைப்படங்கள் எமது புகைப்படக் கலைஞர்களின் படைப்புக்களாகும். மூங்கில் நிறுவனத்தின் இந்த அழகிய நாட்காட்டிகளில் ஒவ்வொரு மாத விபரங்களின் கீழும் உங்கள் நிறுவனத்தின் பெயர், உங்கள் புகைப்படம், விபரங்கள் அச்சிடப்பட்டிருக்கும். மூங்கில் நாட்காட்டிகள் மூலம் புலம்பெயர் தேசமெங்கும் தமிழீழ எழிலையும், வாழ்வியலையும் பரவவிடுங்கள்.

மூங்கில்
MOONGIL

**www.moongil.ca**
**TEL: 416-628-7109**
**1-(888)-401-3824**

# புரிந்துணர்வைப் புரிந்து கொள்ளல்



த.சிவதாசன்

சென்றஇதழில் வெளியான கட்டுரை கொஞ்சம் பரபரப்பாகவிருந்ததென்று கேள்வி.

இதயங்களாற் சிந்திப்பதற்கும் மூளையாற் சிந்திப்பதற்குமிடையில் வித்தியாசமுண்டு என்பதை ஏற்றுக் கொள்பவர்களுக்கு அக் கட்டுரை ஆச்சரியத்தைத் தந்திருக்க முடியாது. அரசியல், மதம், காதல் இவற்றிலெல்லாம் மூளையை ஓய்வெடுத்துக் கொள்ளப் பழக்கப்பட்டிருப்பது துர்ப்பாக்கியமேதான்.

"If we embark on (these) romantic ideas to revive a mythical past of greatness and culture, we would be damned" என்று முன்னாள் சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ அவர்கள் சமீபத்தில் பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டியொன்றிற் கூறியிருந்தார். இதயங்களினாற் சிந்திப்பவர்களுக்கு இடம் கொடுக்காது தனது நாட்டை அவர் உருவாக்கியமையே இன்றுஅங்கு மதம், மொழி ஆகியவற்றுக்கு அரசாசனம் வழங்கப்படாது ஆட்சி நிர்வாகம் ஒழுங்காகக நடைபெறுவதற்குக் காரணம்.

பிரச்சினைகளுக்கு போர் அல்லது வன்முறை மட்டுமே தீர்வாகும் என்பதில்லை. சிறிய பிணக்குகளைத் தீர்ப்பதற்காக பல மில்லியன் உயிர்கள் காவு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதே வேளை அணுவாயுதப் போராக வெடிக்கவிருந்த பல பிணக்குகள் சில மனிதர்களின் சமயோசித உடன்படிக்கைகளினாற் தீர்க்கப்பட்டிருக்கின்றன. முதலாவதற்கு உதாரணம் சேர்பிய விடுதலைப் போராட்டம் பின்னர் ஆஸ்திரிய-ஹங்கேரிய போராக வெடித்து உலகப் போராக வெடித்தமை. இரண்டாவதற்கு உதாரணம் சோவியத் குடியரசின் வீழச்சி.

1917 அக்டோபர் புரட்சிக்குத் தேவையான ஆரம்ப பின்புலப் பண உதவியை அளித்தது மேற்கத்தய உலகப் பெரும் தனவந்தர்கள். அப்போது லியோன் ட்றொட்ஸ்கி நியூயோர்க்கிலிருந்து வெளிவந்த 'த நியூ வேர்ல்ட்' என்ற பத்திரிகையின் நிருபராகப் பணிபுரிந்தார். அமெரிக்க காங்கிரஸ் ஆவணங்களின்படி போல்சவிச் புரட்சிக்கு பண உதவி செய்த தனவந்தர்களில் றொத்ஷைல்ட், ஜேக்கப் ஷிவ், ஜோர்ஜ் வால்கர் போன்றவர்கள் அடங்குவர். இந்த வாக்கர் என்பவர் தற்போதய அமெரிக்க ஜனாதிபதி புஷ் இனது பாட்டனாராவார். அக்டோபர் புரட்சியின் பெறுபேறாக இழக்கப்பட்ட உயிர் களும் உடமைகளும் பல மில்லியன்கள். 'மனித சமத்துவம்' வேண்டி நடத்தப்பட்ட இப் புரட்சிக்கு கொடுக்கப்பட்டவிலை மனித உயிர்களே.

இதே போன்று இப் புரட்சியின் பெறுபேறாகிய சோவியத் குடியரசைக் 'கத்தியின்றி இரத்தமன்றி' முடித்து வைத்த பொறுப்பும் அமெரிக்காவையே சாரும். இதற்கு அவர்கள் பாவித்த முதன்மையான கருவி மதம். அப்போதய கத்தோலிக்க தந்தை பாப்பரசர் ஜோன் போல் மற்றும் அப்போதய அமெரிக்க ஜனாதிபதி றேகன் இருவரும் இதற்குப் பொறுப்புடையவர்கள். சோவியத்குடியரசின் உடைவால் அமெரிக்க வணிக நிறுவனங்களும் கத்தோலிக்க திருச்சபையும் லாபமடைந்தன. அதே வேளை பாரிய உயிர் உடமை இழப்புகள் ஏதுமின்றி இப் புரட்சி நடைபெற்றதால் மானிடம் நன்மை பெற்றது. அதற்குரிய பெருமையும் இவ்விருவரையுமே சாரும்.

எமது ஈழப் போராட்ட வரலாற்றில் மேற்கூறிய இருமுறைகளும் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதயங்களினாற் சிந்திக்கின்ற மக்களின் உணர்வுகளைத் திருப்திப்படுத்துவதற்காகப் பல ஆயிரம் உயிர்கள் காவு கொடுக்கப்பட்டிருக்கின்றன. தென்னிலங்கை இனக்கலவரங்கள், இந்தியாவின் தூண்டுதலாற் செய்யப்பட்டது என்று கருதப்படும் அனுராதபுரப் படுகொலைகள என்று பல மக்களின் உணர்வுகளைக் கிளறி விடவும், அதன்பால் உருவேற்றப்பட்ட உணர்வுகளுக்குத் தீனி போடவும் அரசியல்வாதிகளால் திட்டமிட்டு இவை செயலாற்றப்பட்டவை.

மாறாக, 1987 இல் நடைபெற்ற இந்திய இராணுவத்தினரோடு விடுதலைப் புலிகள் செய்த போரின்போது புலிகள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் 'புரிந்துணர்வு' உடன்படிக்கை செய்வது அவசியமாகவிருந்தது. இதே போன்ற உடன்படிக்கைகள் சிங்கள – தமிழ் அரசியலில் நடைபெறாத ஒன்றல்ல. சோழர்களுக்கெதிராக சிங்கள அரசுகள் சேரர்களுடனும் பாண்டியர்களுடனும் உடன்படிக்கை செய்து கொண்ட சம்பவங்களும் வரலாற்றிலுண்டு. அதே போன்று கருணாவின் கிளர்ச்சியைப் புலிகள் முறியடிக்க எடுத்த முயற்சியில் பாரிய உயிரிழப்பு ஏற்படாது வெற்றியை எட்டுவதற்காக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் பல தந்திரங்களைக் கையாண்டார். தனித்தனி முகாம்களிலிருந்த போராளிகளைத் தனிமைப் படுத்தி அவர்களோடு பேச்சுக் கொடுத்து உளவியல் ரீதியாக அவர்களை மாற்றி எதிர்ப்புகளையும் இழப்புக்களையும் தவிர்த்து வெற்றியை ஈட்டினார். முழுஅளவிலான போராக அது நடைபெற்றிருப்பின் பல ஆயிரக்கணக்கான போராளிகளின் உயிர்கள் இழக்கப்பட்டிருக்கும்.

பிணக்குகள் போர் முனையில் மட்டும்தான் தீர்க்கப்பட வேண்டியதல்ல என்பதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்களைக் காட்டலாம். அதே வேளை பல கொலை வெறி அபிலாசைகளைப் போர் மூலம் மட்டுமே நிறுத்தலாம் என்பதற்கும் உலகவரலாற்றில் பல தடயங்களுண்டு. பாபர் முதல் அவுரங்கஷீப் வரையிலான முகலாய சக்கரவர்த்திகளின் மத விஸ்தரிப்புப் போர்களைத் தடுப்பதில் இந்தியாவின் மராத்திய அரசர்களின் பங்கு முக்கியமானது. பிரித்தானியருக்கு எதிராகக் கிளர்ந்த சுபாஷ் சந்திர போஸின் ஆயுதக்கிளர்ச்சி, தென் ஆபிரிக்க விடுதலைக்காக ஆயுதமேந்திய ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் ஆயுதக் கிளர்ச்சி, சிம்பாப்வே விடுதலையைப் பெற்றுத் தந்த முகாபே, நுக்கோமா போன்றவர்களின் ஆயுதப் போராட்டம் இவையெல்லாம் உலக வரலாற்றில் தேவை கருதி ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்கள்.

இப்பின்னணியில் தற்போதய ஈழப்போராட்டத்தை அணுகிப் பார்த்ததால் எனக்குக் கிடைத்த ஒரு பார்வைக் கோணமே சென்ற இதழ்க் கட்டுரையான 'பொங்கு சிங்களம்'.

> “ இதயங்களினாற் சிந்திக்கின்ற மக்களின் உணர்வுகளைத் திருப்திப் படுத்துவதற்காகப் பல ஆயிரம் உயிர்கள் காவு கொடுக்கப்பட்டிருக்கின்றன. ”


போராட்டத்தில் கால நேரத் தேவைகளுக்கேற்ப உத்திகளும், வடிவங்களும், வியூகங்களும், தந்திரோபாயங்களும் மாறும் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். அதை மாற்றும் தகமையும், வல்லமையும் போராட்டத்தில் பங்கு கொள்ளும் இரு பகுதியினருக்குமே உண்டு. இதயங்களினாற் சிந்திக்கும் பெரும்பான்மையான பொது மக்களுக்கு உணர்வுகள் மட்டுமே வழிகாட்டும். இப்படியான மக்களின் உணர்வுகளை மதித்து அதற்காகவே போரை வழி நடத்தும் தேவை எல்லா சிங்கள அரசுகளுக்குமே இருந்துவந்திருக்கிறது. ஜனநாயக மரபிலான தேர்தல்களை நம்பி ஆட்சி நடத்தும் சிங்களக் கட்சிகளுக்கு அது தேவையானது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் போரில் தமிழர் தரப்பு வெல்ல வேண்டும் என்றஉணர்வு வழிப்பட்ட வெளிப்பாடுகள் இருக்கும் என்பதையும் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

கிழக்கு மாகாணத்திலிருந்து புலிகள் வெளியேறியது பற்றிய பார்வையில் தமிழ் மக்களுக்கு இரண்டு கோணங்களுண்டு. கிழக்கு மாகாணத்துக்கு வெளியேயிருந்து பார்ப்பவர்களுக்கு புலிகள் வெளியேறியது தந்திரோபாயமாகப் பார்க்கப்படலாம். ஆனால் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு தாங்கள் தமிழர் தரப்பினால் 'கைவிடப்பட்ட' மக்கள் என்ற எண்ணம் உருவாகும் போது தங்கள் காவலர்கள் தோற்றுப்போய் விட்டார்கள் என்ற நினைப்பு வருவதையும் தவறென்று கூறிவிட முடியாது.

இந்த நிலையில் கிழக்கு மாகாண மக்கள் (பாதிக்கப்பட்ட) இப்போதைக்குத் தங்களது உடனடியான அவலங்களுக்கான தீர்வொன்றையும் பின்னர் நீண்டகாலத்தை மையப்படுத்திய தீர்வொன்றையும் யார் பெற்றுத்தர வல்லவர்கள் என்பதைப்பொறுத்தே தமது ஆதரவை வெளிப்படுத்துவார்கள். சகல தமிழ் பேசும் மக்களும் அதைப் புரிந்து கொள்ள வேண்டும். கருணா குழுவினரின் பிரிவு ஈழவிடுதலைப் பேராட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று உணர்ச்சி வசப்பட்டு நமக்கு நாமே சொல்லிக் கொண்டாலும் உண்மை அதுவல்ல. அதே வேளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் வடக்கு கிழக்கு இணைந்த தீர்வொன்றை மட்டுமே ஏற்பதற்குத் தயாராகவுள்ளார் என்பதையும், வடக்கை மட்டும் தனது பரிபாலன பிரதேசமாக ஏற்றுக் கொண்டிருப்பின் இப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருக்காது என்பதையும் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்வார்கள். வடக்கு கிழக்கு இணைந்த தமிழீழத்தின் தீர்வொன்றே தமிழ் மக்களின் அபிலாஷை என்பதை முன்வைத்தே அவர் அக்கோரிக்கையைத் தனது குறிக்கோளாக முன் வைக்கிறார். இவ்வேளை கிழக்கு மாகாணத்தில் புலிகளின் பிரசன்னம் இல்லாது போய் கருணா குழவினரின் ஆதிக்கம் பரவலாக்கப்பட்டு அதன் மூலம் அம் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரணம் கிடைக்கப்பெறுமானால் அரசியல் ரீதியாகப் புலிகள் தோல்வியுற்றவர்களாகவே பார்க்கப் படுவார்கள்.

அதற்கு அடுத்தகட்டமாக கிழக்கு மாகாண மக்கள் தங்கள் நீண்டகால பிரதேச தனித்துவத்தைப் பற்றி யோசிக்கும் கட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் அரசின் வலிந்த குடியேற்றங்கள் காரணமாக தமிழர் பாரம்பரிய பிரதேசங்கள் இழக்கப்பட்ட நிலையில் அதைத் தடுத்து நிறுத்த கருணா குழுவினர் எதுவுமே செய்யாதிருக்கும் பட்சத்தில் புலிகளை நிராகரித்ததற்காக அவர்கள் வருத்தமடையவே செய்வார்கள். இதுவரை கால இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழரிடமிருந்து அபகரிக்கப்பட்ட பிரதேசங்கள் மீட்டெடுக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லாதபோது தற்போது இழக்கப்படும் பிரதேசங்களுக்கும் அதே கதிதான் என்பதையும் நாம் உணர வேண்டும். எனவே தற்போதிருக்கும் சூழ்நிலையில் பிரதேசங்களைப் பாதுகாப்பது தமிழருக்கு மிக அவசியமானதொன்று. கிழக்கு மாகாணத்தில் அதைச் செய்யும் வல்லமை இப்போது விடுதலைப் புலிகளுக்கு உண்டா என்பது

7ம் பக்கம் பார்க்க...

#1 TEAM @ PROPERTY/MAX REALTY INC.

PROPERTY MAX
Realty Inc. Realtor
Mohan Subramaniyam
Broker of Record
416.321.2300
New Mortgage, Commercial Mortgage
New Immigrans, Ist, 2nd Mortgage
Re-Financing, New Home Buyers
Search More Properties @
www.realestatebrokerofrecord.info
WE BRING CANADA'S LEASING LENDER'S TO YOU
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC.
PLEASE MENTION PROPERTY/MAX WHEN ENQUIRING ABOURT PROPERTIES!

# பவிசுக் கண்ணாடி



மாமூலன்

கனடாவில் ஏற்படும் கதிரவப் பாதிப்புக்கள் பல. இவ்வகைக் கதிரவப் பாதிப்பிலிருந்து விடுபட, தவிர்க்க தொடர்ச்சியாக பல சிறு சிறு நடைமுறைகளை கையாளப்பட வேண்டும். அவை என்ன என்பது அனைவருக்கும் தெரிந்தது போலவே நினைவூட்டுவது தற்போதைய நோக்கம்.

அத்தோடு முடியுமானால் சில பாதிப்புக்கள் உருவாகாதவாறு பார்த்துக் கொள்ளுதல் எப்படி என்பதையும் சொல்லி வைக்கலாம். குறிப்பாக கதிரவ ஒளி மற்றும் புற ஊதாக் கதிர் பாதுகாப்பைப் பார்ப்போம்.

கோடகாலத்தில் வெளியில் திரியும் போது கனடா மாதிரி துருவப் பகுதியல் உள்ள நாடுகளில் புற ஊதாக்கதிர் பாதுகாப்புக்காக மேற்பூச்சு வேலைகள் செய்ய வேண்டும் என்பது வழக்கமான அறிவுரை.

ஆனால் அண்மையில் நடந்து முடிந்திருக்கிற ஆய்வாளர்களின் சிறு கலந்துரையாடல் ஒன்று அந்தப் பூசக்களும் முழுமையான பாதிப்பிலிருந்து விடுதலை தராது என்று சொல்லுகின்றன. இந்நிலையில் நாங்கள் எதைத்தான் செய்வது என்ற கேள்வி எழுகின்றது. பார்க்கலாம்.

துருவத்தை அண்டியிருக்கும் நாடுகளில் கதிரவன் ஒப்பீட்டளவில் ஒரே கோணத்தில் நிலை கொண்டிருப்பது நடக்கும். இது பூமியன் சாய்வினாலும் துருவத்தை அண்டி இருப்பதாலும் ஏற்படும் விளைவு. இந்த மாதரி நேரங்களில் கதிரவனின் ஒளி ஒரே கோணத்திலிருந்து ஒரே பக்கத் திலிருந்து, தொடர்ந்து வந்து கொண்டிருக்கும். அதனால் நாங்கள் ஏதாவது ஒரு திசையில் பயணம் செய்யும் போதோ, அல்லது நடக்கும் போதோ, வீடுகளில் இருக்கும்போதோ எமது வீட்டிற்குள் வரும் ஒளியின் அளவு தொடர்ந்து ஒரே மாதிரியாக நீண்ட நேரம் இருக்கும்.

அந்தக் கதிரவ ஒளி தொடர்ந்து கண்ணுக்குள் பாய்வதால் ஏற்படும் பாதிப்புக்கள் பல.

குறிப்பாக இந்த மாதிரி நேரங்களில் வெளியில் நடமாடுபவர்களுக்கு கண்ணாடி தேவை.

எமது ஊரில் பவிசு காட்டப் போடும் 'கூலிங் கிளாசை' வெட்கத்தைப் பாராது இங்கு அனைவரும் போடவேண்டும்.

அதுவும் குறிப்பாக புற ஊதாக் கதிர் தடையைக் கொண்டிருக்கும் கண்ணாடிகளைப் போடவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது. சாம்பல், மண்ணிறம் மற்றும் பச்சை ஆகியவற்றில் மெல்லிதாக இருக்கும் வண்ணத்தில் கண்ணாடிகள் அமைய வேண்டும். அவை அனைத்தும் கண்ணாடி முழுவதும் இவ்வாறு நிறமுடையதாக இருக்குமாறு பார்ப்பது நல்லது. தற்போது மஞ்சள் நிறம் மட்டும் தான் மிகச் சிறப்பானது என்று கண் மருத்துவர்கள் அறிவுறுத்துகிறார்கள். மற்ற நிற சாயலுடைய கண்ணாடிகள் இயற்கையான பல ஒளி மாறுபாடுகளை தடுத்து கண்ணின் திறனைக் குறைக்கின்றனவாம்.

அரைவாசி வண்ணமும் மீதி வெள்ளையுமாகஇருக்கும் கண்ணாடிகளைப் பார்த்தால் 'அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது' என்று சொல்லி விட்டுவிடுங்கள். அவை தீமையானவை.வெள்ளயான கண்ணாடியின் பக்கத்தில் இருந்து கூடுதல் புற ஊதாக் கதிர்கள்,மற்றும் பொதுவான கதிரவக் கதிர்கள் கண்ணிற்குள் வரும் வாய்ப்பு உண்டு.

அதிலும்குறிப்பான பெரிய கண்ணாடிகளைக் கொண்டவையாக இருத்தல் இன்னும் நல்லம்.'கண்ணே நீதான் முதல் முக்கியம்'. (இதை அடிக்கடி வீட்டில் முணுமுணுத்துக் கொண்டால் 'ஐயோ என்னில எவ்வளவு விருப்பம்' என்று ஒவ்வொருவரும் நினைத்து உறவுகள் வலுவடையவும் வாய்ப்பிருக்கிறது.)

'பல்லுப்போனால் சொல்லுப் போச்சு. கண் போனால் கதையே முடிஞ்சுது'

கண்யைப் பாதிக்காத மற்றைய புற ஊதாக் கதிர்களின் தாக்கம் குறித்த பாதுகாப்பு வகைகள்...

பெரிய அகலமான விளிம்புஉடைய தொப்பி போட்டுக்கொள்ளுங்கள். பெரிய முழுக்கை உடைய சட்டைகள் போட்டுக் கொள்ளுங்கள். (இப்ப சொல்வது கொஞ்சம் ஒத்து வராது என்றாலும் என்ன செய்வது) நேரடியாக எங்கள் மீது கதிரவனின் ஒளி எவ்வளவு நேரம் படுகிறது, எவ்வளவு அளவிற்கு படுகிறது என்பதும் புற ஊதாக்கதிரின் தாக்கத்தை அளவிடுவதில் முக்கிய மானது. அதனால்தான் முழுக்கை மற்றும் முடிய சட்டைகள் போடவேண்டும். கோடையில் திறந்து விட்டுத் திரிய இருந்தவர்கள் என்மீது கோபப்படாதிருப்பார்களாக.

எனவே கோடைகாலம் என்று கமக்கட்டும் இல்லாத சட்டைகள் போடாது முழுக்கை வைச்ச சட்டை போடுதல் நல்லது.

தொலைக்காட்சியில் வரும் UV Index அறிவுறுத்தல் என்ன என்பதைப் பாருங்கள்: அவற்றைப் பொறுத்து பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

0.2 வரை குறைவானது. கண்டிப்பாக கண்ணாடி அணியவேண்டும். முந்தால் பூச்சும் பூசவேண்டும்.

3-5வரை. மிதமானது. 30 நிமிடத்திற்கு மேல் வெளியில் வெயிலில் நிற்பதாக இருந்தால் எச்சரிக்கை தேவை. தொப்பி, முழுக்கை சட்டை, கண்ணாடி தேவை.

6-7 வரை உயர்வானது. 11:00 மணிமுதல் 4:00 மணிவரை கதிரவனைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.நிழலில் நில்லுங்கள். பூச்சு, கண்ணாடி, முழுப்பாதுகாப்பு உடை இவற்றுடன் நிழல் தேடிக் கொள்ளுங்கள்.

8-10 வரை மிக உயர்வானது. 11:00 மணி முதல் 4:00 மணிவரை வெயிலில் போவது கூடாது. மேலே உள்ள அனைத்தும் பொருந்தும்.

11 மற்றும் மேலே. உச்சமானது. மேலே உள்ள அனைத்துடனும் கதிரவ ஒளியில் திரிவதை 11:00 இலிருந்து 4:00 வரை எண்ணிப் பார்க்கவே வேண்டாம். இது பொதுவாக கனடாவில் வராத எச்சரிக்கையாயிருப்பினும் நினைவில் கொள்க. குறிப்பாக இந்த நாட்களில் கடற்கரை நிழலில் இருப்பதும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மாலையில் கூட எச்சரிக்கையாக வெளியே வருவது நல்லது. புற ஊதாக்கதிர்களின் அளவும் தாக்கமும் குளிர் நாட்களில்கூட இருக்கும் என்றாலும் கோடைகாலத்தில் நாங்கள் வெளியே அதிகம் நடமாடுவதால் அதிகமாக அதுபற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது.

அகலமானவிளிம்புடைய தொப்பி,முழுக்கை சட்டைகள் என்பவற்றை அணிந்து வரும்படி முன்கூட்டியே அறிவுறுத்தலாம். இராட்டினம் சுற்றுபவர், மிட்டாய் விற்பவரை விழாவுக்கு அழைப்பது போல விழாவுக்கு "பவிசுக் கிளாசு" விற்பவரைக் கூப்பிடலாம். நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யும் பொறுப்பில் இருந்தால் நிகழ்ச்சிக்கு போதியளவு நிழல் தரும் கூடாராங்கள் ஏற்பாடு செய்லாம்.

இவை தவிர வீட்டில் வெளியே சுத்தப்படுத்துதல், வீட்டுத் தோட்டம் போன்றவற்றிற்குச் செல்வோர் தங்கள் பாதுகாப்பைக் கதிரவ ஒளியிலிருந்து மேற்சொன்ன முறைகளில் ஒழுங்கு செய்தபின்பு போகவேண்டும். குறிப்பாகச் சொல்ல வேண்டியது பிறந்த குழந்தைகளுக்கு எடுக்கவேண்டிய நடைமுறைகள். பலரும் மேலே சொன்ன நடைமுறைகளை சிறிய குழந்தைகளுக்கும் மழலைகளுக்கும் கடைப்பிடிப்பதில்லை. குறிப்பாக கண்ணாடி. கண்ணாடி போடுவது வடிவுக்கில்லை என்று முன்பே சொல்லிவிட்டோம். இருப்பினும் பிறந்த குழந்தைக்குக் கூட வெளியில் போகும் போது புறஊதாக் கதிர் தாக்கத்தைத் தவிர்க்கும் கண்ணாடிகள் வேண்டி அணிவிக்க வேண்டும் என்பது முக்கியம்.





தவிர்க்க முடியாதபடி ஊர்ச் சங்கங்களில் தொடர்பு பட்டிருக்கிறோம். பிறந்த இடம். வளர்ந்த இடம். திருமணம் முடிச்ச இடம் என்று 3 இற்கு குறையாத ஊர்ச் சங்கங்களின் நடவடிக்கை தொடர்புபடும். இதுவெல்லாம் ஒன்றேயாக இருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கதிரவனைப் பற்றிப் பயப்படத் தேவையில்லை.

இப்படி சங்கத்தில் விழாக்கள் பூங்காக்களில் நடக்கப் போவதாயிருந்தால், அவர்கள் கேட்பார்களோ மாட்டார்களோ என்று பார்க்காமல் அங்கு வருவோருக்கு சிறிய துண்டறிக்கை அடித்துக் கொடுக்கலாம். (மறைமுகமாக நீங்கள் அடுத்த முறை அங்கு தலைவராகும் வாய்ப்பும் இதனால் இருக்கிறது.)

குறிப்பாக 11:00 மணியிலிருந்து 4:00 மணிவரை நேரடி வெயிலில் இருந்து சிறியோர் முதியோர் பாகுபாடு இன்றி விலகி இருக்கும் படி சொல்லாம். கண்ணாடி போடுதல்,

கண்ணாடி போட்ட குழந்தைகள் பார்க்க அழகாக இருப்பது மட்டுமல்ல அவர்களது வாழ்க்கையும் எதிர்காலத்தில் ஒளிமயமாக இருக்கும்.

(கோடை முடிகிறது. இலையுதிர் காலம் வருகிறது. இனித்தான் கதிரவன் ஒரே திசையில் பல நேரம் இருக்கும் வாய்ப்பிருக்கிறது.

"பவிசுக் கண்ணாடி போட்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாரும்
பின்னாடி நொந்து நூலாவர்."

■ ■ ■

**RAVI**
**INCOME TAX SERVICE**

- LAST 14 YEARS IN TAX SERVICES
- PERSONAL INCOME TAX
- CORPORATE INCOME TAX
- SMALL BUSINESS TAX
- GST/PST AND PAYROLL REMITTANCE
- E.FILE SERVICES
- YEAR ROUND SERVICES

MORE INFO PLEASE CALL
RAVI PARAMU
**416-262-4176**

Residential • Commercial • Investment Properties

- Residential
- Commercial
- Invetment Properties

**Ravi Paramu**
Sales Representative
**416•262•4176**
rparamu@hotmail.com
www.raviparamu.com

**HomeLife GTA Realty Inc.**
Realtor Member
1711 McCowan Rd., Suite 206
Toronto, Ont M1S 3Y3
Tel: 416•321•6969
Fax: 416•321•6963



# வீடு விற்பவர்களின் கவனத்திற்கு!




**மகேன் சிங்கராஜா**

- வீடு விற்பனைப் பிரதிநிதி -


வீட்டுரிமையாளர்கள் தமது வீட்டை தாமே விற்க முன்வருவதற்கான காரணம் என்ன? ஒரு வீட்டினை விற்பது மிகவும் இலகுவான ஓர் செயல்முறை என நம்புவதே இதற்குக் காரணமாகும்.அத்துடன் தாங்களாக செய்ய முடிந்த தொழிலிற்கு ஏன் புரோக்கர் பணம் கொடுக்க வேண்டுமென எண்ணுவதும் மற்றோர் காரணமாகும்.

வட அமெரிக்காவில் கடந்த வருடத்தில் வீட்டுரிமையாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பின்படி அடுத்த முறை வீட்டை விற்கும் போது வீடு விற்பதில் நிபுணத்துவம் பெற்றவரை (Real Estate Agent) அணுக விரும்புகின்றனர் என்பது அறியப்பட்டது. 30 வீதமானோரின் கருத்துப்படி, தாமே தமது வீட்டை விற்பதை முடிவு செய்ததினால் தாங்கள் சந்தோஷமடையவில்லை எனக் கூறுகின்றனர். இதற்குக் காரணம் என்ன?

அநேகமான வீட்டுரிமையாளர்களின்படி, வீடு விற்பதுடன் தொடர்புடைய ஆவணங்கள் தயாரித்தல், (Paper works), நாளாந்த வேலைகளையும் கவனித்தல், இவர்கள் சேமிக்கக் கூடிய கமிஷன் பணத்திற்கு பெறுமதியானதல்ல என்று கூறுகின்றார்கள். வெளியே தனிப்பட்ட விதமாக ஆலோசகர்கள்(Consultants), பரிசோதகர்கள் (Inspectors), மதிப்பிடுவோர் (appraisers), பிரசித்தி பெற்ற சட்டத்தரணிகள் (title lawyers), ஏனைய கடன் அலுவலர்கள், சந்தைப்படுத்தல், விளம்பரம் போன்றவற்றிற்கு பணத்தைக் கொடுக்கும் போது, புரோக்கர் கட்டணத்தைப் கொடுப்பதைவிட இவை அதிகமானதாக இருக்கின்றது.

ஓர் வீட்டை விற்பதற்கு வீடு விற்பனைச் சந்தை பற்றிய அதிகமான புரிந்துணர்வு தேவைப்படுகின்றது. வீட்டிற்கு அதிக விலையைக் குறிக்கும் போது, இது சந்தையில் உடனடியாக விலை போகாது இருப்பதுடன், ஓர் பிரச்சனைக்குரிய சொத்து என்ற பெயரையும் பெற்று விடுகின்றது. சொத்திற்கு விலை குறைவாகக் குறிக்கப் பெற்றால், உங்களுக்கு அதிக நட்டத்தை ஏற்படுத்தும். தவறான தீர்மானங்களின் விளைவாக இழக்கப்பட்ட பணமானது, கமிஷனை விட அதிகமானதாக இருப்பதாக பல வீட்டுரிமையாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

நீங்களே வீட்டை விற்பதற்கு முன்பதாக, பின்வரும் வினாக்களையும் அதற்கான உங்கள் விடைகளையும் மதிப்பிட்டு, வீடு விற்பதற்கு ஓர் நிபுணத்துவம் பெற்றவரை அமர்த்துவது அவசியமானதா என்பதை அனுமானியுங்கள்.

## நீங்கள் கவனத்திற் கொள்ள வேண்டிய வினாக்கள்

### எனது வீட்டை விற்பதற்கு போதுமான நேரமும், சக்தியும் எனக்கு இருக்கின்றதா? எவ்வாறு வீட்டை விற்பது என்பதை நான் அறிந்து வைத்துள்ளேனா? வீட்டை விற்பதில் எனது முழு ஆற்றலையும் பயன் படுத்துவேனா?

அநேகமான வீடுகள் தேவைக்கு அதிகமாக, சந்தையில் இருப்பதற்குக்காரணம், இந்த சொத்தினைக் காட்டுவதற்கு வீட்டுரிமையாளர்களுக்கு வசதியில்லாதிருப்பது அல்லது வீட்டைக் காட்டுவதற்கு நேரம் இல்லாமல் இருப்பதாகும். ஒவ்வொரு நாளும் ஓர் குறிப்பிட்ட அளவு நேரம் உங்கள் வீட்டை விற்பதற்கு தேவைப்படும் என்பதை மனதில் கொள்ளுங்கள்.

### வீட்டுரிமையாளர்களால் வீடு விற்கப்படும் போது குறைந்த விலைக்கு வாங்கலாம் என அனுமானிக்கும் வீட்டைவாங்குபவர்களின் எண்ணங்களுக்கு ஈடு கொடுப்பீர்களா?

ஒரு வீடு வீட்டு உரிமையாளரினால் விற்கும்போது சந்தை விலையை அறிந்து அறா விலை கேட்பவர்களிற்கு சரியான விளக்கம் கொடுத்து என்னால் விற்கமுடியுமாஎன தீர்மானியுங்கள். வீட்டை விற்கும் போது எதிர்நோக்கும் சவால்களுள் ஒன்று. வீட்டைக் குறைத்து மதிப்பிடுபவர்களுடன் ஒப்பந்தம்(Deal) செய்து கொள்வதாகும். இவ்வாறு குறைந்த விலைக்கு ஒப்பந்தம் செய்வது, புரோக்கர் கமிஷனைக் கொடுப்பதைவிட அதிகமானது.

### வீட்டை வாங்குபவருக்கு நிதி அல்லது வீட்டு ஈட்டுக் கடன் (Mortgage) தொடர்பான ஆலோசனைகளை நான் வழங்குகிறேனா?நிதி தொடர்பான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேனா?

ஒரு வீட்டையோ அல்லது வாகனத்தையோ விற்பதாயின், அதனை வாங்குபவருக்குத் தேவைப்படும் எல்லா தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.கடந்தமுறை நீங்கள் பெறுமதியான பொருளொன்றை கொள்வனவு செய்ததுபற்றி சிந்தியுங்கள். நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம், உங்கள் வீட்டை விரைவாகவும் இலாபகரமாகவும்விற்கும் சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துகிறீர்கள். ஓர் நிபுணத்துவம் வாய்ந்த வீடு விற்பனைப் பிரதிநிதியிடம், வீடு விற்பது, வாங்குவது தொடர்பான கடன் கொடுப்பவர்கள் முதல் சட்டத்தரணிகள் வரை உங்களுக்குத் தேவையானவர்கள் அடங்கிய ஓர் பூரணமான குழு இருக்கும்.

### ஓர் வீட்டை விற்பதற்குத் தேவைப்படும் அத்தியாவசியமான படிமுறைகள் மற்றும் சட்டரீதியான விளைவுகள் பற்றி நான் பூரணமாக அறிந்துள்ளேனா?

வீட்டை விற்பதற்கு தேவையான வேலைகளை(Paper works)பூரணமாக செய்தல், பூரணமான பரிசோதனைகள், உங்கள் மாநிலத்திற்குரிய சட்ட திட்டங்கட்கு உட்படல், வீட்டை விற்பதற்குத் தேவைப்படும் எல்லா படிமுறைகளையும் நீங்கள் பூரணமாக அறிவித்தல் போன்றவற்றைச் சரிவரச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய முடியவில்லையானால், இதில் நிபுணத்துவம் வாய்ந்த வீடு விற்பனைப் பிரதிநிதியை அணுகுதல் ஓர் புத்தியான தெரிவாகும்.

### ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு முன்போ அல்லது பின்போ ஏற்படும் பிணக்குகளைக் கையாளும் திறமை என்னிடம் இருக்கிறதா?

வீடு விற்றல், வாங்குதல் தொடர்பாக சட்டரீதியாக நீங்கள் பரிச்சயம் மிகுந்தவரா? வீடு வாங்குபவரிடம் ஏற்படும்

9ம் பக்கம் பார்க்க...


Search Your Dream Home www.brokerofrecord.info

Buying, Selling, Leasing

PROPERTY MAX®

Realty Inc. Brokerage


Residential, Commercial, Investment
Industrial And Rental



Mohan Subramaniyam
Broker Of Record
416-857-1780

Search Your Dream Home
@
www.powerofsaleproperty.com
OR Call
416-321-2300


One Source For Many Type Of Properties And Mortgages!



1+1 Bdrms Condo Apt with 1 Washroom, Demanding Area, Step To Ttc.




4 Bdrms, 3 Washrooms, Show Well, Very Well Maintained, Close To Most Facilities.



3+1 Bdrms, 1 Washroom, Freshley Painted, Larger Private Lot House for Lease.

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!

# போதுமென்ற மனமே...



கே. எஸ். பாலச்சந்திரன்

வேகத்தில் மிக அதிகமான சுப்பர்ஜெட் விமானங்களைவிட மிகுந்த வேகத்தில் செல்லக்கூடியதொன்று எம்மிடம் இருக்கிறது. அதுதான் மனோவேகம். நினைத்த மாத்திரத்தே எங்கள் ஊருக்குப் போய் எங்கள் கோவில் வீதியில் உலாவி விட்டு, அடுத்தவினாடியே ரஷ்யத்தலைநகரின் வீதிகளில் நடக்கும் தொழிலாளர் ஊர்வலத்தில் மனத்தால் கலந்து கொள்ள எங்களுக்கு முடிகிறது.

> "அந்தஸ்து, கௌரவம், சமூகக்கணிப்பு எல்லாம் அனாவசியக் கொள்வனவுகளால் கிடைக்கும் என்று நாம் நினைப்பது தவறு."

ஆனால் இந்த மனது இருக்கிறதே (அது எங்கே இருக்கிறது என்று என்னைக் கேட்காதீர்கள்)–அது எளிதில் திருப்தி அடையாதது என்று மட்டும் எனக்கு தெரியும். இலக்கு என்பது அடையும் வரைக்குந்தான். அடைந்தபின் அது ஒரு புள்ளிதான். மனம் இன்னும் மேலே ஒரு இலக்கை தேடிக் கொள்கிறது. பிறகு என்ன? அதை அடைவதற்காக போராட்டந்தான், விடாமுயற்சி தான்.

உயரம்பாயும் ஒலிம்பிக் வீரனின் இலக்கைப் போல அது மேலே, மேலே உயர்த்தி வைக்கப்படும். போராட்டம் தொடரும்.

அத்தோடு இந்த விளம்பர யுகத்தில், தினமும் எங்கள் பார்வையில் புதிது புதிதாக ஏதாவது பட்டுக்கொண்டேயிருக்கும். வீட்டில் ஒரு தொலைக்காட்டி ( டெலிவிஷனுக்கு பிரான்ஸ் நண்பர் ஒருவர் பாவித்திருக்கும் பெயர் - தொலைக்காட்சி அல்ல) தன்பாட்டில் யாரும் சீந்தாமல் இருக்கும் வீடுகளும் உண்டு.ஆனால் HDTVஎன்று விற்பனைக்கு வந்திருக்கிறது என்று விளம்பரம் வந்தவுடன் வாங்கிப்போட்டு விடுவார்கள். அதையும் சீந்தாமல் தூசி படிய விடத்தான் போகிறார்கள். ஆனால் எதற்காக வாங்கினார்கள்?மற்றவர்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபிக்கத்தான். இந்த ''மற்றவர்கள்'' பகையாளிகளோ, ஜென்ம வைரிகளோ அல்ல. சொந்த சகோதரர்களோ, சகோதரிகளாகவோ இருக்கலாம். அண்ணன் வீட்டில் இருப்பது, தங்கை வீட்டில் இருப்பது நம் வீட்டில் இருக்காவிட்டால் பிறகு எங்கள் மரியாதை என்னாவது? என்னே உயர்ந்த சிந்தனை ?

இப்படி வேண்டாத பொருட்களை வீம்புக்காக வாங்கிக் குவிக்கச் சொல்வது மனந்தான். (மனைவிதான் என்று நான் சொல்வேன் என்று நீங்கள் எதிர்பார்த்து ஏமாந்திருந்தால் அதற்கு நான்பொறுப்பல்ல. நான் எழுதிக்கொண்டிருப்பதை என் பின்னால் நின்று யாரோ வாசிப்பது தெரிந்தும் நான் அப்படிச் சொல்ல என்ன முட்டாளா?)

விளம்பரங்கள் என்றவுடன் அன்றொரு நாள் ஒரு நண்பரின் வாகனத்திற்கு சில அத்தியாவசிய சிகிச்சைகள் செய்வதற்காக (பிறேக் பார்த்து, ஒயில் மாற்ற) போயிருந்த இடத்தின் பெயர் பலகை என் ஞாபகத்திற்கு வருகின்றது. அந்த நிறுவனத்தின் பெயர் Midas. அந்தப்பெயரைப் பார்த்ததும் வழக்கம்போல என் மனம் கால இயந்திரத்தில் ஏறி பின்நோக்கி ஓடியது. கிரேக்க புராணக் கதைகளில் வரும் மன்னன் மிடாஸ்(Midas). அவனைப் பற்றிச் சொல்லும்போது அவன் தொட்டாலே பொன்னாக மாறிவிடும் அவனது சக்தியை Midas Touch என்று சொல்வார்கள். அதையே இந்த நிறுவனமும். தங்கள் வியாபார சுலோகமாக வைத்திருக்கிறார்கள். நல்லகாலமாக என் நண்பரின் கார் பொன்னாக ஒன்றும் மாறவில்லை. எல்லாம் இருந்தபடியே இருந்தது. இல்லையென்றால், பாலமுரளி கிருஷ்ணாவின் குரலில் ''தங்கரதம் வந்தது வீதியிலே'' என்று பாடிக்கொண்டு வந்திருப்போம். அத்தோடு, காரை Bank Lockerல் வைத்துப் பூட்ட வங்கி முகாமையாளரோடு வாதாட வேண்டி வந்திருக்கும். அப்படியெல்லாம் எங்களை திண்டாடவிடாமல் Midasகாரர் வெறும் ஒயிலை மாற்றி, பிறேக்கைப்பார்த்து அனுப்பிவிட்டார்கள்.

எங்கோ தொடங்கி எங்கோ போய்விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள். மீண்டும் மன்னன் மிடாஸிடம்(Midas)வருகிறேன். அவன் சகல சம்பத்துக்களுடனும் வாழ்ந்த அரசன். எல்லாம் (எல்லாம் என்றால் எல்லாம்தான்.) தாராளமாக கிடைத்தது. அப்பயும் அவன் மனம் திருப்திஅடையவில்லை. டயோனிசஸ் (Dionysus) என்று ஒரு கிரேக்கர்களின் சிறுதெய்வம் - அதுவும் திராட்சை ரசத்திற்கான (Vine) தெய்வம் (பார்த்தீர்களா.. அக்கால கிரேக்கர்கள் எவ்வளவு அதிஸ்டசாலிகள்..). இந்த டயோனிசஸ் தனக்கு உதவி- செய்த மிடாஸிடம் ''உனக்கு என்ன வேண்டுமோ கேள்'' என்று சொல்லவும், மன்னன் மிடாஸ் ''நல்ல திராட்சை மது ஆயுள் பூராவும் கிடைக்க வழி செய்யுங்கள்'' என்று கேட்டிருக்கலாம். அவன் என்ன கேட்டான் ?

தான் தொடுவதெல்லாம் பொன்னாக வேண்டுமென்று கேட்டான். அங்கேதான் பிரச்சினை ஆரம்பித்தது. தனக்கு கிடைத்த சக்தியை பரீட்சிக்க, மரத்தடியை, கல்லை என்றெல்லாம் தொட அவை பொன்னாகி விட்டதை கண்ட சந்தோசத்துடன் தனது மாளிகை திரும்பி, பெரிய விருந்து நடத்த உத்தரவு பிறப்பித்தான். எல்லாம் நடந்தது. ஆனால் தொட்டு எடுத்த மாத்திரத்தே உணவு, பழங்கள், பழரசங்கள் எல்லாம் பொன்னாகிப்போய்விட அவன் நிலை நித்திய பட்டினியாகிப் போய்விட்டது. கைக் கெட்டியது வாய்க்கெட்டாதது மாதிரி என் பார்களே. அந்தமாதிரி.

போதாக்குறைக்கு தன் அன்பு மகளை அணைக்க அவளும் பொற்சிலையானாள். வேதனைக்கு மேல் வேதனை. தாங்கமுடியாத மிடாஸ் தனக்கு அந்த சக்தியைக் கொடுத்த டயோனிஸ் இடம் ஓடிச்சென்றான். ''ஐயா.. ஆளை விடுங்கள்.. பொன்னும் வேண்டாம். ஒரு மண்ணும் வேண்டாம்'' என்று மன்றாடினான். மனம் இரங்கிய அந்த குறுந்தெய்வம் ஒரு ஆற்றில் கைகளைக் கழுவிக்கொள்ளச் சொல்ல அப்படியே செய்த மிடாஸ், இறுதியில் ஆற்றில் குதிக்க அது பொன்னாகமாறி இறுகிப்போக, இறந்து போனானாம்.

புராணமோ, கற்பனைக்கதையோ நாங்கள் கற்றுக்கொள்ளவேண்டியது இதில் உண்டு.

அந்தஸ்து, கௌரவம், சமூகக்கணிப்பு எல்லாம் அனாவசியக் கொள்வனவுகளால் கிடைக்கும் என்று நாம் நினைப்பது தவறு. சிலவேளைகளில் அனாவசியம் அத்தியாவசியத்துக்கே ஆபத்தை விளைவித்து விடும். நிம்மதியே குலைந்து போய் விடும்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று மிடாஸ் நினைத்திருந்தால் அவனுக்கு இது நிகழ்ந்திருக்குமா? நாங்களும் அவனைப்போல நடந்து கொள்ளலாமா ?

மனம் அங்கலாய்க்கிறது !

■ ■ ■

கனேடிய தமிழ் கலைஞர்கள் கழகம்
பாரதி கலைக்கோயில் வழங்கும்

கே. எஸ். பாலச்சந்திரனின்

" அண்ணை றைற் "

முதலான தனிநடிப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு
இறுவட்டு (CD) வெளியீட்டு விழா

திகதி மாற்றப்பட்டுள்ளது

October 7th 2007
சனிக்கிழமை
மாலை 5.30க்கு

இடம்: Scarborough Civic Centre
150 Borough Drive
(North-west corner of McCowan Road and Ellesmere Road)
Toronto, ON M1P 4N7

தொடர்புகளுக்கு: (416)529-2821, (416)457-8424, (416)400-6406, (416)520-9771, (416)893-0399



RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES

PAKEER
PAKERATHAN SAHADEVAN
Licensed Insurance Agent

வீடு வாங்க விற்க
Life Insurance (All kinds),
RESP/RRSP
Direct : 416.908.6003



Century 21
AFFILIATE REALTY INC.
BROKERAGE*
208-80 Corporate Drive,
Toronto, ON. M1H 3G5
Office : 416.290.1200



PAKEER
PAKERATHAN SAHADEVAN
Sales Representative

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்

## போரியல் அமைதி

இந்த ஆண்டுக்கான கோடையும் கோடையுடன் கூடிய குதூகலங்களும் நிறைவடைந்துவிட்ட நிலையில் எமக்கான எதிர்பார்ப்புகள் சில இன்னமும் எதிர்பார்ப்பு களாகவே உள்ளன. உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழர் பெரும்பாலோரது ஏக்கமும் எதிரபார்ப்பும் இவ்வேளை ஒன்றுதான்...

தாயகத்துத் துயரங்கள் என்று தீரும்?

கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணையகம், மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் வெளியிடும் அறிக்கைகள் புள்ளி விபரங்கள் என்பன அதிகரித்துச் செல்லும் தமிழர் படுகொலைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஆதரங்களோடு வெளியிடப்படும் அறிக்கைளைக் கூட, விடுதலைப்புலிகளிடம் கையூட்டுப் பெற்று வெளியிடப்படும் அறிக்கைகள் என எளிதாய்க் கூறிவிடுகின்றது ஸ்ரீலங்கா அரசு.

சகட்டுமேனிக்கு பூச்சி புழுக்களைப் போல் தமிழர்களைக் கொன்று குவிக்கிறது இந்த அரசு. தமிழன் கொல்லப்பட்டால் தட்டடிக் கேட்க பூமியில் எவருமில்லை எனற துணிவை அளவுக்கு அதிகமாகவே கொண்டிருக்கிறது மகிந்த அரசு.

தமிழர்கள் மீதான மகிந்த அரசின் கொடுமைகள் தங்குதடையின்றித் தொடர, வகை தொகையின்றி கொன்றொழிக்கப்படுகின்றனர் தமிழர்கள். இக் கொடுமைகளைத் தட்டிக் கேட்க நாதியற்றுக் கிடக்கிறது அனைத்துலகம்.

இதுவரை காலமும் இல்லாத போரியல் பேரமைதியை விடுதலைப் புலிகள் கடைப் பிடிப்பதாக சில ஆய்வாளர் கருதுகின்றனர். சமாதானம் பற்றிய எந்த முன்னெடுப்பும் இல்லாமல், முனைப்பான போரியல் முன்னெடுப்புகள் எதுவும் இல்லாமல் ஆழமான ஒரு அமைதியை புலிகள் உருவாக்கி உலாவ விட்டுள்ளனர்.

"இந்த அமைதி கூட போரியல் ஆயுதமே" எனக் கூறிய சில ஆய்வாளர்கள் விளக் கங்களையும் கூறியுள்ளனர்.

"இது இயல்பான அமைதி அல்ல. உருவாக்கப்பட்ட அமைதி. இந்த அமைதி மகிந்த அரசுக்குள் ஏகப்பட்ட கற்பனைகளை உருவாக்கி அவர்கள் பலத்தை உருக்குலைத் துக் கொண்டிருக்கின்றது. யுத்தம் இன்றோ நாளையோ என்றறியாமல் ஒவ்வொரு கணமும் பதைபதைத்துக் கொண்டிருக்கும் படையி-னர் போர் எதுவும் இன்றியே தம் போரியல் வலுவை இழந்து செல்கின்றனர். யுத்தம் ஒன்று வருகின்ற வேளை விடுதலைப்புலிகளுக்கு இது மிகச் சாதகமாக இருக்கும்."

இவ்வாறு சில விளக்ககங்கள் கூறப்பட்டுள்ளன.

இதேவேளை போரியலுக்குப் பின்னான ஈழத்தின் இருப்பை வலுப்படுத்தும் நோக் கோடு சில குறிப்பிட்ட நாடுகளுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தும் செயற்பாடு கள் முனைப்பாக முன்னெடுக்கப்படுவதாகவும் சில செய்திகள் உலாவுகின்றன.

இந்த போரியல் அமைதிக்கு மற்றுமொரு காரணமும் சுட்டிக் காட்டப்படுகின்றது. பேச்சு மூச்சின்றிக் கிடக்கும் சமாதான செயற்பாட்டுக்கு ஏதேனும் ஒருவகையில் உயிரூட்ட முடியுமா என்ற இணைத்தலைமை நாடுகளின் நப்பாசையை ஒப்புக்கு நிறைவேற்ற மகிந்த அரசு ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்க முயல்கிறது. சமாதானத் தீர்வு சாத்தியமா இல்லையா என்ற முடிவுக்கு இந்த உலகநாடுகள் வருவதற்கு இத் தீர்வுத் திட்டம் முக்கியமானதொன்றாக இருக்கிறது. தமிழர்களிக் அபிலாசைகளில் குறைந்தளவு வீதத்தைச்கூட நிறைவேற்ற இயலாதாக அமையப்போகும் இந்தத் தீர்வுத் திட்டமே உலகநாடுகளுக்கும் சிங்கள அரசுக்கும் விடுதலைப்புலிகள் கொடுக் கின்ற இறுதி வாய்ப்பாக இருக்கும். ஆதாலால் மகிந்தாவின் தீர்வுப் பொதிக்கான ஒரு காத்திருப்பாகவும் இந்த அமைதிச் சூழல் அமைவாதாகவும் சிலர் கருதுகின்றனர்.

போரிடுவதற்கு பொருத்தமாக காலநிலை மிக அவசியதானதாகும். மூன்று வாரங் களுக்கு முன்பு கோத்தபாய ராஜபக்ச பலாலியில் நடத்திய கூட்டத்தின் முக்கிய நோக்கம் மழைக்காலத்திற்கு முன்பு தாக்குதல்களை எப்படி நடத்துவது என்பதுதான். கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் பெற்ற வெற்றிகளில் பெரும்பாலானவை மழைக்காலமாகிய அக்டோபர் நவம்பர் மாதங்களில் பெறப்பட்டவையே.

இனி நடக்கப்போகும் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் வெற்றியைப் பெறுவதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்துவதற்கான பொருத்தமான ஒரு காலத்தைக் கருத்திற்கொண்டு அதை நோக்கிக் காத்திருக்கின்றார்களா?.

காத்திருக்கின்றனர்.

இந்த போரியல் அமைதி இலக்கை நோக்கிய ஒரு இராஜ தந்திர நகர்வா?. தேவையற்ற வினாக்களால் நம்மை நாமே குழப்புவதற்கல்ல..

■ ■ ■

# புரிந்துணர்வைப் புரிந்து...

3ம் பக்கத் தொடர்ச்சி...

கேள்விக்குறி. கருணா குழுவினரால் அதைச் செய்யும் வல்லமை உண்டா என்றால் அது வும் ஒரு மிகப் பெரியதொரு கேள்விக்குறி.

இந்நிலையில் தமிழ் மக்களது எதிர்பார்ப்பு எப்படியிருக்கும். புலிகள் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களை மீட்டெடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பே பலரிடமும் இருக்கிறது. ஆனால் கிழக்கு மாகாண மக்களது உடன டியான மனநிலை அப்படியில்லை என்பதே எனது கருத்து. இதற்கான ஒரு தீர்வாக அம் மாகாண மக்களது பெரு விருப்பாக இருக்கக்கூடிய ஒன்று மீண்டும் தமிழர்தரப்பு ஒற்றுமையாக நின்று ஒரு நிரந்தரமான தீர் வைத் தமக்குப் பெற்றுத்தரவேண்டும் என் பதே. உணர்வுகளின் மேலீட்டால் நாம் இப் போது சொல்லிக்கொள்ள முடிவது – அது சாத்தியமாகாது என்பதே. ஆனால் அதற் கான முயற்சிகளில் இறங்கவேண்டிய தேவை இப்போது மிகவும் அவசியமாக விருக்கிறது என்பதையே நான் சென்ற இதழில் கோடிட்டுக் காட்டினேன்.

கருணாவுடன் எம்.ஓ.யு. என்பது மேலோட்ட மான பூடகமான ஒரு சொற்பதமென்பதை இதயங்களினாற் சிந்திப்பவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அதை நான் எதிர்பார்க் கவுமில்லை. ஆனால் அப்பதத்தின் பின்ன ணியில் தொக்கி நிற்கும் விவாதத்திற்கான தேவையை தர்க்கரீதியாகச் சிந்திப்பவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். புரிந்துணர்வு என்-பது இதய சுத்தியான ஒரு விடயமானாலும் தற்போது அது ஒரு தந்திரோபாய அரசியல் பதமாகவே பாவிக்கப்படுகிறது. எதிரியுடன் பேச்சுவார்தைக்கான தளத்தைப் பண்படுத் துவதில் இச்செயல் முக்கியமானது. இன்னு மொரு தளத்தில் தற்காலிக இடைவேளை பெற்றுக்கொள்வதிலும் இது நிரம்ப உதவி செய்கிறது. எதிரியை ஊடறுத்துப் பலவீன மாக்குவதிலும் இது பயன்படுகிறது. புலிகள் இந்தப் புரிந்துணர்வைத் தமக்குச் சாதகமா கப் பலதடவைகள் பயன்படுத்தியிருக்கிறார் கள். இப் பின்னணியில், சென்ற இதழில் நான் சொன்ன எம்.ஓ.யு. வைப் புலிகள் சாதகமாக்கினால் கிழக்கை அரசியல் ரீதி யாக வென்றெடுக்க அது ஒரு வழி. அதன் பிறகு இராணுவ வெற்றியை அவர்கள் நிச்ச யித்துக் கொள்வார்கள். வரியிடை வாசிப் பில் பரிச்சயமானவர்களுக்கு என் கருத்தின் பின்னணி புரிந்திருக்கும். புரியாதவர்கள் தத் தம் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப சம்பலை அரைத்துக்கொண்டுதானிருப்பார்கள்.

விடுதலைப் புலிகளின் செயற்பாட்டினைப் புரிந்து கொண்டவர்களுக்கு ஒரு விடயம் நன்றாகவே புரிந்திருக்கும். தேவையேற் படின் அவர்கள் யாரோடும் பேசுவார்கள். யாரோடும் போர் புரிவார்கள். அது அவர் களது போரியல் தந்திரம். அச் செயற்பாடு களின் வெற்றி தோல்விகளுக்கும் அவர் களே பொறுப்பாளிகள். உணர்வு மேலீட்டால் அதைச் செய்வதில்லை என்பதில் எனக்கு மிகவும் உடன்பாடு இருக்கிறது. இல்லாவி-டில் ஈழப்போர்களின் எண்ணிக்கை இப் போது இருபதைத் தாண்டியிருக்கும்.

பேச்சுவார்த்தைகள் எதிரிகளைப் பலமிழக் கச் செய்வதற்கும் பயன்படலாமென்பதை மனதிற்கொண்டு பார்ப்பின் புரிந்துணர்வைப் புரிந்து கொள்வதில் சிரமமேயிருக்க முடி யாது. இதற்கு மேல் அரைப்பவர்களுக்கு அம்மிதான் மிஞ்சும்.

Finch & Warden

**Tridel Build Condo for Sale**

1500 sq ft, 3Bed Room,
2Full Wash Room.

**$ 169,900**

**Selva**

**647-208 6222**

**Publisher & Editor :** P.J. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர் : பி.ஜே. டிலிப்குமார்

ஆலோசகர் குழு : ஞானம் லம்பேட், மாமூலன், பொன்னையா விவேகானந்தன், ரதன், சுந்தர் சின்னத்தம்பி.

தட்டச்சு : கௌரி, கௌசலா, ஜீவா.

ஒப்புநோக்கல் : சாவையம்பதி சுப்ரமணியம், கௌரி.

வரைகலை ஆலோசனை : கருணா (டிஜி வரைகலை அமையம்)

தொடர்புகள்:
**For More Info :** Editor
P.O.Box #63581
Woodside Squarew
1571 Sandhurast Circ.
Toronto, ON. M1V 1V0

**Montréal** விநியோகம் : சு. சின்னையா
1-514-299-3186

Tel: 416-646-3422, 416.400.6406
Fax: 416.849.0594
Web: www.veedunews.com
e-mail: thaiveedu@gmail.com

பெயர் தோற்றாத கட்டுரைகளுக்கு ஆசிரியரே பொறுப்பு. கனடியத் தமிழ் வானொலியில் ஒலிபரப்பாகி பின்னர் எமக்குத் தரப்பட்ட விளம்பரங்கள் இலவசமாகப் பிரசுரமாகின்றன. அவற்றின் சரிபிழைகளுக்கு தாய்வீடு பொறுப்பல்ல. ஏனைய விளம்பரங்கள் இலவசமல்ல. ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியோரே பொறுப்பு.

* Some Condition May Apply

வீடு, வியாபார நிலையங்கள் **வாங்க விற்க**



Sales Representative

ஞானேந்திரன் நரசிங்கம்

CELL: 416.937.8090



Sales Representative

ஜூடி ஞானேந்திரன்

CELL: 416.629.9797

HOMELIFE HIGHER STANDARDS

OFFICE: 416.321.6969

**RESIDENCIAL PROPERTIES**



NEW TRIDEL BUILDING
Kennedy & Hwy 401

Phase 2: Only 10% Down *
Phase 1: 80% Sold Out

NEW LISTING — VICTORIAPARK & EGLINTON — $145,000 — 2 Bedroom Condo with 2 Washroom

FOR LEASE — DOWNTOWN — $2300 — 2 Bedroom Condo with 2 Full Washrooms Including One Parking

FOR LEASE — DOWNTOWN — $1600 — One Bedroom plus den with one parking

FOR LEASE — DOWNTOWN — $1400 — One bedroom plus den without parking

**COMMERCIAL PROPERTIES**

New Plaza
Markham & Steel
Only 21 Units are Available
Restaurants and Retail Units

Call JUDY For further detail

NEW LISTING — COMMERCIAL SPACE FOR LEASE IN PRIME SCARBOROUGH AREA — Call GNANI
* 4 units each of 1650 sq ft
* Zoning for many commercial uses
* Ideal for warehousing retail mfg.

Call GNANI for further detail

NEW LISTING — FULL EQUIPED AUTO BODY SHOP AVAILABLE IN SCARBOROUGH AREA — Call GNANI
* Front and rear truck level door entry

Call GNANI for further detail

1 Year* HOME WARRANTY

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3
*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED




MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage

- No Money Down Programs
- Credit பிரச்சிளை உள்ளவர்கள் Credit இல்லாதவர்கள்
  Late Payment, Bankruptcy and R9's - No Problem
- புதிய குடிவரவாளர்களுக்கும், சுய தொழில் வாய்ப்புள்ளவர்களுக்கும் Mortgage ஒழுங்குகள் செய்து தரப்படும்
- New Mortgages, Refinances, Switches - (Switch for free) & Pre - Approval
- தமிழில் இலவச ஆலோசனைகள், கடைசி நிமிடக் கட்டணம் இல்லை
- Fast Approvals & Closings
- 45 வங்கிகளிடமிருந்து குறைந்த வட்டி வீதம் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்களது வீட்டுக்கே வந்து Mortgage செய்து தரப்படும்
- உங்கள் திருப்தியே எங்கள் வெற்றி

digi Media Creations - 416.467.4952

**MORTGAGE**
**MORTGAGE**
**MORTGAGE**

ராம் கிருஷ்
**RAM KRISH**
Senior Mortgage Consultant
The Mortgage Alliance company of Canada
Head Office: 2005 Sheppard Ave. E, Suite 200,
Toronto, ON M2J 5B4
Phone: 416.499.5454, Fax: 416.499.8366



**TEL: 416.526.4996**

NATIONAL BANK OF CANADA · BRIDGEWATER financial services ltd. · FirstLine MORTGAGES · Scotiabank™ · FIRST NATIONAL FINANCIAL CORPORATION · TD · cervus FINANCIAL CORP. · BMO

# வீடு விற்பவர்களின்...

5ம் பக்கத் தொடர்ச்சி...

பிணக்குகளைக் கையாளத் தயாராக இருக்கிறீர்களா? என உங்களை நீங் களே கேட்டுக் கொள்ளுங்கள்.எந்த ஒரு பிணக்குகளையும் தவிர்த்துக் கொள்வ தற்கு, எல்லா பேச்சு வார்த்தைகளையும் ஒப்பந்தங்களையும் எழுத்தில் இடுவது புத்தியானதாகும். அநேகமான வீடு விற்ப னைகளின் போது மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டமையாலேயே இவை சிக்க லான நிலைக்குத் தள்ளப்பட்டன.

### அத்தியாவசியமான நிபுணத்துவம் பெற்றவர்களை (சட்டத்தரணிகள், பரிசோதகர் (வீடு மற்றும் பூச்சி பரி சோதகர்), ஆகியோரை தொடர்பு கொண்டேனா?

முன்னணியிலுள்ள பரிசோதகர்கள், நிதி ஆலோசனை கம்பனிகளுடன் பரிச்சய முண்டா? வீட்டு பரிசோதகர், சட்டத் தரணிகள் மற்றும் பிரதிநிதிகளை மேலெ முந்தவாறாக தெரிவு செய்ய வேண்டாம். எந்த ஒரு தொழிலிலும் உள்ளது போல், உங்கள் பரிமாற்றங்களை மெதுவாக்கி, தாமதிக்கச்செய்வதுடன், அதிக செலவை ஏற்படுத்துபவர்களும் இருக்கிறார்கள்.

### வீடு பார்ப்பது போல் வரும் திருடர் களிடமிருந்து எனது சொத்தினை பாதுகாக்க முடியுமா?

திருடர்களில் பல வகை இருக்கிறார்கள். அவர்கள் வீட்டு சொந்தக்காரர்களினால் வீடு விற்கப்படும் பொழுது பலர் ஒன்றாக சேர்ந்து வருவார்கள். வந்து வீட்டு உரிமையாளரிடம் ஒருவர் கதை கொடுத் துக்கொண்டிருக்க மற்றவர்கள் பெறுமதி மிக்க சிறிய பொருட்களை களவாடி விடு வார்களாம். அல்லது வீட்டை நோட்டம் விட்டு விட்டு பிறிதொரு சந்தர்ப்பத்தில் களவாடிக் கொள்வார்களாம்.

## உங்கள் வீட்டினை விற்கும்போது நீங்கள் செய்யக் கூடாத தவறுகள் ஆறு

### தவறு 1: உங்கள் வீட்டின் விலையை அதிகமாக்குதல்

ஒவ்வொரு விற்பனையாளரும் தமது வீட் டிற்கு அதிக பணத்தைப் பெறவே விரும் புவார்கள். அதிக விலைக்கு உங்கள் பொருளை பட்டியல் படுத்தாது சந்தை விலைக்கு விற்க நினைப்பதே சிறந்த வழி யாகும். அதிக விலைக்கு பட்டியல்படுத்தும் போது, வீட்டை வாங்கக் கூடியவர்கள் கூட உங்கள் வீட்டினைப் பார்ப்பதற்கு முன்னரே வாங்க வேண்டுமென்ற ஆர்வத்தை இழந்து விடுவார்கள். அத்துடன் ஏனையோர், உங் கள் விலையைக் குறைக்க வேண்டுமென எதிர்பார்ப்பார்கள். இதன் விளைவாக மேல திகமாக விலை குறிப்பிடப்படும் சொத்துக் கள், விற்கப்படுவதற்கு, அசாதாரணமான நீண்ட காலம் எடுக்கும். அத்துடன் இறுதி யில் இவற்றை மிகக் குறைந்த விலைக்கும் விற்க நேரிடும்.

### தவறு 2: மீள் -நிதி (Refinancing) மதிப்பீட்டை சந்தை விலையாக தவறாக எண்ணுதல்

துரதிஷ்டவசமாக, ஓர் மீள்நிதி மதிப்பீடா னது (Re–finance appraisal) உண்மையற்ற விதமாக உயர் விலையில் கூறப்படலாம். பொதுவாக, கடன் வழங்குபவர்கள் (lenders),உங்கள் சொத்தின் பெறுமதியை மீள்- நிதிப்படுத்தலை ஊக்குவிக்குமுகமாக அதன் உண்மையான பெறுமதியை விட அதிகமாக மதிப்பிட்டுக் காட்டுவர். உங் கள் வீட்டின் சந்தைப்பெறுமானம் உண்மை யில் குறைவாக இருக்கலாம். உங்கள் வீடு விற்பனைப் பிரதிநிதியிடம், உங்கள் சமூகத் தில் சொத்து விற்பனை தொடர்பான மிக அண்மைய தகவல்களை பெறுதல் முக்கிய மானதாகும். இது உங்கள் வீட்டின் காலத் திற்கேற்ற சரியான பெறுமதியைத் தரும்.

### தவறு 3: உங்கள் வீட்டை அலங்காரப்படுத்தாதிருத்தல்

இதற்குக் கூடிய கவனம் செலுத்த வேண்டு மெனக் கூறப்படுகின்ற போதிலும், இன்ன மும் இந்த விடயத்தில் தவறிழைப்பவர் களாகவே காணப்படுகின்றார்கள். விற்பதற் காக உங்கள் வீட்டை திறந்து விடும் போது வாங்கக் கூடியவர்களைக் கவரக் கூடியதாக உங்கள் வீடு அமைவது அவ சியமானதாகும். வீட்டில் செய்ய வேண்டிய அவசியமான திருத்தங்களைச் செய்வது டன், வீட்டினைச் சுத்தமானதாகப் பேணுங் கள். வீட்டிலுள்ள எல்லா உபகரணங்களும் சரியான முறையில் வேலை செய்கின்ற னவா என்பதை உறுதிசெய்யுங்கள். திருத் தங்கள் செய்ய வேண்டிய நிலையில் வீடு காணப்பட்டால், இது வீட்டின் விற்பனை விலையைக் கட்டாயமாகக் குறைக்கும் என் பதுடன், வீடு விற்பனையாகாது இருக்கும் நிலையையும் உருவாக்கும்.

### தவறு 4: வீட்டைக் காட்டும் போதே வீட்டை விற்பதற்காக விளம்பரம் செய்தல்

வீட்டைவாங்குதல் எப்போதும் ஓர் உணர்வு பூர்வமானதும் கடினமானதுமான தீர்மான மாகும். இதன் விளைவாக, உங்கள் சொத் துடமையை ஆறுதலாகவும் சௌகரியமான தாகவும் பரிசோதிப்பதற்கு வீட்டை வாங்கக் கூடியவர்களை அனுமதிக்க முயற்சி செய்ய வேண்டும். வீட்டைப் பார்க்க வருபவர்களி டம் வற்புறுத்தலாப விளம்பரம் செய்து விற்க முயல வேண்டாம்.இதற்குப் பதிலாக, நட்புடனும் விருந்தோம்பலுடனும் பழகுங் கள். வீட்டிலுள்ள எந்த ஒரு சிறிய வசதி கள் பற்றியும் கலந்துரையாடி, அவர்களது வினாக்களுக்கு திறந்த மனதுடன் உரையா டுங்கள்.

### தவறு 5: வெறும்பார்வையாளருக்கு (Looky – Loos) விற்க முயலுதல்.

"விற்பனைக்காக" என்ற பெயர்ப்பலகையை பார்த்ததினால், ஆர்வம் காட்டும் ஒருவர் உங்கள் வீட்டை வாங்குவதில் ஆர்வம் காட்டுவார் என்று கூற முடியாது. ஓர் வீடு விற்பனைப் பிரதிநிதியினூடாக, வீடு வாங்க எண்ணாதவர்கள், வீட்டை 6 தொடக்கம் 9 மாதங்களுக்குப் பின்னரே வாங்குவார்கள். அத்துடன் இவர்கள், வீட்டில் என்ன இருக் கிறது என்பதைப் பார்ப்பதற்கு ஆர்வம் காட்டுவார்களே ஒழிய, வாங்குவதில் உண் மையான ஆர்வம் காட்ட மாட்டார்கள். வீட்டை விற்பவர்களாயின், இன்னும் தங் கள் வீட்டை விற்பது பற்றிய உறுதியான தீர்மானத்திற்கு வராதவர்களாகவோ அல் லது வீட்டை வாங்க நினைப்பவர்களாயின் ஓர் வீட்டை வாங்குவதற்கு இயலாதவர்க ளாகவே இருப்பார்கள். அத்துடன் வேறு இடத்திற்குச் செல்வது பற்றிய உறுதியான தீர்மானம் எடுக்க முடியாதவர்களாகக் கூட இருப்பார்கள்.

உங்களது வீடு விற்பனைப் பிரதிநிதி, உண் மையான வீடுவாங்குபவர்களுக்கும் வெறும் பார்வையாளர்களுக்கும் இடையே வேறு பாட்டைக் கண்டறிபவராக இருத்தல் வேண் டும். வீடு விற்பனைப் பிரதிநிதிகள் பொது வாக, வீடு வாங்குபவரின் சேமிப்பு, கடன் அளவீடு (Credit rating), வாங்கக் கூடிய தன்மை என்பவற்றைக் கண்டறிய வேண் டும். உங்கள் வீடு விற்பனைப் பிரதிநிதி, இந்த முக்கியமான தகவல்களைக் கண்ட றியத் தவறினால், நீங்களாகக் கண்டறிய வேண்டும். இதன் மூலம் தவறான மக்களி டம் சந்தைப்படுத்துவதால் உங்கள் பெறும தியான நேரம் வீணாவதை தவிர்க்க உங்க ளுக்கு உதவும்.

### தவறு 6: உங்கள் உரிமைகளையும் பொறுப்புக்களையும் அறியாதிருத்தல்

உங்கள் வீடு விற்பனை ஒப்பந்தத்தின் தகவல்களைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் முக்கியமானதாகும். வீடு விற்பனை ஒப்பந் தங்கள் சட்டரீதியாகக் கட்டுப்பட்ட ஆவ ணங்களாகும்.இவை எப்போதும் சிக்கலான வையாகவும் குழப்பமானவையாகவும் காண ப்படும்.உங்கள் ஒப்பந்தத்தில் உள்ள பதங் களை அறியாதிருத்தலினால், பழுதுபார்த் தல் மற்றும் பரிசோதித்தலுக்காக ஆயிரக் கணக்கில் செலவுகளை ஏற்படுத்தும். ஒப்பந்தத்தில் கையெழுத்திட முன்பாக, நீங் கள் எதற்குப் பொறுப்பானவர்கள் என்பதை அறியுங்கள். இருக்கின்றவாறே சொத்தினை விற்க முடியுமா?உறுதிகளில் உள்ள கட்டுப் பாடுகள் (Deed restriction), பிரதேச சட்டங் கள் என்பன உங்கள் கொடுக்கல் வாங்கல் களைப் பாதிக்கும். இந்த வகையான வினாக்களுக்கான விடைகள் தெரியாமல் இருந்தால்,வீடு விற்றல் வாங்கலின் போது, கணிசமானளவு பணத்தை நீங்கள் அனாவ சியமாக செலவு செய்ய வேண்டி ஏற்படும்.

மேற்குறிப்பிட்ட கேள்விகளை நீங்களே உங்களிற்குள் கேட்டு அதற்குரிய தகுதி உங்களிற்கு இருந்தால் மட்டுமே முயற்சி செய்யுங்கள். இல்லாதுவிடின் ஓர் சிறந்த விற்பனை பிரதிநிதியை பிடித்து உங்கள் வீட்டினை விற்பதே சிறந்த வழி.

■ ■ ■

## இம் மாதத்திற்குரிய முக்கிய குறிப்புக்கள்

செப்ரெம்பர் குறிப்புக்கள்

- செப்டம்பர் 3ஆம் திகதி Labor day அன்று உல்லாசப் பிரயாணம் செல்வதன் மூலம் அல்லது BBQ வுடன் கோடைகாலத்திற்கு விடை கொடுங்கள்.
- கோடைகாலத்தில் வெளியே அமர்வதற்குப் பயன்படுத்தும் தளபாடங் களை பாதுகாப்பான இடத்தில் பத்திரப்படுத்துங்கள்.
- கோடைகாலத்திற்குரிய ஆடைகளை பாதுகாப்பாக சேமித்து வையுங் கள்.
- லினன் (Linen) படுக்கை விரிப்புகளுக்குப் பதிலாக கம்பளி (Flannel) படுக்கை விரிப்புக்களை விரியுங்கள்.
- கனலடுப்பில் (Oven) வைத்துப் பயன்படுத்திய பாத்திரங்களை சுத்திகரி யுங்கள். இவற்றை சுத்திகரிக்க முடியாவிடின், புதிய பாத்திரங்களைப் பயன்படுத்துங்கள்.
- சுத்தமான ஈரமான துணியால் துடைப்பதன் மூலம் உங்கள் சலவை இயந்திரத்தின் உட்பகுதியை சுத்தப்படுத்துங்கள்.பின்னர் வெப்பமான நீரை இட்டு சிறிதளவு நேரத்திற்கு இயந்திரத்தை இயக்குங்கள். சில சலவை இயந்திரங்களிற்கு வெளிறச் செய்யும் தூள் (Bleaching powder) இட்டு தூய்மை செய்ய வேண்டியதாயிருக்கும்.
- துணிகளைக் காயவைக்கும் இயந்திரத்தின் துவாரங்களுள் துணிகளின் நூல் மற்றும் ஏனைய தடைகள் காணப்படுகின்றதா என்பதை அவதா னித்து அகற்றுங்கள்.
- வெப்பமேற்றல், காற்றூட்டல், வளிசீராக்கல் (Heating, Ventilation and Air conditioning (HVAC) போன்றவற்றுக்காக பயன்படும் குழாய்களின் வடிகட்டியை உற்பத்தியாளரின்படி, சுத்திகரிப்பதன் மூலம், வளியில் காணப்படும் அழுக்குகள் வீட்டினுள் சுற்றோட்டத்திற்கு உட்படுவதைத் தடுக்க முடியும்.
- வீட்டின் உட்புற தளத்தின் பலகைகள் (Base boards), சுவர்கள், தளபா- டங்கள் என்பவற்றின் தூசுகளை அகற்றுங்கள்.
- இலையுதிர்காலத்திற்குரிய தாவரங்களை நடுவதற்கு உங்கள் தோட்டத் தைத் தயார்ப்படுத்துங்கள். தோட்ட மண்ணின் 3 தொடக்கம் 6 அங்குல மேற்பரப்பை கிளறி விடுங்கள். சிறிது காலத்திற்கு ஒவ்வொரு நாளும் நீர் விடுங்கள். அத்துடன் களைகள் காணப்பட்டால் அகற்றி விடுங்கள்.


ROYAL SHUTTERS & BLINDS INC.
DIRECT FROM MANUFACTURER
Everything Factory Direct Prices

உங்கள் இல்லத்தின் உட்புறத்திற்கு ஏற்றவகையில் யன்னல்களை மறைப்புச் செய்திடவும் அழகு படுத்திடவும் நாடுங்கள்



Sales - Service - Installations

Custom Made

| Wood & Vinyl Shutters | Blinds | Draperies |
|---|---|---|
| California Style Shutters | Vertical Blinds | Swags |
| Plantation Style Shutters | Venetian Blinds | Sheers |
| Traditional Style Shutters | Wood Blinds | Valance |
| Arches | Bamboo Shades | Curtains |
| (We Do Any Colour Of Paint & Stain) | Roller Shades | And More |
| | And More | |

Workmanship Guaranteed
Free Shop At Home
CALL FOR A FREE ESTIMATE:



தாஸ் Thaas Sivathason
13 Years of Experience in Shutter Business
Tel: (416) 562-0340
Full Satisfaction Guaranteed

# Buying or Selling Business / Property...

## UP TO $ 250,000 SMALL BUSINESS LOAN CAN BE ARRANGED

ROYAL LePAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED



**St.Catharine**

Hotel & Motel
2 Properties being sold as one
Combined income from 105 rooms are $848K.


**$ 2.95 Million**



**Aurora**

Convenience store for sale
Location ! Location !
Established Business

**$ 199,000**



**Toronto**

Potential Party hall/Restaurant
Property for sale
Good Location

**$ 340,000**





**Toronto**

Property for Sale
Automotive Business
Used Cars Sales Place
Good Location

**$ 300,000**





**Mississauga**

Screw Machine Shop
Established Over 10 years
Good for owner/Operator

**$ 100,000**



**Toronto**

22 Years in Business
Great Restaurant/ Bar
Sales over 1 Million

**$ 350,000**




**North of Toronto**

15 Acres Land with Motel & Restaurant
Established Business

**$ 1.3 Million**



**Barrie**

Pizzaville Restaurant
Good Price!
Good Location

**$ 175,000**

**Chandran Sornalingam**
Real Estate Broker
**Cell: 416-722-1654**
**Bus: 416-284-4751 (24 Hrs.)**

**Call for Complementary Market Evaluation & Professional Advice of your business or property**







வீடு வாங்க விற்க மற்றும் வீட்டுக்கான கடன் உதவி பெற அழையுங்கள்


**CEYLINGO FINANCIAL GROUP.**

**416.430.0111**

2929 Lawrence ave east, suite 203
Scarborough, ON M1P 2S8



**Siva Ratnasingam**
Mortgage Consultant
**416.430.0111**



**Karuna Gobalapillai**
Mortgage Consultant
**416.430.0111**

invis

digi Media Creations - 416.467.4952

# வீடு - வினாவும் விடையும்.



கருணா கோபாலபிள்ளை
- வீடு விற்பனைப் பிரதிநிதி -

தரத்துடன்கூடிய சுவையான தகவல்களைத் திரட்டிவளரும் வீடு பத்திரிகை மூலம் எமது உறவுகளைச் சந்திப்பதில் திருப்தி. கோடை கால விடுமுறை களிப்புக்கள்யாவும் கழிந்த நிலையில், Back to school களேபரத்தில் நாமும் இணைந்துகொள்வோம்.

கடந்துவந்த இதழ்களில் வழங்கிவந்த தகவல்களின் முன் மாதிரியால், பலரது விருப்புக்கிணங்க இம்முறை நேயர்களின் கேள்விகளுக்கு விடைகாண முயல்கிறேன். பலர் பத்திரிகைக்கு அனுப்பிய கேள்விகளில் மிக அவசியமானதெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கேள்விகளையும் அதற்கான விளக்கங்களையும் பார்ப்போம்.

● **ஆயுள் காப்புறுதி வைத்திருக்கும் நான், வீடு வாங்கும்போதும் காப்புறுதி வாங்க வேண்டுமா? அவ்வாறாயின் எது தகுந்த தருணம்?**

நாகநாதி வைத்திலிங்கம்
மார்க்கம்.

காப்புறுதி என்பது எமது உயிருக்கோ உடைமைகளுக்கோ சேதம் ஏற்படும் வேளைகளில் இழப்புக்களைச் சீர்செய்வதற்காக நாம் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் ஒப்பந்தமே. பொதுவாக நாங்கள் மூன்று விதமான காப்புறுதிகளைத் தினம் பார்க்கின்றோம். ஒன்று ஆயட் காப்புறுதி. மற்றையது வாகனங்களுக்குரிய காப்புறுதி.மூன்றாவது வீட்டுக் காப்புறுதி. இவை தவிர்த்து இன்னும் பல உண்டு. வீட்டுக் காப்புறுதி எனும்போது இதனை fire Insurance என்றும் அழைப்பார்கள். அதாவது, வீட்டுக்கோ அல்லது வீட்டிலுள்ள உடைமைகளுக்கோ ஏதாவது சேதம் ஏற்படும்போது மீளமைப்புக்குப் பயன்படும். இதற்கும் மற்றயை காப்புறுதிகளுக்கும் சம்பந்தம் இல்லை. மாறாக, வீடு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் கண்டிப்பாக வீட்டுக் காப்புறுதி வைத்திருக்க வேண்டும் என்கிறார்கள் நிதி வழங்கும் நிறவனத்தினர். ஒருவர் வீடு வாங்கும்போது fire insurance முதலாவது முக்கிய விடயமாக கருதப்படுகின்றது.

● **Furnace பராமரிப்பு மற்றும் கடைter மாற்றுதல்சம்பந்தமாக வரையறைகள் உள்ளனவா?**

கணபதிப்பிள்ளை சுரேந்திரகுமார்
ஸ்கார்பரோ

ஆம். Furnace எனப்படும் சூடேற்றிகள் அநேகமாக இயற்கைவாயுக்களால் இயங்க வைக்கப்படுகின்றன. மோட்டார் வாகனங்களுக்கு tune-up செய்வதன் மூலம் எரிபொருள் மீதப்படுத்தப்படுவதுபோல் வீட்டிலுள்ள furnace களையும் வருடாந்தம் tune - up செய்வது நல்லமுறை.இப்போது நடைமுறையிலுள்ள High Effect Furnaceகள் எரிபொருள் சிக்கனம் உடையவை. உங்கள் பணத்தைக் கணிசமான அளவு மீதப்படுத்தலாம்.Furnace filterகள் மாதாந்தம் மாற்றப்பட வேண்டும். வீட்டிற்குள் இருக்கும் காற்றினை சுழற்சி முறையில் கொண்டுவரும் போது, வளியிலுள்ள மாசுக்களை இவை தக்கவைத்துக் கொள்ளும். மாதாந்தம் மாற்றுவதன் மூலமோ அல்லது கழுவிப் பாவிப்பதற்குரிய Filter உடையவர்கள் அவற்றை மாதாந்தம் சுத்தம் செய்வதன் மூலமோ ஒவ்வாமையால் ஏற்படும் வியாதிகளில் இருந்து தப்பிக்கலாம்.

● **நான் 5% ($ 15,000) வைப்பிட்டு, $3000,000 பெறுமதியான வீடு ஒன்றை வாங்கினேன். எனது மோட்கேஜ் $285,000 க்குப் பதிலாக $292,520 ஆக கணிப்பிட்டிருக்கிறார்கள். இது எவ்வாறு பொருந்தும்?**

கல்யாணி போரின்பராஜா
ரொறன்ரோ

இது ஒரு பொதுவான கேள்வியே. இதனால் பல சமயங்களில் முகவர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நம்பகத் தன்மைகூட இழக்கப்பட்டிருக்கின்றது. ஒருவர் 25% முன் வைப்பு இல்லாமல் வீடு வாங்கும்போது, அதற்குரிய மோட்கேஜ்இனைப் பெறுபவர்கள் நிச்சயமாக high ratio mortgage Insurance பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவும் ஒரு காப்புறுதியே. ஒருமுறை மட்டும் பணம் செலுத்திப் பெறப்படும் இக்காப்புறுதியினை 'CMHC', 'GE' போன்ற ஸ்தாபனங்கள் வழங்குகின்றன. நீங்கள்5% முற்பணம் செலுத்தியவராக இருக்கின்ற பட்சத்தில், உங்கள் காப்புறுதித் தொகை அண்ணளவாக $7,500 வரை பெறப்பட்டிருக்கும். இத்தொகையும் உங்கள் மோட்கேஜ் தொகை 292,000 டொலராக கணிப்பிட்டிருப்பார்கள். இம்முறை யாவருக்கும் பொருந்தும். சிலர் தாமாக முன்வந்து பணத்தினைக் கொடுத்து இக்காப்புறுதியை பெற்றுக்கொள்வதும் உண்டு.

● **வீடு வாங்குவதற்காகச் செலுத்தப்படும் முற்பணம் தவிர்த்து, ஏனைய செலவினங்கள் என்ன? 'downpayment' என்று கூறுகிறார்கள். பணம் இல்லாமலே ஒருவீட்டுக்கு சொந்தக் காரன் ஆகமுடியுமா?**

அனுஜா குமாரசாமி
பிறம்ரன்.

நிச்சயமாக முடியாது. உங்களது வருமானம் மற்றும் Credit வரலாறுகளைப் பொறுத்து சில மோட்கேஜ் நிறுவனங்கள் கூடிய வட்டி வீதத்திலாவது மோட்கேஜ் தர முன் வருவார்கள். இருப்பினும் வீடு வாங்கும் போது ஏற்படும் செலவினங்களுக்கு நீங்கள் தான் பொறுப்பெடுக்கவேண்டும். பொதுவாக Closing Cost என அழைக்கப்படும் இத் தொகை வீட்டு விலையிலிருந்து 1.5 வீதம் தொடக்கம் 1.7 வீதம் வரை அறவிடப்படும். இத்தொகையானது பின்வரும் அத்தியாவசியமான செலவினங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது.Lawyer fee, Title Insurance, Title Registration, High Ratio Insurance, GST, மற்றும் Property Tax, land Transfer Tax இன்னும் பல.

● **வீடு வாங்கும்போது வீட்டுப் பரிசோதனை அவசியம்தானா?அதற்கான செலவினங்கள்என்ன?எந்த பகுதிகளில் அதிக அக்கறை எடுக்க வேண்டும்?**

விமலநாயகி கருணாகரன்
கொன்கோட்

வீடு என்பது வசிப்பதற்காக வாங்குகின்ற இருப்பிடம் என்பது தவிர்த்து, ஒரு சிறந்த முதலீடும் கூட. நீங்கள் முதலிடுகின்ற பணம், நேரம் ஒரு தரமான பொருளில் (இடத்தில்)தானா என்பதை அறிந்துகொள்ள வீட்டுப் பரிசோதனை துணை புரியும். அதற்கான செலவு 250 – 350 டொலர்கள் வரை வேறுபடும். பொதுவாக வீட்டின் அனைத்துப் பகுதிகளும், கூரை தொடக்கம் அத்திவாரம் வரையும், பாவனை உபகரணங்கள் மற்றும் furnace, அடுப்பு போன்றவையும் Electrical panel, gas lines என்பனவும் பரிசோதிப்பது நன்று.

● **குளிர்காலங்களில் ஜன்னல் ஓரங்கள் ஈரமாகக் காணப்படுகின்றது. அதற்கான காரணங்கள் என்ன? குளிர்கால பராமரிப்பு எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்?**

இராசநாயகம் சிவசுப்ரமணியம்
ஸ்கார்பரோ.

இன்று பல ரகமான ஜன்னல்கள் பாவனையில் உள்ளன. Arsenicனப்படும் வாயு நிரப்பப்பட்ட ஜன்னல்கள் வீட்டுக்குள்இருக்கும் சூட்டினையோ அல்லது குளிரினையோ

17ம் பக்கம் பார்க்க...

**ஆறாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா**

**ஒக்ரோபர் 20, 2007**


- இவ் வருடம் ஒரு நிமிட குறும் படங்களுக்கான சிறந்த பட விருதும் வழங்கப்படவுள்ளது. படங்கள் ஒரு நிமிடத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். புலம் பெயர் படைப்பாளிகடமிருந்து (North America, Europe, Australia) வரும் படங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.
- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் புரட்டாதி 25 ம் நாள் (SEPTEMBER 25,2007)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி

M.Ragunathan
Independent Art Film Society of Toronto
4 Castlemore Avenue,
Markham, Ontario
Canada L6C 2B3

INDEPENDENT ART FILM SOCIETY


மேலதிக தொடர்புகளுக்கு
**416-857-6406, 416-450-6833**
rathan@rogers.com, www.iafstamil.com

**Rely On The Expert Team**
Committed to Providing Real Estate Service with Integrity and Honesty



**Amir Ramalingam,** B.Sc.
Sales Representative
**Cell: 416-409-6067**
Email: aramalingam@trebnet.com

Century 21
King's Quay Real Estate Inc.
Bus: 905-940-3428 (24hrs)



**Pratheep Balasubramaniam**
Sales Representative
**Cell: 416-884-7020**
Email: pbalasubramaniam@trebnet.com

சிறப்பான சொந்த வீடு மற்றும் சொந்த முதலீடுகளை முழுமனநிறைவுடன் மகிழ்ச்சிகரமாக அடைவதற்கு அழையுங்கள் அமிர்/பிரதீப் Top Producing Agents.

Call us for a No cost, No obligation market evaluation of your home.



# For All Your Real Estate Needs..

## Lucky Draw for New Car Will be on September,2007




**Buy or Sell through us before September 16, 2007 and win a New Car****



**Ravi Raveendran**
Real Estate Broker
**416.817.8479**




- Luxury Condominium
- 2 Bedrooms & 2 Washrooms
- Renovated Unit
- 24 Hours Gate House Security
- Call **Ravi** For Details....




- Excellent Convenience Store
- Well Established Business
- Good Lotto Commission
- Good Weekly Sale
- Call **Justin** For Details...



**Justin William**
Real Estate Broker
**416.803.7344**





- Beautiful Detached House
- Best Location In Brampton
- Spacious 3 Bedrooms
- New Hardwood Floor Throughout
- Call **Ravi** For Details....




- Lovely Detached Home
- 3+1 Bedrooms
- Basement Apartment
- Walk To Subway
- Call **Ravi** For Details....




- 3 Bedroom Condo Townhouse
- Well Maintained And Spacious Hse
- Basement Apartment W/ Sep. Ent.
- Ttc At Your Door Step
- Call **Justin** For Details....




- 4 bedroom Condo Townhouse
- Totally Renovated
- Laminated Floor Throughout
- Convenient & Quiet Location
- Call **Justin** For Details...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969    Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale    ** some conditions may apply    *Each office independently owned and operated

# எமக்கென்று ஒரு தனிக்குடில்

சொந்த இல்லத்திற்கு தேவையான அடமானத்தை சுலபமாகப் பெறுவதற்கு பலவருட அனுபவம் பெற்ற முகாமையாளர்களை நாடுங்கள்



**TWO PROFESSIONAL MORTGAGE SPECIALISTS UNDER ONE ROOF WITH RATES YOU CAN'T BEAT**

**MAILVAGANAM (MIKE) AHILAN**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-220-1184**

**VINCE SINNADURAI**
Senior Accounts Manager
Residential Mortgages
(2006 Platinum Award winner)
**416-917-9462**

# 416.438.1688

Fax: 416.438.1612
2250 Midland Ave., #3
(South of Sheppard)
Unit 3, Scarborough, ON M1P 4R9

RBC Financial Group

# “புட்டியைத் தவிர்ப்போம்”

**செந்தூரன் புனிதவேல்**
- காப்புறுதி முகவர் -

> “குழந்தைப் பருவத்தில் புட்டிப்பாலைத் தவிர்ப்போம், வளர்ந்தபின் புட்டி நீரைத் தவிர்ப்போம். ஒட்டுமொத்தமாகப் புட்டியையே தவிர்ப்போம்.”

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட கணிப்புப்படி உலகில் 1.1 பில்லியன் மக்கள் நல்ல குடிநீர் இல்லாது துன்புறுவதாகவும் இத்தொகை 2025ம் ஆண்டளவில் 5 பில்லியனாக அதிகரிக்கும் எனவும் கணித்துள்ளார்கள். இத்தொகையில் மிகச்சிறு பங்குதான் வடஅமெரிக்காவில் உள்ளது என்பது உங்களுக்க மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி. இக்கண்டத்தில் எங்கு குழாயைத் திறந்தாலும் மிகவும் துப்பரவான நீர் கிடைக்கும். ஆனால் மற்றைய கண்டங்களில் இது “அற்புதமாகப்படும்”.

இவற்றிற்கு விதிவிலக்காக வாக்கற்றன் என்ற சிறு கிராமத்தில் நடந்ததுபோல் சில சந்தர்ப்பங்களில் நீரால் நோய் பரவக்கூடும் என்பது மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. ஆனால் இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் இக்கிராம நீர் பழுதாமைக்குக் காரணம் அங்கு பொறுப்பதிகாரியின் கவனக்குறைவே. எனவே போத்தலில் நீர் பெறப்படும்போதும் இத்தவறு ஏற்படாது எனக் கூறமுடியாது.



ஐக்கிய அமெரிக்காவில் 2006ம் ஆண்டு மட்டும் 8.25பில்லியன் கலன் (31 பில்லியன் லீட்டர்) புட்டிநீர் அருந்தப்பட்டுள்ளது. இது முன்னைய வருடத்திலும் 9.5வீதம் அதிகரிப்பாயுள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயம். அமெரிக்கர்கள் குளிர்பானங்களை விட கூடிய அளவு புட்டியில் வரும் நீரைத்தான் குடிக்கிறார்கள். சென்றவருடம் 10.8 பில்லியன் டொலர் பெறுமதியான தண்ணீர் விற்கப்பட்டுள்ளது கவனிக்க வேண்டிய விடயம். இது காற்றினை விற்பதுபோல் ஊற்று நீரை விற்றுப் பணமாக்குகிறார்கள்.

புட்டிநீர் உங்கள் பணப்பையை உறுஞ்சுவதுடன் நிற்கவில்லை. அது சுற்றாடலிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பிளாஸ்டிக் போத்தல்களைச் செய்வதற்கு பெருமளவு எரி எண்ணை தேவைப்படுவதுடன், அவற்றை இடத்துக்கிடம் கொண்டு செல்லவும் பெருமளவு எரிபொருள் விரயமாகிறது. இப்படிப் புட்டிநீரைக் கொண்டு செல்வதால் 4000 தொன் காபனீரொட்சைட் வாயு ($CO_2$) வெளிவிடப்படுகிறது எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது வருடமொன்றிற்கு 700 கார்களால் வெளிவிடப்படும் $CO_2$ வாயுவிற்குச் சமனிடப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம். முக்கியமாக ஐக்கிய அமெரிக்காவிற்குப் புட்டியில் தண்ணீர் பெரும்பாகத்தை பிஜி நாடும், இத்தாலி நாடும்தான் அனுப்புகிறது எனும் விடயம் ஆச்சரியமாயிருக்கலாம்.

இப்படி எரிபொருட்களால் வளிமண்டலம் பாதிப்படையும் வேளையில் பூமியும் பெரிதளவு பாதிப்படைவதை மறுக்கலாகாது. வளிமண்டலமாற்றத்தால் பூமி வெப்பமடைவது பாரிய இழப்புகளை ஏற்படுத்தும் நீர் அடைத்துவரப்படும் பிளாஸ்டிக் புட்டிகளில் 25விழுக்காடு புட்டிகளே மீள் பாவிக்கப்படுகிறது. எனவே வருடத்திற்கு 2 பில்லியன் இறாத்தல் எடையுள்ள பிளாஸ்டிக் புட்டிகள் குப்பைமேடுகளை நிரப்புகின்றன.

இதைவிட அதிகம் தீமை தருவது மக்கள் மனதில் குழாய் நீர் தீமையானது என்ற எண்ணம் படிவதே. இந்த மனநிலையில் மேலும் அதிகமானவர்கள் புட்டிநீரை நாடுவர். இதனால் நல்ல நிலையில் நன்னீரைத் தரும் நிலைமாறி குழாய்நீர் தரம் குறைய காரணமாகலாம்.

17ம் பக்கம் பார்க்க...


# வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதி

NON-MEDICAL INSURANCE

சிறிய தொகை என்றாலும் ஒன்றை வாங்கி வைத்திருந்தால் நன்மையல்லவா?

| காப்புறுதி தொகை | வயது | மாதாந்த கட்டணம்* ஆண் | பெண் |
|---|---|---|---|
| $ 20,000 | 50 | $ 45.02 | $ 36.92 |
| $ 30,000 | 50 | $ 64.83 | $ 52.68 |
| $ 50,000 | 50 | $ 104.45 | $ 84.20 |
| $ 25,000 | 60 | $ 97.65 | $ 80.78 |
| $ 25,000 | 70 | $ 190.28 | $ 147.89 |
| $ 10,000 | 80 | $ 153.96 | $ 121.05 |



Unity Life of Canada

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.


KEN KIRUPA
Life Insurance Broker
759 Warden Ave., Toronto, ON

கென் கிருபா
காப்புறுதி முகவர்
416 294 9322

* Non-Smoker Rates E & O E

# வாழ்க்கை சுவர்க்கமாவது இனிய இல்லமொன்றில்...

**Tapscott/Mclevin**



**$255,000**

3 Bedrooms, 2 Washroom, Beautiful, Well-Maintained Corner Lot, Freehold Townhouse. Like Semi W/ In-Law Potential

**Neilson Rd/Sheppard**



**$269,000**

3+2 Bedrooms, 2 Washroom, Well Maintained, Bsmt Apt With Separate Entrance. Thermal Windows, Crown Moulding In Living And Dining R

**Ching/Wilmpkwy**



**$285,000**

3 Bedrooms, 3 Washroom, Start Fresh!Brand New, Never Lived Freehold Townhome, Aprox 1710Sq Ft. Very Bright W/Neutral Decor

**Markham/Eglinton**



**$287,900**

3+1 Bedrooms, 3 Washroom, Only 3 Years, New All Brick Freehold Townhouse, No Maintenance Fee, Convenient Location,

**Markham/Lawrence**



**$299,900**

3+2 Bedrooms, 2 Washroom, Hardwood Thruout, Convenient Location, Brick Bungalow,Renovated Kitchen


**Lawrence & Manse**



**$324,500**

3+1 Bedrooms, 3 Washrooms, Close To Schools, Transit, Go Station, Park, Library, Amenities

**Morningside/Finch**



**$329,000**

3+1 Bedrooms, 4 Washroom, Well Maintained, Private Entrance To The Finished Bsmt With Kitchen And Full Washroom, Original Owner


**Church & Rossland**



**$369,900**

4+1 Bedrooms, 4 Washroom, Very Attractive & Well Kept Home, Approximately 2500 Sq Ft. Oak Staircase W/ Mirrored Wall

**Dixie/Peterrobertson**



**$375,900**

4+1 Bedrooms, 4 Washroom, Absolutely Awesome Premium Wide Lot! Bright, Spacious, And Clean Home. Close To Trinity Mall, Schools


**Salem/ Taunton**



**$434,500**

4+1 Bedrooms, 4 Washroom, Beautiful House! With Excellent Layout. You Could Move In Anytime! Not Even One Year Old

**Mccowan/14th Ave**



**$449,900**

4 Bedrooms, 3 Washroom, Remington Home In Huge Premium Lot With Double Door Entry And Gleaming Hardwood Floors.

**Mccowan/Highglen**



**$549,900**

5+2 Bedrooms, 5 Washroom, Well Maintained Spacious Remington Home In Desirable Markham Location

**Bayview/Sheppard**



**$1,250,000**

5+1 Bedrooms, 7 Washroom, Fabulous Custom Built Home, Approx 4000 Sf With 5 Ensuites, 3 Skylights, Triple Garage


**Markham/14th**



**$325,000**

3 Bedrooms, 3 Washroom, Remington Model-Duke!!!Most Popular Spacious & Immaculate Home.One Of The Best Detached-Links In The Area


**14th/ Markham**



**$349,000**

3 Bedrooms, 3 Washroom, Newer Remington Home Built In 2000, Approx 1600 Sf, All Brick Ext, Double Drive, Access To Garage


**Middlefield/Denison**



**$349,900**

3 Bedrooms, 3 Washroom, Excellent Location, Close To Major Amenities, Extra Windows In Living & Dining, Rare Model With Main Flr Fmly Rm.


**14th / Markham**



**$359,900**

3 Bedrooms, 3 Washroom, Convenient Location!Beautiful Home In A High Demand Neighbourhood!

**Antrim/Kennedy**




**$112,500**

Maint Fee To Be Verified. Fridge, Stove, All Elfs, Broadloom Where Laid

***New Retail/Restaurant Units Available for SALE/LEASE***

**Brock & Dundas**



**$129,000** **Plus Stock**

Variety/Convvenience Store In The Busy Section Of The Street. Easy To Manage. One Man Operation. Commision From "Go Transit" Ticket Sale $15K/Yr + Lotto 649 Commision

**Lawrence/Midland**



**$142,800**

2 Bedrooms, 1 Washroom, This Unit Show Lot, Very Clean With Custom Made Window Coverings. Well-Maintained Building. Indoor Pool

**I can also assist you with: Mortgage Financing, Home Inspection, Real Estate Lawyer**



digi Media Creations - 416.467.4952

## Elaguppillai (Mike) Srinathan, B.Sc.

Sales Representative

**Direct: 416.276.1225**

esrinathan@trebnet.com

**HOMELIFE/GTA Realty Inc.** 1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

HOMELIFE HIGHER STANDARDS

# புதிய வீடுகள்

## வீடும் விடியலும்

வேலா சுப்ரமணியம்
- Certified Home Inspector -



அங்கம் - 19


கடந்த சிலகட்டுரைகளில் புதியவீடுகளுக்கு இருக்கக்கூடிய பல்வேறுபட்ட உத்தரவாதங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

முறையற்ற பராமரிப்பினாலும், அளவுக்கதிகமான ஈரலிப்புத்தன்மையாலும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும், சேதங்களும் உத்தரவாதத்தில் அடங்காது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

### மேலதிக ஈரப்பதன்...

சுருக்கமாகக் கூறுவதானால் ஒரு வீட்டில் வசிப்பவர்களும் அவர்களது நடவடிக்கைகளுமே மேலதிக ஈரப்பதனை உருவாக்குவதில் முக்கிய இடம் வகிக்கின்றது. “ The people and their activities in a home are big sources of moisture; thus proper ventilation is also important in order to maintain indoor humidity levels within an acceptable range”. அந்த வகையில் காற்றோட்டத்தை அதிகாித்து ஏற்றுக் கொள்ளக்கூடிய ஈரப்பதனைப் பேணுதல் என்பது வீட்டுப்பராமரிப்பில் மிக முக்கிய அம்சமாகும். வீட்டிற்குள் இருக்க வேண்டியதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான ஈரப்பதன் என்பது 30% - 60% வரையாகும். ஈரப்பதன் 30 வீதத்திற்குக் குறையும் பட்சத்தில் சுவாசம் சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. மூக்கில் இருந்தும் இரத்தம் வடிவதற்கும் இதுவே காரணமாகும்.அத்தகைய சூழ்நிலையில் (Humidifier) ஈரப்பதனாக்கி ஒன்றை பாவிப்பது நன்று. அத்துடன் குறைந்த ஈரப்பதனின் காரணத்தால் வீட்டில் உள்ள மரத்தளபாடங்கள், மரத்தினால் ஆக்கப்பட்ட தளங்கள் (Hard wood floor) என்பவற்றிலும் வெடிப்புகள் இடைவெளிகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது.

எனவே சுருங்கக் கூறின் அளவுக்குக் குறைந்த ஈரப்பதனும் பாதகமானது - அளவுக்கு அதிகமான ஈரப்பதனும் கட்டிடத்தில் பாரிய சேதங்களை உருவாக்குவது மட்டுமல்லாது mold பக்றீரியா போன்றவற்றை உருவாக்கி வீட்டில் வசிப்பவர்களுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியது. எனவே வீட்டில் உள்ள ஈரப்பதனின் அளவை அறிந்து கொள்ள ஒவ்வொருவரும் வீட்டில் ஆகக்குறைந்தது ஒரு ஈரப்பதனை அளக்கும் கருவியினை ( HygroMeter) வைத்திருத்தல் மிக அவசியமாகும். மெக்கானிக்கல் கைக்குறோ மீற்றரின் விலை 10 டொலரில் இருந்து 20 டொலர் வரை தான். எலக்றோனிக் கைக்குறோ மீற்றர் 39 டொலரில் இருந்து 60 டொலர் வரை தான். Home Depot, Source போன்ற கடைகளில் இவற்றை வாங்கமுடியும். இத்தகைய மீற்றரை வாங்குவதற்கு ஒரு சிறுதொகையைச் செலவிட்டு ஈரப்பதனின் அளவைக் கண்காணித்து வீட்டைப் பராமரிப்பதன்மூலம் அதிக பலனை பெறமுடியும். இக் கருவியின் சில மாதிரிப்படங்கள் கீழே தரப்படுகின்றன.





### ஈரப்பதனாக்கியும் அதன் பாவனையும் (Humidifier)

சாதாரணமாக வீடுகளில் Humidifierஐ முறையாக பாவிக்காத காரணத்தால் அதாவது தேவையில்லாத போது கூட அவற்றைப் பொருத்தி அளவுக்கு அதிகமாகப் பாவிப்பதால் பாரியஅளவில் பாதகவிளைவுகள் ஏற்படுகின்றன. எனது அனுபவத்தில் பல வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு Humidifier என்ற ஒன்று வீட்டில் பொருத்தப்பட்டிருப்பதே தெரியாது. அத்தகைய சூழ்நிலையில் அதனை பாவிப்பது பற்றியோ அல்லது அதனைப் பராமரிப்பது பற்றியோ அறிவு இருக்கும் என எப்படி எதிர் பார்க்க முடியும்?சந்தைப்படுத்தலில் வல்லமை கொண்டவர் ஏனைய உபகரணங்கள் பொருத்தும் போது இவற்றையும் குறைந்த விலையில் தருவதாகக் கூறி விற்று விடுகிறார்கள். தகுந்த தெளிவு இல்லாது அயலவரையும் மற்றவரையும் பார்த்தும் தாமும் இவற்றைப் போட நினைப்பது தவறானது. காலத்தின் தேவையும் அவசியமும் கருதி Humidifier பற்றிய மேலும் சில தகவல்கள் இக்கட்டுரையில் தரப்படுகிறது.

வீட்டில் இருக்கக்கூடிய உஸ்ணமான காற்றுச் சூழலை நிவர்த்தி செய்வதற்கு Humidifiers பாவிப்பது வழக்கம். ஆனால் எல்லோருக்கும் எல்லா வீடுகளுக்கும் Humidifier அவசியமல்ல. வீட்டின் தன்மை எமது பழக்க வழக்கங்கள் உள்ளக வெளிப்புற காரணங்கள் பல வீட்டில் இருக்கக் கூடிய ஈரப்பதனின் அளவைத் தீர்மானிக்கின்றது. புதிய வீடாக இருந்தால் இயற்கையாகவே சில வருடங்களுக்கு அதிகளவு ஈரப்பதன் வீட்டில் இருக்க வாய்ப்பு இருக்கிறது.

எனவே Humidifier போட முன் நன்றாக ஆலோசித்து அலசி ஆராய்ந்த பின்னர் போடுவது தான் நல்லது. அல்லது பாம்புக்குப் பயந்து பாழ்ங்கிணற்றில் விழுந்த கதையாகத் தான் முடியும். நான் இங்கு கூற அல்லது உணர்த்த முற்படுவது என்னவென்றால் Humidifier ஆல் ஒரு சில நன்மை ஏற்பட்டாலும் அதனைச் சரி வரப் பாவிக்கா விட்டால் அல்லது பேணாது விட்டால் அதனால் ஏற்படக் கூடிய தீமைகள் தான் அதிகம். Humidifiers ஐக் கட்டுப்படுத்துவதற்கு Humidistat (themostat போல) பொருத்தப்பட்டிருக்கும்.இது Humidifierக்கு அண்மையில் உள்ள DUCT பகுதியிலோ அல்லது வேறு அறையிலோ பொருத்தப்பட்டிருக்கலாம். சில வீடுகளில் Themostat Controller க்குப் பக்கத்திலேயே இதுவும் பொருத்தப்பட்டிருக்கும். கீழ்வரும் படத்தில் இரண்டு விதமான Humidistat ஐக் காணலாம். Humidistat ஐ ஒரு குறிப்பிட்ட அளவில் (40% அல்லது 45%) விட்டால் வீட்டில் உள்ள காற்று மண்டலத்தில் அந்த அளவு, குறைய விடாது பார்த்துக் கொள்ள வேண்டியது தான் இதன் வேலையாகும்.




ஆனால் புறக்காரணிகளால் வீட்டின் மேல் தளத்தில் ஈரப்பதன் அளவு திடீரென கூடிக் குறையும் போது, அடித்தளத்தில் இருக்கும் இக் கருவி மிகத் துல்லியமாக தேவைக்கேற்றவாறு Humidifierன் இயக்கத்தைக் கட்டுப்படுத்தாது. இந்த இடத்தில் நாங்களாக இதனை நிறுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ வேண்டியிருக்கும். வெளியில் உள்ள உஸ்ண நிலைக்கேற்றவாறும் நாம் Humidistat ஐக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். உதாரணமாக வெளியில் குளிர் கூடும் போது நாம் Humidistat ன் அளவை குறைக்க வேண்டும்.கீழ் உள்ள அட்டவணை அதனை விளக்குகின்றது.

| Outdoor Temp | Suggested Setting |
|---|---|
| Celcius | % RH |
| -28 | 15% |
| -20 | 20% |
| -18 | 25% |
| -12 | 30% |
| -7 | 40% |

■ ■ ■






**www.PowerofSaleHome.com**

**Kennedy/Ellesmere**



**3 Bed Room, 2 Wash Room**
**Low Maintenance Fee**
**No Down Payment**
**$119,500**

**Midland/Lawrence**



**2 Bed Room,**
Steps To 24Hrs TTC
Shopping, T/R Subway Station.
Shows Very Well.
**$139,500**

**Salem/Rossland**




**NEW HOUSE**
**4 Bed Room**
**3 Wash Room**
**$389,900**

**விரும்பிய இடத்தில் விரும்பிய இல்லத்திற்கு....**

Century 21
AFFILIATE REALTY INC. BROKERAGE
**Bus. : 416.290.1200 (24Hr.)**
80 Corporate Drive,Unit #208, Toronto, ON. M1H 3G5

Apex Creation - 647.439.3310

**Suresh Sellathurai**
*Sales Representative*
**Dir. : 416.356.7330**



*Not intend to solicit buyers or sellers currently under contract with a broker.*

**S.P. IMPORTERS FURNITURE INC.**
*Importers & Distributors of High Quality Furniture & Mattresses*

now with expanded **NEW SHOWROOM** and more collections of **FURNITURE**

**NO PAYMENT INTEREST for 1 YEAR**
on spot FINANCING now AVAILABLE *OAC









**2861 Lawrence Ave. East**
*(Lawrence & Brimley)* Scarborough
**416•266•3077**

**Special Sale on Solidwood Bedroom Sets and Lether Sofas**
QUALITY | RELIABILITY | FREE DELIVERY **
*(**Over $500 in City Limits)*

# வீடு வினாவும் விடையும்...

11ம் பக்கத் தொடர்ச்சி...

இலகுவில் வெளியேற்றாது. மற்றும் ஜன்னலின் உட்புறமும் வெளிப்புறமும் chalking செய்வதன் மூலம் இடைவெளிகளை நிரப்பி காற்றுப் புகாவண்ணம் செய்ய முடியும். வீட்டுக்குள் ஈரப்பதன் அதிகமாக இருப்பின் குளிரூட்டியில் இருந்து வெளியில் வைத்த போத்தல்களில் நீர் வடிவது போல் ஜன்னல்களின் உட்புறமும் நீர்த் தன்மையுடன் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு வீட்டிலுள்ள காற்றகற்றிகளை அதிக நேரம் இயங்கவைக்க வேண்டும். தினசரி ஜன்னல்களைத் திறந்து வைத்து வெளியிலுள்ள காற்று வீட்டுக்குள் வருவதற்கு இடமளிக்க வேண்டும்.

● **நான் கொண்டோ தொடர்மாடிக் கட்டிடத்தில் வசிக்கின்றேன். எனக்கான காப்புறுதியை கொண்டோ ஸ்தாபனம் பொறுப்பெடுப்பதாகக் கூறினார்கள்.ஆனால் எனது குளியலறையில் ஏற்பட்ட நீர்க் கசிவினால் கீழேயுள்ளவரின் பகுதி பாதிப்படைந்ததற்கு காப்புறுதி ஏன் பொறுப்பேற்கவில்லை?**

உதயகுமாரி யோகநாதன்
ஸ்கார்பரோ.

கொண்டோவில் பொதுப் பகுதிகளுக்குரிய காப்புறுதி கொண்டோ ஸ்தாபனத்தினால் பொறுப்பேற்கப்படும். நான்கு சுவர்களுக்குள் ஏற்படும் சேதங்களுக்கு நீங்கள் காப்புறுதி செய்ய வேண்டியது அவசியம். உங்கள் வீட்டின்உட்புறத்தில் இடம்பெறும் களவுகள், தீ, தண்ணீர் போன்றவற்றால் ஏற்படும் சேதங்களுக்கு உங்கள் காப்புறுதிநிறுவனம் தான் பொறுப்பாகும். ஆனால், சுவர்களுக் கூடாக இணைக்கப்பட்டிருக்கும் தண்ணீர்க் குழாய்களில் சேதமேற்பட்டு உங்கள் பகுதிகள் சேதமடைந்தால் கொண்டோ ஸ்தாபனம் பொறுப்பெடுக்கலாம்.

● **சென்ற வருடம் எனது வீட்டின் மின் அளவு கருவி(meter) இனை புதிய தொழில்நுட்பம் பொருந்திய (smart meter) கருவியாக மாற்றினார்கள். அதற்கான காரணங்கள் என்ன?**

யோர்ஜியா நடராஜா

நீங்கள் கூறியதுபோல் ஸ்மார்ட் மீற்றர்கள் புதிய கருவிகள் மூலம் வீடுகளுக்கு வராமலேயே பாவனை அலகினை அறிந்து கொள்ள முடியும். அதுமட்டுமல்லாது ஒரு நாளின் எந்தெந்த நேரங்களில் நீங்கள் எவ்வளவு அலகு மின்சாரத்தினை நுகர்ந்துள்ளீர்கள் என்பதனையும் பிரித்து அறியும் தன்மை கொண்டது. இம்முறையானது நுகர்வோராகிய பொதுமக்களுக்கே அதிக பலன் அளிக்கக்கூடியது. Peak காலம் தவிர்ந்த இரவு வேளைகளில் நீங்கள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு அறவிடப்படும் பணம் மிகக் குறைந்த அளவே. இதற்குரிய நேர அட்டவணை torontohydro.ca என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்பான வாசகர்களே, இம்முறை வழமைக்கு மாறாக உங்கள் கேள்விகளுக்கான விளக்கங்களைப் பார்த்தோம். இனி வரும் காலங்களில், வீடு, வியாபார நிலையம் சம்பந்தமாகவும், மோட்கேஜ் சம்பந்தமாகவும் ஐயப்பாடுகள் இருப்பின் கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வையுங்கள். தாமதமாகக் கிடைக்கும் தபால்களுக்குக் காலம் தாழ்த்தியே பதில் கிடைக்கும்.

■ ■ ■

# புட்டியைத் தவிர்...

13ம் பக்கத் தொடர்ச்சி...

எமது நீர் விநியோகக் குழாய்கள் பழமையடைந்துவரும் நிலையில் அதில் முதலீடு செய்ய அரசாங்கம் முன்வரவேண்டியதவசியம். புவி மண்டல வெப்பநிலை உயர்ச்சி காரணமாக வறட்சி அதிகரித்துவரும் வேளையில் வளர்ந்துவரும் தலைமுறை புட்டி நீரை நம்பிவளர்வது ஆபத்தானது. குழந்தையாய் இருக்கும்போது புட்டிப்பாலில் வளர்ந்து பின் அவர்கள் புட்டிநீரில் வளர்வது விரும்பக்கூடியதல்ல.

புட்டி நீரை விளம்பரங்களால் வளர்ச்சியடையச்செய்தவர்கள் அதன் பின்விளைவாக புட்டி நீர் பாவனைக்கு பரவலாக எதிர்ப்புத் தோன்றுவதைக் காணக்கூடியதாயுள்ளது. நான் கூட வாக்கற்றன் விளைவுக்குப்பின் புட்டி நீரைப்பாவித்தவன். இன்று அதன் அறியாமையை உணர்ந்து மீண்டும் குழாய் நீரைத்தான் பாவிக்கின்றேன். அத்துடன் அதற்கு எதிராகவும் எழுதத்தலைப்பட்டுள்ளேன்.

## மேலும் சில உதாரணங்கள்:

1. சன்பிரான்சிஸ்கோ மேயர்,கவின் நியூமன் சென்றமாதம் தமது அதிகாரிகள் நகராட்சிப் பணத்தில் புட்டிநீர் வாங்குவதைத் தடை செய்துள்ளார்.
2. நியூ யோர்க் நகரம் ஒரு மில்லியன் டொலர் விளம்பரம் செய்து தமது நகராட்சிக் குழாய் நீரைப் பாவிப்பதற்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.
3. சால்ட் லேக் மேயர் நகராட்சி வைபவங்களுக்கு புட்டிநீர் பாவிப்பதைத் தடை செய்துள்ளார்.
4. சில பெரிய உணவுச் சாலைகளும் புட்டி நீர் பாவிப்பதை விலக்கிக் கொண்டுள்ளார்கள்.

உதாரணத்திற்கு டெல்பெஸ்டோ, மாரியோ பட்டலின் புதிய உணவுவிடுதியில் ஒரு உணவு டொலர் 50 வரை செலவாகலாம். அத்துடன் புட்டிநீரைத் தர அவர்கள் விரும்பவில்லை. எனவே கிளாஸ் இல் குழாய் நீர் தருவதுடன் தமது விடுதியைக் கூடிய பொறுப்பாய் நடத்தவிரும்புவதாக உரிமையாளர் தெரிவிக்கிறார். பல்லாயிரம் மைல் தொலைவில் இருந்து புட்டிநீர் கொண்டு வருவது சரியாகப்படவில்லை என்கிறார்.

இன்று 'புட்டி நீர்" வியாபாரம் செய்யும் அமைப்புகள் கவலையடையத் தொடங்கியுள்ளன. அவர்கள் வாதம் புட்டி நீர் நாகரீகமாய் வந்தபின் கோலா போன்றவற்றைக் குடிக்காமல் நல்ல நீரைக் குடிக்கிறார்கள் என்பதாகும். இது ஓரளவு உண்மையே. அதீதமாக வளர்ந்துவரும் புட்டிநீர் பாவனை அதனை மறு பரிசீலனை செய்யத் தூண்டியுள்ளது. இதன் விளைவாக அவர்கள் நீர் அருந்துவதன் உபயோகம் பற்றி விளம்பரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

பூலோக சுற்றாடலுக்கு புட்டிநீர் தீமையபக்கும் என்று கூறும் வேளையில் அதை முற்றுமுழுதாகத் தவிர்க்கவேண்டும் என்பதல்ல. புட்டிநீர் பல சந்தர்ப்பங்களில் மிக அவசியமாகிறது. உதாரணமாகக் கத்தரீனா வெள்ளம் பெருக்கெடுத்த வேளையில் நன்னீர்த் தட்டுப்பாடுஏற்பட்டது. அக்கால கட்டத்தில் புட்டிநீர்தான் கைகொடுத்து உயிர் காத்தது என்பதை மறக்கலாகாது. ஆனால் ஐஸ்லான்ட், பிஜி தீவு போன்ற நாடுகளிலிருந்து நீரைக் கொண்டுவருவது சுற்றாடலுக்கு பெரும் தீங்கை விளைவிக்கிறது.

முக்கியமாக சுற்றாடல் தாக்கத்திற்கு கார் பாவிப்பதைத் தவிர்ப்பது, குளிர் ஊட்டும் கருவியைத் தவிர்ப்பது போன்றவற்றிலும் புட்டிநீரைத் தவிர்ப்பது எளிதல்லவா? குழந்தைப் பருவத்தில் புட்டிப்பாலைத் தவிர்ப்போம், வளர்ந்தபின் புட்டி நீரைத் தவிர்ப்போம். ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் புட்டியைத் தவிர்ப்போம்.

■ ■ ■


**Buy & Sell Residential and Commercial Properties**



**Raj. A. Rasaratnam** B.Com.
*Sales Representative*

**416-726-8055**
**416-299-8570**

HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated

1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3

**Bus: (416) 321-6969**
**Fax: (416) 321-6963**

**$ 309,900**

**Markham & Passmore**
Town with 3 Bedroom and 3 washrooms. Separate Entrance to unfinished basement. Close to school and TTC. Include Central AC, all Electric Fixtures, Window coverings and Appliances.

**$ 328,900**

**Markham & Steels**
Semi bright and excellent condition. Parquet in living and Dining. Close to TTC.

**$ 778,000**

**9th Line & 14th Ave.**
Beautiful Home with 3 garage and 5 bedrooms. Aprox 4000 Sq.Ft All Hard wood and Ceramic.

**$ 404,900**

**Markham/14th Ave.**
Gorgeous home with 3 Bed room, 3 Wash room. Living, Dining and Family room with hard wood floor

**$ 339,000**

**Neilson/Finch**
Beautiful detached with 3 Bedroom and 3 washrooms. Close to TTC and school

**$ 375,900**

**Dixie & Peter Robertson Brampton**
Beautiful home in Absolutely Awesome Premium Wide Lot with 4 Bedroom, 4 Washroom. Finished apartment with Sep. Ent. Close to Trinity mall, School and Transportation

Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation

**416-726-8055**

# Homeowners' Lines of credit



பாஸ்கரன் சின்னத்துரை
-வீடு விற்பனைப் பிரதிநிதி -

## ஒரு நிம்மதியான வாழ்க்கை இதனால் கிடைக்கலாம்!

'ஆனந்த விலாஸ்', 'சண்முக விலாஸ்' தொடங்கி 'ஏகாம்பரம் கடை', 'இராசையா கடை', 'சுப்பிரமணியம் அன் சன்ஸ்' என்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை எங்கு போய்ப் பார்த்தாலும் 'உறவுக்குப் பகை கடன்,கடன் நட்பை முறிக்கும்' என்ற ஒரு பழம் அட்டைதான் தொங்கிக் கொண் டிருக்கும்.கடன் கொடுப்பதும், கடன் வாங்கு வதும் ரொம்பக் கேவலமான விசயமாய் நினைக்கின்ற நாடு அது.

ஆனால் கனடாவில் பாருங்கள் கடன் தரு வதற்கு என்று எல்லாநிறுவனங்களும் உங் கள் வீட்டு வாசலில் போட்டி போட்டுக் கொண்டு காத்துக் கொண்டிருக்கின்றன.

"இந்த மாதம் நீங்கள் பொருளை வாங்கி னால் இன்னமும் இரண்டு வருடத்திற்கு வட்டியையோ முதலையோ கட்டத்தேவை யில்லை" என்ற பெரிய விளம்பரங்களை எல்லாம் மிக ஆசையோடு பார்த்திருப்பீர் கள். டிவி, சோபா செட்டி, மேசை கதிரை என்று ஏராளமாக வாங்கிப் போட்டவர்களில் நீங்களும் ஒருவராக இருப்பீர்கள். பின்னர் இரண்டு வருடம் முடிந்து கடனை கட்டத் தொடங்கும் போது வட்டி வட்டியாக கட்டி மீண்டும் எறியப்பட்ட ரொட்டி மாவு மாதிரி நொந்து போயும் இருப்பீர்கள்.

எல்லாமே ஏமாற்று. இலாபமும் வட்டியும் இல்லாமல் கனடாவில் கடன் கிடையாது. விளம்பரங்களை நம்பி ஏமாறாதீர்கள்.

கடைகள், கிரடிட்காட் கொம்பனிகள் எல் லாம் மிக அதிக வட்டியை வசூலிக்கின்றன. பதினெட்டு வீதத்தில் இருந்து இருபத்தி எட்டு வீதம் வரை வட்டி வீதம் இருக்கின் றது. மாதாந்த வருமானத்தில் ஒரு பெருந் தொகையை வட்டியாக கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் பல குடும்பங்கள் உள்ளன. ஆனால் இந்த நிர்ப்பந்தத்தில் இருந்து மீள வழி உள்ளது. அதுபற்றிதான் நான் உங்க ளுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன்.




இந்த சமயத்தில் கனடாவில் நடை பெற்ற ஒரு வழக்கை உங்களுக்கு நினைவூட் டுவது பொருத்தமாக இருக்கும்.

"வங்கிகள் நமது வைப்பு பணத்துக்கு ஐந்து வீதம் அல்லது அதற்கு குறைவான வட்டியை வழங்குகின்றன. அதே சமயம் கிறடிட்காட் கம்பனிகள் 18 சதவீதமான வட் டியை நம்மிடம் அறவிடுகின்றன. இது மிக அதிகமானது. எனவே இந்த கிறடிட்காட் கம்பனிகள் தமது வட்டி வீதத்தை குறைத்து வாங்க வேண்டும்" என்று ஒரு வழக்கு ஒரு பொது சனத்தால் தொடரப்பட்டது.

இதற்கெல்லாம் சளைத்தவர்கள் அல்ல கிறடிட்காட் கம்பனிகள். நீதி மன்றத்தில் இதற்கு அவர்கள் பதில் அளித்த போது தம்மிடம் கடன் வாங்கியவர்கள் மறுபடியும் பணத்தை கட்டாமல் எல்லாம் ஏமாற்றுகின் றனர். எனவே அந்த நட்ட ஈட்டையெல்லாம் இப்படித்தான் எடுக்க வேண்டியுள்ளது என்று வாதிட்டது. சட்டங்கள் முதலை பாதுகாக்க ஏற்படுத்தப்பட்டன. நீதிமன்றம் இதை ஏற்றுக் கொண்டு பொதுசனத்தின் வழக்கை தள்ளு படி செய்துவிட்டது.

இதேசமயம் இந்த கிறடிட்காட் கடன்களை விட இன்னோரு வகையான கடன் உள் ளதை பலர் அறியார். அது தான் Home owners' Lines of credit (HOLC) கடனா கும்.

Homeowners' Lines of credit (HOLC) என்பது ஒரு வகையான கடன் ஆகும். முக்கிய வங்கிகள் உங்களுக்கு இந்த கடனைத் தருவதற்கு தயாராக உள்ளன. இந்தக் கடனை நீங்கள் பெறவேண்டுமா னால் முதலில் உங்களுக்குச் சொந்தமாக ஒரு வீடு இருக்க வேண்டும். அது தனி வீடாகவோ, அல்லது தொடர்மாடிக்கட் டிடத்தில் அமைந்த கொண்டமேனியமா கவோ இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அந்த வீட்டுக்குரிய உண்மையான மதிப்பின் 25 சதவீதத்தை நீங்கள் செலுத்தி இருந்தால் இந்த Homeowners' Lines of credit (HOLC) கடனை நீங்கள் பெறுவ தற்கு தகுதி ஆகின்றீர்கள்.

Homeowners' Lines of credit (HOLC) கட னுக்கு நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி வீதம் குறைவானது. இப்போது நீங்கள் கிறடிட்காட்டுக்கு செலுத்துகின்ற வட்டிவீதத் தில் இருந்து பெரும்பாலும் அரைவாசிக்கும் குறைவானது. அது மட்டுமல்ல Personal lines of credit வட்டி வீதத்தை விடவும் குறைவான வட்டியைக் கொண்டது என்பது முக்கியமானது.

அப்படியானால் இதன் வட்டி வீதம் என்ன? உங்களுடைய வீட்டுக்கு நீங்கள் செலுத்து கின்ற mortgages வட்டி வீதம் அளவுக்கு அல்லது அதை விட ஒரு சதவீதம் அதிக மாக இந்த வட்டி வீதம் இருக்கும். இது இப்போது சிலருக்கு ஆறு வீதமாகவும் இருக்கின்றது.

உங்களுக்கு ஏற்கனவே கிறடிட்காட் கடன் மற்றும் கடைகளின்பெயரினால் ஆன கடன் கள் இருந்தாலும் அதை எல்லாவற்றையும் இந்த Homeowners'Lines of Credit(HOLC) கடனை பெற்று அடைத்து விடலாம். இத னால் நீங்கள் கட்டுகின்ற வட்டி பெருமள வில் குறைவதுடன் வீட்டில் நின்மதி பெரு கும். வாழ்கை மறுபடி சீராகும். உங்கள் மாதவருமானம் உங்கள் கைக்குள் அடக்க மாக அடைக்கலம் பெறும்.

■ ■ ■



# சலரோக உபாதைகளிலிருந்து நீங்குவதற்கான ஆரோக்கிய பானம்!



**டயபீனா** தினமும் அருந்தக்கூடிய மூலிகை ஆரோக்கிய பானம். இது உடலில் மிகுதியான குழுக்கோசினை குறைக்கக்கூடியதும், இரத்தத்திலுள்ள அதிகளவு குழுக்கோசினால் ஏற்படக்கூடிய நோய்களை ஒழுங்கு முறையாக தடுக்கவும் உதவுகிறது. விறைப்புத்தன்மை, பாதங்களில் சுளுக்கு, அலட்சியத் தன்மை மற்றும் மீண்டும் மீண்டும் வியாதிகளை படிப்படியாக நீக்கிவிடக் கூடியது. டயபீனா கண்டிப்பாக நீரிழிவு நோயினால் வருந்துபவர்கள் மட்டுமே பாவிக்கவேண்டியது.



# மலச்சிக்கல் மற்றும் குடல் உபாதைகளுக்கான நிவாரணி!



**கொன்சிடாப்** மூலிகைப் பானமானது மலச்சிக்கலுக்கு எதிராக போட்டியிடும் சக்திவாய்ந்தது. உடலிலிருந்து கழிவுப் பொருட்களை இயற்கையான முறையில் வெளியேற்றுவதற்கு உதவுகிறது. மூலவியாதி, வாயுப் பிரச்சினையினால எழக்கூடிய அடிவயிற்று வலியை தவிர்க்க உதவுவதோடு பசியை அதிகப்படுத்தவும், நீரோட்ட தொழிற்பாட்டை சீராக வைத்திருக்கவும் உதவுகிறது. எவ்வித அசௌகரியமின்றி சிறுநீர் கழிக்கக்கூடிய சக்தியை வழங்குகிறது.

# உடலின் கெடுதியான கொழுப்பைக் குறைத்து உடல்த்தென்பைப் பேண வேண்டுமா?



**க்லுாட்டியலா** பானமானது மிகுதியான உடல் கொழுப்பை குறைக்கக் கூடியதும், குறிப்பாக உடலின் இடுப்பு, தொடை, தோற்பட்டை, கைகள் போன்ற பகுதிகளில் ஏற்படக்கூடிய ஊமைச் சதை பெருகுவதை தடுக்கவும், கொழுப்பினால் விளையக் கூடிய கெடுதியினை கட்டுப்படுத்தவும், உடல் வலியை நீக்கவும், அத்துடன் வாதத்தினால் ஏற்படக்கூடிய வலியினை குறைக்கவும் உதவுகிறது. க்லுாட்டியா உடலுக்கு புதுத்தெம்பைக் கொடுப்பதோடு நீண்ட சுகமான வாழ்விற்கும் வழிவகுக்கிறது.



**லோங்லை:ப்** ஆனது முற்றிலும் இயற்கையான மூலிகையினைக்கொண்டு இருப்பதால் இதனை தினமும் அருந்துவதன் மூலம் எமது சரீரத்தின் வெளித்தோற்றத்தையும் திடகாத்திரதன்மையையும் விருத்தி செய்து கொள்ளலாம். இருப்பினும் இது குறிப்பாக நோய் எதிர்ப்புச் சக்தியினை பலப்படுத்துவதற்கும், பசியை அதிகப்படுத்தற்கும் அத்துடன் அடிவயிறு உஷ்ணத்தை தடுத்து எரிவைத் தடுக்கவும், சிறுநீரகப் பிரச்சினையிலிருந்து நிவாரணமளித்து உடலிலிருந்து கழிவுப் பொருட்களை சீரான முறையில் வெளியேற்ற உதவியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.



The **ERVAMATIN™ HAIR LOTION**
provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results.
Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, thin Hair, baldness, fragile and dry hair.






**SABONA** & Gift
www.mediherbs.ca

Tel: 416 264 8787
www.amazonhealthcare.ca
2602, Eglinton Ave East. (Midland/Eglinton)

# கனடாவில் கிடைக்கிறது

இதம் தரும் தாயகத்தின் இருக்கை! **Easy Chair**

வீட்டையும், காரியாலயங்களையும் அழகுபடுத்த கவர்ச்சிகரமான மீன் தொட்டிகள்

மொத்தமாகவும் தனியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



ஒருவருடம் சுத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை!
வீட்டிலும் காரியாலயத்திலும் வைத்தால் அழகும்! ஆனந்தமும்! அமைந்திடும்!





அழையுங்கள் வாருங்கள்
வண்ண வடிவங்கள் உங்கள் கண்களை கவரும்....
வாங்கி வீட்டில் வைத்தால் வருவோரையும் கவரும்!

உறுதியான அமைப்பு வண்ண வடிவும்
குறைந்த விலை நிறைந்த ஆனந்தம் **Easy Chair**
முள்ளந்தண்டின் இயல்பான வளைவுகளுக்கு ஏற்ப
**Easy**யாய் அமர்ந்துகொள்ள

## AVRA INC
McCowan & Sheppard
**416 854 1639**
Email avrainc@gmail.com



பல வடிவங்களில்
**CUP & SAUCERS**



DIRECT: **416-399-8093**
FREE MARKET EVALUATION!!!

FREE LEGAL FEE TILL NOV.30.2007


**Pirabaa Nallathamby**
Sales Representative
**(Babu)**

TEL: 416.264.0101
CELL: 416.399.8093
FAX: 416.261.1519
nvpiraba@hotmail.com

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/
Future Reality Inc.,Brokerage
262 Markham Road
Scarborough, ON M1J 3C5



$429,900
**Denison/Markham**
4+1 Bedrooms, 4 Washrooms
Sep-Enterance, Close to Shopping
Walk to TTC & Markham Transit



$319,900
**Whites/Strouds**
3 Bedrooms, 3 Washrooms
Close to elementary & High School
Close to 401/407



$569,900
**Morningside/Finch**
4 Bedrooms, 4 Washrooms, Close to TTC
Aprox: 2735 Sqft with W/O Basement
Less than 1.5 Years Home, Fully upgraded



# மீளாக்கடனில் தத்தளிக்கிறீர்களா?

Small Claims Court - Collection Agencies -Loss Business - Student Loan

31 வருடகால சிறந்த அனுபவம்!

வீடு வாகனங்களை இழக்காமல் உங்கள் கடன் பிரச்சனைகளுக்கு முழுமையான தீர்வை எட்டிடவும்!


உங்கள் கடன் தொகையில் ஒரு பகுதியினை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்துவதன் மூலம் மீளாக்கடனில் இருந்து முற்றாக விடுதலையாகிறீர்கள்!

பறிமுதலாகும் ஊதியத்தை நிறுத்திடவும் கடன் வழக்குகளில் இருந்து உங்களைக் காத்திடவும்!

Consultation - Consumer Proposals - Bankruptcy

Canada Revenue Agency யின் வரி சம்மந்தப்பட்ட பிரச்சனைகள்!

மொன்றியாலிலும் சேவை தரப்படுகின்றது!



crc

Credit Recovery Canada

416-264-1272

55 Town Centre Court Suite 700

தமிழர் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ் நிறுவனம்!

# RAMAN APPLIANCES INC.

• General Contractors • Sales • Service • Installation




- GAS Furnace
- Central Air Condition +Humidifiers +Air Cleaners
- Central Vacuum
- Security Alarm Systems





We Deal in All Makes and Models Service and Repair

அனுபவமும் சேவை நேர்த்தியும் கொண்டவர்களின் சேவை!

Residential & Commercial Alarm Systems

ADT

AUTHORISED DEALER

Alarm Guard Security Services Inc.

Please Call for a FREE in-home product consultation

RAMAN APPLIANCES INC.

Show Room: 3021 Markham Rd., Suite#51, Scarborough, ON.

416•930•5117 416•332•1989



ராமன் செல்லையா

Raman


வீடு வாங்க, விற்க...
இதில் அறிமுகமானவர்களை அழையுங்கள்.......
THE CHAIRMAN'S CLUB
NATIONAL Award Winner 2003 - 2006
Top 1% in Canada
Karu Kandiah FRI. CRES
Real Estate Broker
KARU'S ROYAL TEAM
Top 10 TEAM Across CANADA
19 வருடங்களாக இத்துறையில் முன்னணியில்......
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!!
Ranked # 7 in all of Canada-2006
Praba Jeganathan*
Chandran Sornalingam*
Siva Kandiah*
Charles Deva*
Malini Muhunthan*
Ranjan Francis Xavier*
Naren Sanbasivam*
Joy Emmanuel*
Sri Ganesh Thambaiah*
Kumar Varatharajah*
Neelan Thambiah*
Paul Premraj*
Austin Flavius*
Ken Seyan*
Sunil Guneratne*
Vithi Thillainayaham*
Raj Ariyam*
Ganesh Thangarajah*
Meera Ram*
Ramanan Ramachandran*
Jeya Artputharajah*
Sajanthan Shan*
Middlefield/Finch
- 1+1 Bedrooms, 1 Washroom
- Brand New Over 653 Sq.Ft.
- (Model Ga) Low-Rise Condo
- Upgraded Laminate Flooring
- Close To 24Hrs. Ttc
$ 159,900
Sheppard/Morningside
- 4 Bedrooms, 2 Washrooms
- Large Townhouse Renovated Large Eat-In Kitchen
- Walk-Out To Basement
- Convenient Location!
$ 189,900
Rossland/Harwood (Ajax)
- 4 Bedrooms, 4 Washrooms
- Premium Lot Of Montebello Enclave. Over 3000 Sq. Ft.
- Upgraded Kitchen Tall Cabinets
- Prof Landscaped & Fully Fenced
$ 464,900
Lawrence/Bellamy
- 3+1 Bedrooms, 2 Washrooms
- All Appliances As-Is Condition
- Close To All Major Highways And Close To All Ammenities
$ 315,900
Staines/Steeles
- 4 Bedrooms, 4 Washrooms
- Executive Yorkwood Home
- Over 3900 Sq. Ft
- Hardwood Floors & Claif Shutters On Both Floors
$ 599,900
Markham Rd/14th Ave
- 5 Bedrooms, 5 Washrooms
- Appr 4000 Sq.Ft 2-Storey
- Gleaming Hdwd Thru-Out Main & 2nd Floor
- Close To Park, Schools, 407
$ 624,900
Mccowan/Denison
- 5+2 Bedrooms, 3 Washrooms
- Stunning House, Monarch Built.
- Basement Finished, Interlocking Driveway, Double Enclosed Porch
- Close To Schools, Shopping,407
$ 599,900
Sheppard/Neilson
- 4+3 Bedrooms, 2 Washrooms
- Superb Brick Bungalow Fenced Backyard
- Close To Hwy 401, Ttc, Schools Shopping
$ 299,000
Morningside/401
- 3 Bedrooms, 2 Washrooms
- Excellent Townhouse Complex
- Property Backs Onto Backyards Of New Homes
- Close To Plaza, Schools, Ttc, 401
$ 192,500
Mavis/Derry
- 3 Bedrooms, 3 Washrooms
- A Compact Home In A Desirable Location
- Close To All Major Highways And Close To All Ammenities
$ 299,999
Kennedy/Steeles
- 3+1 Bedrooms, 3 Washrooms
- Finished 1 Bedroom Basement
- New Interlock Walkway In 2004
- Walking Distance To Pacific Mall, School
$ 419,900
Steeles/Middlefield
- 4+2 Bedrooms, 5 Washrooms
- Spacious 4 Bedroom House With Sep.Entrance To Basement
- Live Upstairs & Rent 2 Units In The Basement
$ 489,000
Midland/Eglinton
- Medical/Dental Office
- Finished Basement(800 Sq Ft.)
- This Is An Investment Property Allowing Mulpiple Uses Currently Used As Medical Walk-In Clinic
$ 849,000
Kipling/Steeles
- 2+1 Bedrooms, 2 Washrooms
- Very Clean With Many Upgrades
- Solarium Can Be Used As Home Office/Study Room
- Close To All Amenities
$ 145,000
Pickering
- 7 Bedrooms, 4 Washrooms
- 4-Plex With Address Corner Unit
- Enough Parking, 4 Fridges
- Closer To School, Shopping & Hwy 401
$ 550,000
Shepphard/Neilson
- 2 Bedrooms, 2 Washrooms
- Bright Sunny Corner Unit
- Over 1200 Sq Ft Condo
- Freshly Painted Throughout.
$ 210,000
Kennedy/Ellesmere
- 3 Bedrooms, 2 Washrooms
- Renovated Kitchen, Bathroom And Recreational Room
- Close To School, 401 And Kennedy Commons.
$ 227,000
Birchmount/Finch
- 3 Bedrooms, 2 Washrooms
- New Laminate Floors Throughout
- This Corner Unit Features Newly Painted Walls
- Close to Park, Schools, Ttc
$ 179,900
Markham/Finch
- Commercial/Retail
- Over 1100 Sq Ft
- 4 Professionally Finished Offices With 1 Kitchen, Bathroom
- Close To Public Transit, Mall
$ 145,000
Markham/Mclevin
- 2 Bedrooms, 1 Washroom
- Bright Living & Dining Room Are Open To Larger Balcony
- Close To Schools, Ttc, Shopping
$ 193,900
Vaughan
- 1+1 Bedrooms, 1 Washroom
- Luxurious New Building, Grand Lobby And Modern Facilities
- 2 Guest Suites, Indoor Pool With Jacuzzi, Sauna, Party Room
$ 239,900
Warden/Finch
- 3+1 Bedrooms, 2 Washrooms
- End Unit Like Semi! Lowest Maintenance Fee
- Close to Schools, Library, Mall Ttc(24Hrs), Park
$ 229,900
Markham/Kingston
- 2 Bedrooms, 2 Washrooms
- Beautiful Clear View From 5th Floor, Very Bright
- Close To All Amenities
$ 222,000
Markham/Eglinton
- 2 Bedrooms, 2 Washrooms
- Upgraded Washrooms, Newer Appliances
- Re-Finished Parquet Floor
- Close to Park, Schools, Ttc
$ 114,900
Ragu Paramsothy*
Roger Kuhan Thambiah*
Nitharshan Kumar*
Saba Ganeash*
Sara Thangaras*
Kannan Kankesu*
Siva Ratheesan*
Murali Kanagasbai*
Wilton Gnanapragasam*
Your Picture Here!
* Sales Representative
ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Tel: 416-284-5555
880 Ellesmere Road. Suite 203, Scarborough, ON
www.royalteamonline.com

# வீட்டுத் தூசியும் ஒவ்வாமையும்

ராஜேஸ்வரி முத்துலிங்கம்

வீட்டுத்தூசி என்பது குடியிருப்பவரின் ஆரோக்கியத்துக்கு பங்கம் விளைவிக் கிறது என்பது பல சுகாதார நிபுணர்க ளாலும் நிரூபிக்கப்பட்ட ஒன்று. இத்தூசி குழந்தைகள் முதல் வயோதிபர்வரை நல்ல சுகதேகிகளையுஞ்சரி, நோய் வாய்ப்பட்ட வரையுஞ்சரி வேறுபாடின்றிப் பாதிக்கிறது. உங்கள் வீட்டிலொருவருக்கு வருடம் பூரா வும் மூக்கடைப்பு, நீர் வடிதல், தும்மல், கண்ணில் நீர்வடிதல், புருவங்களில் அரிப்பு போன்ற அறிகுறிகள் இருப்பின் அதன் முக்கிய காரணம் வீட்டுத் தூசியால் வரும் ஒவ்வாமை காரணமாகவிருக்கலாம். இத் தூசி சிலருக்கு தொய்வு, இருமல், சுவாசக் கோளாறுகளையும் உருவாக் கலாமென்று மருத்துவர்கள் கருது கிறார்கள்.

வீட்டுத் தூசி என்பது பல நுண்பதா த்தங்களின் கலவையே. வீட்டுக்கு வீடு இக்கலவை வேறுபடலாம். தளபாடங்கள், வளர்ப்புப் பிராணிகள், ஈரத்தன்மை போன் றன தூசியின் சில மூலங்கள். ஒரு சிறிய தூசிக் குவியலில் பருத்தி நார்கள், மனித சருமத்தின் உதிர்வுகள்,பிராணிகளின் முடித் துகள்கள், நுண்ணுயிரிகளெனக் கருதப் படும் மைற்ஸ், பக்டீரியா, பூஞ்சணப் பொடி கள் போன்றவற்றைக் காணலாம். இவற்றில் ஒன்றிற்கோ அல்லது பலதிற்கோ ஒருவர் ஒவ்வாமை அடையலாம்.

மேற்சொன்ன ஒவ்வாமை இருப்பதனால் உங்கள் வீடு அசுத்தமானது, தூசி நிறைந் தது என்பது பொருளல்ல. சுத்தமாக வைத் திருக்கும் வீட்டிலும் இப்படியான தூசிகள் சேரவே செய்யும். ஆனாலும் சாதாரண துப்புரவு செய்யும் முறைகளோ அல்லது பாவிக்கின்ற உபகரணங்களோ இத்தூசி களை அகற்ற முடியாதிருக்கலாம். உதார ணமாக எப்படியான முறைகளைப் பின்பற் றினாலும்,கம்பளத்தினுள்ளும், தலையணை களிலும், மெத்தைகளிலும் மறைந்துறையும் டஸ்ட் மைற்ஸ் (dust mites) என்ற நுண்ணு யிரிகளை அகற்றுவது இலகுவான காரிய மல்ல.

இந்த டஸ்ட் மைட்ஸ் என்பன அராக்னிட்ஸ் என்ற குடும்பத்தைச் சேர்ந்த எண்கால் நுண்கிருமிகளாகும். ஓரளவு வெப்பமான, ஈரப்பதனுள்ள இடங்களில் இவை பல்கிப் பெருகும் வல்லமை கொண்டன. பொது வாக 70 பாகை பரன்ஹைட் வெப்பநிலை யும் 75-80 வீதம் சாரீரப்பதனும் கொண்ட சூழலில் இவை வாழக்கூடியன. ஈரப்பதன் 40-50 வீதத்துக்குன் குறைவாகின்றபோது இவை இறந்துவிடுகின்றன. கனடாவில் பொதுவாக 10 வீதமான மக்களும் 90 வீத மான தொய்வு நோயாளிகளும் இந்த டஸ்ட் மைற்ஸ் கிருமிகளுக்கு ஒவ்வாமை கொண் டவர்கள். 45வீதமான தொய்வுநோய் கண்ட இளைஞர்கள் இக்கிருமிக்கு ஒவ்வாமை கொண்டவர்களெனக் கணிக்கப்பட்டுள்ளது. பொதுவாக தலையணைகளில் காணப்படும் இக்கிருமிகளின் உடற்கழிவுகளே ஒவ்வா மைக்குக் காரணமாகின்றன என்று மருத்து வர்கள் கூறுகிறார்கள். தலையணை, மெத்தை, கம்பளம் ஆகியவற்றில் காணப் படும் இக்கிருமிகள் வீடு துப்புரவாக்கும் போது காற்றில் மிதக்கவாரம்பிக்கும். தலை யணையில் முகம் புதைத்துக் கொண்டு நித்திரை கொள்ளும் மனிதர்கள் பெரும்பா லும் இக்கிருமிகளுக்கு ஒவ்வாமையை உரு வாக்கிக் கொள்கிறார்கள். இவர்களது வாழ்வில் மூன்றிலொரு பங்கு மூக்கடைப் போடு கழியும் என்கிறார்கள்.

ஒரு கிராம் தூசியில் ஏறத்தாழ 19,000 டஸ்ட் மைற்ஸ் இருக்கிறதெனவும், சராசரி யாக 100 தொடக்கம் 500 கிருமிகள் ஒரு கிராமில் (ஒரு பேப்பர் கிளிப்பின் எடை ஒரு கிராம்) இருக்கின்றன வென்றும் ஆய்வுகள் கூறுகின்றன. ஒவ்வொரு கிருமியும் 30 நாட் கள் உயிர்வாழும். மனித சருமத் துகள் களையும் பொடுகுகளையும் உண்டு இவை உயிர்வாழுகின்றன. இவற்றுக்கு ஒவ்வாமை கொள்ளாதோரை இவை துன்புறுத்தமாட்டா. சாதாரண கிருமி நாசினிகளால் இவற்றை அழிக்க முடியாது. ஈரப்பதனற்ற வீட்டில் இவை உயிர்வாழ மாட்டா.

> “கம்பளத்தினுள்ளும், தலையணைகளிலும், மெத்தைகளிலும் மறைந்துறையும் டஸ்ட் மைற்ஸ் (dust mites) என்ற நுண்ணுயிரிகளை அகற்றுவது இலகுவான காரியமல்ல.”

## பூஞ்சணப் பொடி

இவை பொதுவாக வெளிக் காற்றிலேயே இருக்கின்றன. இருப்பினும் சரியான வாழ் நிலையைக் கொண்டிருக்கும் வீடுகளினுள் ளேயும் இவை விருத்தியடையும். இவை 50 வீதத்துக்குமேல் ஈரப்பதனுள்ள வீடுகளிலும், அவை பற்றிக்கொள்ள ஏதுவான பலகை கள், சட்டங்கள், சுவர்களுமுள்ள இடங்க ளிலும் பொதுவாக வாழ்கின்றன. மரம், துணி போன்றபொருட்கள் இவற்றை மிகவும் கவர்கின்றன.கண்ணுக்குத் தெரியாத பொடி களைக் காற்றில் பரப்புவதன் மூலம் அவை பரம்பலடைகின்றன. இப்பொடிகளும் மேற் சொன்ன ஒவ்வாமையை உருவாக்குகின றன.

## கரப்பான் பூச்சிகளின் எச்சங்கள்

பலவீடுகளில் நுண்ணிய கரப்பான் பூச்சியின் துகள்களும் காற்றின் வயப்பட்டிருக்கும் போது சுவாசத்தினூடு புகுந்து ஒவ்வாமை யை உருவாக்குகின்றன. பழைய, பன்மா டிக் கட்டிடங்களில் இவை வெகு சாதாரண மாகப் பெருகும். உணவும், ஈரப்பதனும் இவற்றின்பெருக்கத்துக்கு அவசியமானவை. இவற்றை ஒழிப்பது சிரமம்.

வட அமெரிக்காவில் டஸ்ட் மைற்ஸ் பிரச்சி னைகள் யூலை, ஆகஸ்ட் மாதங்களில் உச்சமாகவிருக்கிறதென்றும் டிசம்பர் மாதத் தில் ஒவ்வாமை உச்சநிலைக்குப் போகிற தென்றும் அறியப்படுகிறது. அதே வேளை பூஞ்சணப் பொடிகளினால் வரும் ஒவ்வாமை கோடை காலங்களில் உச்சநிலக்குப் போகி றது. கரப்பான் பூச்சியினால் வருகின்ற ஒவ்வாமை பருவ காலங்களுக்கேற்ப வேறு படுவதில்லை.

வெப்பக் காற்றினால் சூடேற்றும் வீடுகளில் (Forced Air Heating Systems) காற்றுடன் இந் நுண்ணுயிரிகள் பறந்து வந்து சுவாசத் தில் சேர்கின்றன. இதனால் ஒவ்வாமை வியாதியுள்ளவர்கள் தமது வீடுகளில் சுடு நீரிலான வெப்பமாக்கும் முறைகளையோ அல்லது மின்சார சூடாக்கும் சாதனங்க ளைப் பாவிக்கிறார்கள் (Hot Water Radiator systems or Electric Baseboard Heating).

உங்களுக்கு ஒவ்வாமையோ அல்லது நிர்ப் பீடனக் குறைபாடு சம்பந்தமான வியாதிகள் இருக்கலாமென்று சந்தேகித்தால் அது சம்பந்தமான மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.சருமப் பரிசோதனை செய்வதன் மூலம் அவர் ஒவ்வாமைக்கான காரணத் தைக் கண்டுகொள்வார். சில வேளைகளில் இரத்தப் பரிசோதனைகளையும் செய்து கொள்ள வேண்டி ஏற்படலாம்.

உங்கள் ஒவ்வாமைக்கு காரணமென்ன வென்று கண்டுபிடித்ததும் அக் கிருமியை ஒழிப்பதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும். டஸ்ட் மைட்ஸ் போன்ற கிருமி களை ஒழிப்பது இலகுவில்லை எனினும், பின்வரும் சில நடைமுறைகளினால் இக் கிருமிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்.

- பருத்தி ஆடைகளையோ, அவற்றினா லான தலையணைகளையோ பாவிக்கது செயற்கையான (synthetic) ஆடைகளை அல்லது துணிவகைகளைப் பாவியுங் கள். மெத்தைகளைப் பிளாஸ்டிக் அல் லது ரப்பர் மூலமான உறைகளினால் மூடிவிடுங்கள். கழுவக்கூடிய போர்வைக ளைப் பாவியுங்கள். அடிக்கடி கொதி நீரில் கழுவுங்கள்.
- ஈரப்பதனை அகற்றும் dehumidofier சாத னங்களைப் பாவித்து அறைகளுள் ஈரப்ப தனைக் குறையுங்கள்.Humidifiers அல் லது Vaporizers சாதனங்களைப் பாவிப்ப தைத் தவிருங்கள்.
- Cheese Cloth எனப்படும் வடிகளை வெப் பம் வரும் துவாரங்களில் வைத்து தூசி களை வடிகட்டுங்கள்.
- ஆடைகளை வெளியில் தூக்காது அதற் கான closet களில் போட்டு கதவுகளை மூடிவிடுங்கள்.
- Stuffed animals வகையான பொம்மை களை அப்புறப்படுத்துங்கள்.
- வளர்ப்புப் பிராணிகளைப் படுக்கையறை களுக்குக் கொண்டு பேகாதீர்கள்.
- வீட்டை அடிக்கடி மிகவும் கவனமாகத் துப்புரவாக்குங்கள். அடிக்கடி vaccum cleaner களைப் பாவித்து தூசிகளை அப்புறப்படுத்துங்கள். முக மூடிகளைப் போட்டுக்கொண்டு வீடுகளைத் துப்புர வாக்குவது நல்லது.
- படுக்கையறைகளில் கம்பளத்தை அகற் றிவிட்டு பலகை நிலங்களை அமைப்பது நல்லது.
- தூசியைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்களை அகற்றுங்கள். மரத்தினா லான அல்லது தோலினாலான தளபா- டங்களை உபயோகியுங்கள்.
- குளிர் சாதனத்தைப் பாவித்து வீட்டினுள் ஈரப்பதனை 50 வீதத்துக்கும் குறைவாக விருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள்.
- டஸ்ட் மைட்ஸ் கிருமிகளைக் கொல்ல வல்ல கிருமிநாசினிகள் இருக்கின்றன வென்றாலும் அவற்றினால் பல இதர தீய விளைவுகளும் ஏற்படலாம். கட்டுப் பாடற்ற பாதிப்புள்ள இடங்களில் மட் டுமே இந்நாசினிகளைப் பாவிப்பார்கள்.
- Benzyl benzoate என்ற ஒருவகைப் பவுடர் கம்பளங்களில் தூவி விட்டு 8-12 மணித்தியாலங்களின் பின்னர் vaccum செய்வதன்மூலம் அதை அகற்றி விட லாம். இதனால் இந்நுண் கிருமிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

■ ■ ■

GP TELECOM

இரமணன் திரு

(முன்னாள் பெல் கனடா, ரோஜேர்ஸ் ஊழியர்)

For Your Business We

- Install, Repair, Sell
- Meridian Phone Systems & System Phones
- Structured Voice & Data Cabling
- Install, Repair Home Phone Wiring
- TV Cable (RGB)
- Network Cable

உங்கள் அழகிய வீட்டில் பழுதுகள் ஏதும் ஏற்பட்டாமல்
சுவர்களுக்கு உள்ளால் வயர் எடுத்து கொடுக்கப்படும்

416.203.0344





# COMMERCIAL MORTGAGE

- Commercial Interest starts from 5.5%
- New Business Loans
- Bussiness Loans
- New Plazas

## இலவச ஆலோசனையுடன் வீட்டுக்கான கடனுதவிபெற

- Ist & 2nd Mortgage
- Commercial Mortgage
- Re-Finance to get rid of your loans
- Bridge Financing
- Cottage Properties Financing
- Up to 90% LTV
- Non-Permanent Residents
- Rental Properties Financing
- Self-Employed
- No Money Down Mortgage



**K.N. KANNAN**

Mortgage Consultant

**Montréal: 1-514-787-9486**

**Tel: 416-854-6183**

Office: 416.273.8232

Fax: 416.214.1999

inviskana@gmail.com, www.invis.ca

HSBC The world's local bank

FIRST NATIONAL FINANCIAL LP

INTERBAY FUNDING, LLC

2857 Lawrence Ave. E, Suite 11, Scarborough, ON M1P 2S9

90 Kennedy Rd. S., Unit C, Brampton

Head Office: 701 Evans Ave., Suite 600, Toronto, On M9C 1A3

## 'வீடு' வரை உறவு! 'வீதி' வரை மனைவி!

# 'காடு' வரை பிள்ளை! 'கடைசிவரை' காப்புறுதி!



சக்திவேல்
- ஆயுட் காப்புறுதி முகவர் -

**தொடர் - 5**

### (2) முதியோரைக் காரணம் காட்டி தேர்ந்தெடுக்கும் திட்டம்.

நீங்கள் தங்கியிருக்கும் வீட்டில் உங்கள் வயது முதிர்ந்த பெற்றோரும் தங்கியிருப்ப வர்களாயின் அல்லது நீங்கள் இருவருமே (அ-து கணவன், மனைவி)முழுநேர வேலை பார்ப்பவர்களாக இருப்பின் அல்லது நீங்கள் இருவருமே வேலைபார்ப்பவர்களாக உங்க ளுக்கும் இளம் பிள்ளைகள் இருப்பார்களே யாயின் நீங்கள் வேலைக்குப்போய் வீடு திரும்பும்வரை"அன்றாட சம்பளமற்ற" அத்தி யாவசியமான சகல வீட்டு வேலைகள், பிள்ளைகளின் படிப்புவிடயங்கள் அத்தனை யையும் கவனிப்பவர்கள்,அநேகமாக வயது முதிர்ந்த பெற்றோர் என்பது மறுக்கமுடி யாத விடயமாகும். அத்தருணம் இந்த முதி யோர் அன்றாடம் என்னென்ன பிரயோசன மான வேலைகள் செய்கிறார்கள் என்று சற்று சிந்தித்துப்பாருங்கள். இப்படிச் செய்து கொண்டு வருகையில் திடீரென இந்த முதி யோருக்கு திடீர் மரணம் அல்லது நிரந்தர ஊனம் ஏற்படுமாயின் அது உங்களுக்கு "செலவு" என்ற முறையில் மாதாந்தம் எவ்வளவு தொகை அதிகரிக்கும்செலவைக் கொடுக்கப் போகிறது என்று சிந்திப்போமே யானால் அதன் காரணமாக நீங்கள் பகுதி நேர வேலையைதேடும் பழு ஏற்படும் அல் லது வேலையை முற்றாகவே அறவே நிறுத்த வேண்டிவரும் சூழ்நிலை உருவா கும். இதன் விளைவாக திடீர்ப்பண நெருக் கடி ஏற்படும் என்பதும் தெட்டத்தெளிவாகும். உதாரணமாக இந்த முதியோர் செய்யும் சகல சம்பளமில்லாவேலைகளுக்கும் அவர் கள் மரணத்தைத் தொடர்ந்து அந்த சகல விதமான வேலைகளைச் செய்வதற்கான செலவு டொலர் 750 ஆக இருப்பின் இந்த வருடாந்தச் செலவு டொலர் 9,000 ஆகும். இந்த டொலர் 9,000 வருடா வருடம் தேவைப்படுவதற்கு ஏறத்தாழ டொலர்90,000 ($90,000 @ 10 % = $ 9,000) ரொக்கமாகத் தேவைப்படும். இந்தத் தொகைக்கு மேற் கூறிய காரணங்களை நம்பத்தகுந்தமுறை யில் எழுதி வயோதிபருக்கு ஆயுட் காப்புறு திக்கு மனுச்செய்யலாம். இதையே ஆங்கி லத்தில் "Insurable Interest" என அழைக்கி றோம். இந்த ஏற்பாட்டின் மூலம் மருத்துவ ரீதியாகவோ அல்லது மருத்துவ ரீதியின் றியோ (அவர்களது தேகநிலையைப் பொறு த்து) மனுச் செய்யலாம். மருத்துவரீதியின்றி டொலர் 275,000 வரை காப்புறுதிக்கு மனுச் செய்யலாம் என்பதும் சராசரி ஆணின் ஆயுட்காலம் 76, பெண்ணின் ஆயுட்காலம் 82 என்பதும் குறிப்பிடத்தக்கது. சம்பளம் போதாத காரணத்தால் இந்த ஏற்பாட்டைச் செய்வதற்குப் பணக்கட்டுப்பாடு இருக்குமே யானால் பிள்ளைகளுக்கு அரசாங்கத்தால் கொடுபடும் மாதாந்த சலுகைப்பணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ (உங்கள் வரவு, செலவுகளைப் பொறுத்து) உபயோகித்து வாரிசுதாரராக உங்களையும் நீங்கள் உயிரோடு இல்லாதபோது உங்கள் பிள்ளைகளையும் வாரிசுதாரராக நியமித்து இந்தப் பிள்ளைகளின் வயது 21வரை இவர் களுக்கு 'உங்களுக்கு நம்பிக்கையான"நபர் ஒருவரைப் பாதுகாவலாராக(Trustee)நியமிப் பதன் மூலம் மன ஆறுதல் திட்டமாக பெற் றுக் கொள்ளலாம்.

அண்மைக்காலமாக எம்மவரிடையே வயது முதிர்ந்தோரிலும்பார்க்க வயது குறைந்தவர் களின் மரணம் சற்று அதிகரித்துக் கொண்டே வருவதனால் வயது முதிர்ந்தோ ரின் காப்புறுதித் திட்டத்திற்கு மாதா மாதம் பணம் செலுத்துபவர் தனது திடீர் மரணம் அல்லது நிரந்தர, ஊனமுற்று இருக்கையில் இந்தக் கட்டுப்பணத்தை அவரது வயது '60" வரும்வரை காப்புறுதி நிறுவனமே பொறுப் பேற்கும்படியான ஒழுங்குமுறையினைக் கையாளலாம். இதனையே "Payor's Disability and Death Benefit" என ஆங்கிலத்தில் அழைக்கிறோம். இந்த ஒழுங்குபாட்டை எனக்குத் தெரிந்தவகையில் இரண்டே இரண்டு நிறுவனங்கள் மட்டுமே வழங்கு கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த ரீதியில் அண்மையில் எனது மூலமாகக் காப்புறுதி செய்யப்பட்ட 3 வயோதிபரின் வாரிசுதாரர் முறையே 2 வருடம் 1 வாரம், 2 வருடம் 9 மாதம், 6 வருடம் 2 மாதத்தில் காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். அவர்களுக்குக் கிடைத்த பணம் முறையே டொலர் 30,000, டொலர் 75,000, டொலர் 25,000 ஆகும். இந்தத் திட்டங்கள் மருத்துவ ரீதியிலும், மருத்துவ ரீதியின்றியும் கொடுபட்ட காப்புறுதித் திட் டங்கள் என்பதும் கட்டிய தொகைக்குப் பெற்ற இழப்பீட்டுப் பணத்திற்குமான விகி தம் 100 வீதத்திற்கு மேற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த இழப்பீடு வருமானவரியின்றி கிடைக்கும் பணம் என் பதும் இது ஏறத்தாழ முறையே டொலர் 40,000, டொலர் 100,000, டொலர் 33,000 ஆகிய சாதாரண சேமிப்புக்கு நிகரானது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே பெறும தியை எந்த சேமிப்புத் திட்டம் கொடுக்கும் என்பதனையும் கருத்தில் கொள்ளவும்.

> "அண்மைக்காலமாக எம்மவரிடையே வயது முதிர்ந்தோரிலும் பார்க்க வயது குறைந்தவர்களின் மரணம் சற்று அதிகரித்துக் கொண்டே வருகின்றது?"

### (3) காப்புறுதி நிறுவனங்களால் கொடுபடும் சேமிப்புத்திட்டம்

இந்தத் திட்டத்தின் கீழ் பெற்றோராகிய உங்களில் சம்பளம் குறைவாக உள்ளவர் சேமிப்புத் திட்டத்தின் முகாமையாளராகவும் அவர் உயிரோடு இல்லாதபோது அவரின் துணைவர் இரண்டாவது முகாமையாளரா கவும் இருக்கலாம் அல்லது இருவரது பெயரினைக் குறிப்பிட்டு 'In Trust' என்ற ரீதியில் சேமிப்புத் திட்டத்தை ஆரம்பித்து பிள்ளைகளின் பெயர்களை 'Annuitants' என்று நியமித்து சாதாரண சேமிப்புத் திட் டங்களை ஆரம்பிக்கலாம் (வருமானவரி யின்றி வளரும் சேமிப்பு அல்ல) காரணம் பெற்றோர் என்றமுறையில் பாகுபாடு இன்றி பிள்ளைகளுக்கு சரிசமனான படிப்புவசதி களைத் தாம்செய்ய முயற்சிப்பார்கள்.இதில் வளரும் வட்டிவீதம் வருமானவரிக்கு உட் பட்டது என்ற காரணத்தினால்த் தான் குறைந்த சம்பளம்உள்ளவர் முகாமையாள ராக இருக்க வேண்டும் ஏனெனில் அவரின் வருமானவரி குறைவாக இருக்கும். இரு வரும் தங்கள் பெயரோடு 'In Trust' ஆக இத்திட்டத்தினை ஆரம்பித்தாலும் வருமான வரியில் அதிகம் கட்ட வேண்டிய அவசிய

27ம் பக்கம் பார்க்க...


## சக்தி என்றால் காப்புறுதி



1983ஆம் ஆண்டிலிருந்து காப்புறுதித்துறையில் முழுநேர நெறியான சேவை

"சகல காப்புறுதி நிறுவனங்களினதும் பிரதிநிதி"

- பாரபட்சமின்றி எந்த நிறுவன திட்டமாக இருப்பினும் தெளிவான துல்லியமான இலகுவில் கிரகிக்கும் வண்ணம் விளக்கம்.
- 9000 இற்கும் மேற்பட்ட திருப்திகரமான வாடிக்கையாளர்கள்
- 90க்கும் மேலான துரித காப்புறுதி இழப்பீடுகள்.
- எனது வாடிக்கையாளர் பட்டியலில் ஒருசில
  - வருமான வரி இலாகா, கணக்கியல் சோதனையாளர்கள் (Revenue Canada Auditors).
  - நிதியமைச்சு அதிகாரிகள் (Ministry of Financial Services).
  - காப்புறுதி பிரதிநிதிகள், அவர்கள் குடும்ப அங்கத்தவர்கள், முதியோர், சிறார்கள்,
  - பிரபல வர்த்தகர்கள், குடும்பத்தவர்கள்,
  - பிரபல எழுத்தாளர்கள்,
  - வைத்தியர்கள்,
  - வழக்கறிஞர்கள்
- 85 வயதுக்குட்பட்ட எவருக்கும், எச்சூழ்நிலையிலும், நிச்சயமாக காப்புறுதியளிக்கும் திறமை (நிறுவனங்களின் நிபந்தனைப்படி)
- எக்காப்புறுதித் திட்டமாக இருப்பினும், விளக்கத்துடன் மன ஆறுதல் திட்டமாக பெற்றிட தயங்காமல் நாடுங்கள்
- மருத்துவ ரீதியின்றி 275.000 வரை காப்புறுதி


## - சக்திவேல் -

தொலைபேசி: **416.706.3530, 905.428.9299, 905.763.8912**
Fax: 905.428.9307 Email: george14@sympatico.ca

**மன்னிக்கவும்!**
வாகனக் காப்புறுதி (Car Insurance), தீ காப்புறுதி (Fire Insurance) செய்வதில்லை!



## திருப்தியான இல்லம்; முழுமையான சந்தோஷம்



**Thavaraj Logasundaram**
Sales Representative
*thavarajl@yahoo.ca*
***Cell: 416 277 1453***

**HomeLife/Future Realty Inc.** Brokerage
*Independently Owned and Operated, REALTOR ®*
262 Markham Road, Scarborough
Ontario, M1J 3C5
Tel: **416.264.0101**
Fax: **416.261.1519**

வியாபார, வர்த்தக நிலையங்கள், காரியாலயங்கள்....
விற்பனைக்கு, வாடகைக்கு.....

# Markhamack Centre
## Price list



| Units No. | Level | Suite No. | Currently Assigned Exclusive Use | Saleable Sq.Ft | Sale Price | Lease Price |
|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 2 | Beauty Salon | 1,248 | - | $28+TMI |
| 3 | 1 | 3 | Travel Agency | 1,248 | - | $26+TMI |
| 4 | 1 | 4 | Florist Shop | 1,248 | $410,592 | $25+TMI |
| 7 | 1 | 7 | Pharmacy | 1,062 | $372,500 | $30+TMI |
| 8 | 1 | 8 | Walk-in Clinic | 1,016 | $361,500 | $30+TMI |
| 9 | 1 | 9 | Convenience Store | 1,010 | $359,900 | $30+TMI |
| 10 | SOLD | 10 | Pizza Store | 1,492 | $468,900 | -- |
| 11 | 1 | 11 | Dollar/Discount Store | 1,512 | -- | $27+TMI |
| 12 | 1 | 12 | Grocery Store | 3,452 | $964,224 | $25+TMI |
| 13 | 1 | 13 | East Indian Sweets | 3,463 | $966,456 | $25+TMI |
| 14 | SOLD | 14 | bakery | 1,233 | -- | $24+TMI |
| 16 | SOLD | 16 | Chinese Restaurant | 1,209 | $411,060 | $28+TMI |
| 17 | 1 | 17 | East Indian Rest. | 1,284 | $436,560 | $28+TMI |
| 1 | 2 | 201 | Audiology | 811 | $204,900 | $18+TMI |
| 4 | 2 | 204 | X-Ray / Ultrasound | 1,013 | $234,900 | $18+TMI |
| 5 | 2 | 205 | Blood Lab | 998 | $209,900 | $18+TMI |
| 6 | 2 | 206 | Physiotherapy | 1,556 | $344,900 | $18+TMI |
| 9 | 2 | 209 | Office Use | 1,001 | $180,000 | $16+TMI |


**Markham & Major Mac**

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED



Call Right Now ! & Book the Appointment.....

**SIVA KANDIAH**
Sales Representative
**CELL: 416 301 9540**
**BUS: 416 284 4751(24 Hrs)**




**-Hey ! This Guy Can Do It Better-**

# Looking out for your best interest™

**Looking** for a

## Mortgage?

call 416.548.8000 now...



**Myuran Ramachandran**
Mortgage Consultant

CENTUM™
One Financial Group Inc.

**Bus: 416.548.8000 • Fax: 416.548.8001**

*Each Office is Independently Owned And Operated*

# ‘வீடு’ வரை உறவு! ‘வீதி’ வரை...

25ம் பக்கத் தொடர்ச்சி...

மும் ஏற்படமாட்டாது. அத்துடன் ‘காப்புறுதி நிறுவனத்தால் கொடுபடும் சேமிப்புத் திட்டம் காப்புறுதி செய்யப்பட்ட சேமிப்புத் திட்டம்” (அ-து Insured Savings). அத்துடன் 2வருடம் தாண்டியதும் இந்தச் சேமிப்புத் திட்டத்தினை உங்களைத் தவிர வேறு எவரும் எக்காரணம் கொண்டும் அபகரிக்க முடியாது. ஆனால் வங்கிகள், பிரத்தியேக நிறுவனங்களைப் பொறுத்தவரை இந்தப் பாதுகாப்புகள் கிடையாது. சேமிப்புத் திட்டங்கள், அதன் வளர்ச்சி விதம் ஏறத்தாழ ஒன்றாக இருப்பினும் காப்புறுதி நிறுவனங்கள் மூலம் கொடுபடும் சேமிப்புத் திட்டங்கள், ‘Segregated Funds’ என்றும் இரண்டாவது வகை ‘Mutual Funds’ என்றும் அழைக்கப்படும். இந்த மாதிரியான திட்டங்களை ஆரம்பிக்கும்போது பல்வேறு சேமிப்பு வளர்ச்சித் திட்டங்கள் அடங்கிய சேமிப்புத் திட்டமாக (Diversified Portfolio) ஆரம்பிப்பின் நிச்சயமாக இது ஒருபோதும் குலையாத, தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் திட்டமாக அமையும் என்பதும் குறிப்பாக காப்புறுதி நிறுவனங்களைப் பொறுத்தவரை பின்வரும் காரணிகளை உறுதிப்படுத்தும் மனஆறுதல் திட்டத்தை அளிக்கும் திட்டமாக அமையும் என்றால் மிகையாகாது.


1. Death Benefit Guarantee
2. Probate Bipass Guarantee
3. Creditor Proof Guarantee
4. Stock Market Guarantee
5. Bonus Guarantee + Market Resetting Guarantee ( ஒரு சில நிறுவனங்கள் மட்டுமே இதை உறுதிப்படுத்தும்)

மேற்கண்ட காரணிகளை “Mutual Funds” உறுதிப்படுத்தமாட்டாது என்பதும், காப்புறுதி நிறுவனங்கள் எப்போதும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பிலும் மாகாண அரசாங்கத்தின் கண்காணிப்பிலும் இயங்குவதனால் ஒருபோதும் எக்காரணத்தினையிட்டும் நிறுவனம் திடீரென மூடி உங்களை ஏமாற்றத்திற்கு உட்படுத்தாது என்பதும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அதே நேரம் இந்தவிதமான கெடுபிடியான கண்காணிப்பு வேறு ஒரு பிரத்தியேக நிறுவனங்களிலும் நிதி நிறுவனங்களிலும் கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட சேமிப்புத்திட்டங்கள் எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதனால் எத்தருணத்திலும் உங்கள் கையெழுத்து இட்ட விண்ணப்பம் மூலம்தான் பிள்ளைகளுக்குப் பணம் சேருமேயொழிய பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி பணத்தை எடுக்கமுடியாது. காரணம் முகாமையாளர் நீங்களேயொழிய பிள்ளைகளல்ல.

## (4) வதியும் வீட்டை அடமானமாக வைத்து செயற்படும் சேமிப்புத் திட்டம்.

ஏற்கனவே முன் இதழ்களில் குறிப்பிட்டபடி உங்கள் அடமானக்கடனை இருவாரத்திற்கு ஒருமுறை துரிதமாகப் பணம் செலுத்தி (accelerated Biweekly) வந்தால் ஏறத்தாழ 16 வருடத்திலேயே அடமானக் கடனைக் கட்டி முடித்துவிடலாம். அதே நேரம் உங்களுக்குக் கிடைக்கும் மாதாந்த சலுகைப் பணத்தினையும் வதியும் வீட்டு அடமானக் கடனைக் கட்டி முடிப்பதற்கு பிரயோகப் படுத்தினால் கிடைக்கும் சலுகைப் பணத்தைப் பொறுத்து, இந்தச் சலுகைப் பணத்திலிருந்து இந்த முறையினை கையாளுவதற்கு ஒதுக்கக்கூடிய கொகையினைப் பொறுத்து 10வருடத்திலிருந்து 14 வருடத்திலும் கடனை முடித்துக்கொள்ளலாம். அத்துடன் ஆரம்ப காலத்திலேயே அடமானக் கடனுக்கான 20 வருட தவணைக்காப்புறுதியையும் எடுத்து வைப்பதனால் பிள்ளைகளின் படிப்பு அல்லது எந்த முக்கிய தேவைகளுக்கும் ‘அடமானக் காப்புறுதியை பணயமாக வைத்து வங்கியிலிருந்து தேவையான தொகையை வருமானவரியின்றி மீளப்பெறலாம். இந்த ஒழுங்குபாட்டைப் பின்வரும் வரைபடம் தெளிவாக எடுத்துக்காட்டும் என்பது எனது நம்பிக்கை.




இந்தத் திட்டம் எப்போதும் ‘உங்கள் கட்டுப்பாட்டுக்குள்”இருப்பதால் இதன்படி உங்கள் பிள்ளைகளின் அறிவுத் திறனுக்கு ஏற்ப தேவையான தொகையை வங்கியிலிருந்து வீட்டு அடமானக் கடனை அடமானமாக வைத்து தேவையானதொகையை வருமான வரியின்றி மீளப்பெறலாம் இந்தப் புதிய கடனை எடுத்தபின் அடமானக்கடன் கால வரையை(Amortisation) நீடிப்பதன் மூலம் மாதாந்தம் குறைந்த தொகையை நீங்கள் கட்டலாம். பிள்ளைகளும் வேலை பார்க்கும் போது அதனை தொடர்ந்து கட்டிக் கொண்டே அடமானக் கடனை தீர்த்து முடிக்கலாம். இந்த ஒழுங்குபாட்டை ஏற்படுத்திய பின் உங்களுக்கு எப்பவும் மரணம் ஏற்படும்போது ஆரம்ப வீட்டு அடமானக் காப்புறுதி, வாரிசுதாரராகிய உங்கள் பிள்ளைகளை வருமானவரியின்றிச் சென்றடையும். அத்துடன் இந்த அடமானக் காப்புறுதி மருத்துவ ரீதியாக தவணைக் காப்புறுதியாகச் செய்திருந்தால் பிள்ளைகளும் உங்கள் வயது “70” வருமுன் எப்போதும் ஆயுள்கால காப்புறுதியாக மாற்றி, வருமான வரியின்றி காப்புறுதி இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம். காரணம் **“மரணம்”, “வருமானவரி”** ஆகிய இரண்டுமே ஒருவரின்வாழ்க்கையின் நிச்சய காரணிகளாகும்.

தொடரும்…

■ ■ ■

தாய் வீடு
THAIVEEDU
உள்ளும் புறமும்

**வீடு பத்திரிகையில் விளம்பரம் செய்வீர். வணிகத்தின் எல்லைகளை விரிவாக்குவீர்!**

416-400-6406



# நல்ல வீட்டில் குடிபுகுவோம்!

• வீடு வாங்குதல் • வீடு விற்றல் • வீட்டிற்கான ஈட்டுக்கடன்

முதலீட்டாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

**காணி வாங்கி வீடு கட்டுதல்!**
ஒன்ராறியோ Building Code ற்னமைய
காணி வேண்டி வீடு கட்டுதல்
-ரெரரன்டோ அல்லது அதன் புறநகர்ப்பகுதிகள்-

**Cottage கட்டுதல்!**
உங்கள் விடுமுறையை
உல்லாசமாகக் களித்திட
காணி வாங்கி Cottage
கட்டுதல்

**தோட்டக்காணி வாங்குதல்!**
Farm Land Opportunities
Custom Built Homes
காணிகள் விற்பனைக்கு உண்டு


- B.Eng (Hons) London UK
- Environmental Management Post Graduate Diploma - Construction- Niagara College
- Project Management - George Brown College
- Ontario Building Code - Part 9
- C.E.T - Road Construction Senior Inspector - MTO Designation



**Varatharajah Kandasamy**
Sales Representative
Dir: 647•898•2991
Off: 416•759•6000

VEEDU
REALTY INC.
BROKERAGE
1345 Morningside Ave. Suite 8
Toronto Ont. M1B 5K3
Tel: 416.759.6000






**Sugumaran (Sugu) Sinniah**
(Affiliated Real Estate Agent)
**Direct : (514) 299-3186**




Connectiong tutors & students in the GTA

# BRILLIANT TUTOR @ YOUR HOME INC.

தமிழ் மாணவர்களின் நலன் கருதி அவர்களின் வீடுகளுக்கு சென்று
பாடங்களை ஒன்ராரியோ பாடத்திட்டத்திற்கு அமைய கற்பித்து வருகின்றோம்.

- SCIENCE
- CHEMISTRY
- PHYSICS
- BIOLOGY
- MATH
- CALCULUS
- ALGEBRA & GEOMETRY
- DATA MANAGEMENT
- ENGLISH
- FRENCH




**Call Kuna Today**
**416-291-4684, 905-507-8470, 647-295-5862**

We will visit your home

Over 100 Tutors

Over 1500 Students

| JK to GRADE 8 $80.00/MONTH | 1 ON 1 OR GROUP | 9 to University 2nd Year $90.00/MONTH |
|---|---|---|

Markham, Scarborough, Mississauga, Toronto, Etobicoke, Brampton, North York, East York, Richmond Hill, Ajex, Malton, New Market

digi Media - 416-467-4952

# வீட்டுக்குள் புகைவிடலாமா?

**- சிவா சுப்ரா -**

புகை விடுபவர்களைப் பார்த்திருக்கின் றீர்களா? கண்டிப்பாகப் பார்த்திருப்பீர்கள்.

உலகம்முழுவதும் ஆயிரம்மில்லின் மக்கள் புகைத்துத் தள்ளுகின்றனர். நாள் ஒன்றுக்கு பதினெட்டு வயதுக்கு குறைந்த 500 சிறுவர்கள், சிறுமிகள் தமது முதலாவது புகையை வெகு ஆனந்தமாக ஊதி விடுகின்றார்கள்.

என்ன ஒரு ஸ்டைல்? என்ன ஒரு லாகவம்? என்ன ஒரு ஆனந்தம்? நாமும் ஒரு தம் இழுத்தால் என்ன, என்று தோன்றுவதில லையா? தோன்றியிருக்குமே?.

எதற்கும் கொஞ்சம் பொறுங்கள். ஒரு விசயத்தை உங்கள் காதில் போட்டு வைக்கின்றேன்."பொதுவாக புகை பிடிப்பவர்கள், புகை பிடிக்காதவர்களை விட எட்டு வருடங்கள் முன்னதாக இறந்து போகின்றார்கள்".

புகைப்பதினால் வருடாந்தம் 440,000 பேர் அமெரிக்காவில் இறந்து போகின்றார்கள். கனடாவில் வருடம் ஒன்றுக்கு நாற்பத் தையாயிரம் பேர் இறக்கின்றனர்.

ஒரு தடவை இழுத்து விடுகின்ற சிகரட் புகையில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இராசாயனப் பொருட்கள் உள்ளன. இதில் குறைந்த பட்சம் ஐம்பதுக்கும் மேற்பட்ட நஞ்சுத்தன்மையான இரசாயனப் பொருட்கள் உள்ளன. இவை தான் இவ்வாறு மனிதர்கள் மரணிப்பதற்குக் காரணமாக உள்ளன.

Acetone Lead Aldehydes (acetaldehyde. Methyl Chloride acrolein, formaldehyde), Arsenic Methyl, Nitrate Benzene, Nicotine,Cadmium, Nitrogen Dioxide, Carbon Monoxide, Nitrosamines, Hydrogen Cyanide Phenol, Hydrogen Sulfide, Polycyclic Aromatic Compounds (tars), Ketones என்பன சில உதாரணங்கள்.

விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களின் படி புகைத்தல் இருபத்தி நான்குக்கும் மேற்பட்ட டம் தடைப்படுதல், அதிக இரத்த அழுத்தம், அதிக கலோஸ்ரோல், வாய், தொண்டை மற்றும் குரல் வளையில் புற்று நோய், சதையத்தில் புற்று நோய், சிறுநீரகம் மற்றும் சிறுநீர் பையில் புற்று நோய், எலும்புருக்கி நோய், தைரொயிட் சுரப்பியில் நோய்,பற்களில் பிரச்சனை, முரசில் நோய், Influenzo காய்ச்சல் என்பனவெல்லாம் நோய்களுடன் தொடர்பாய் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

> "ஒரு தடவை இழுத்து விடுகின்ற சிகரட் புகையில் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இராசாயனப் பொருட்கள் உள்ளன. இதில் குறைந்த பட்சம் ஐம்பதுக்கும் மேற்பட்ட நஞ்சுத்தன்மையான இரசாயனப்பொருட்கள் உள்ளன. இவை தான் மனிதர்கள் மரணிப்பதற்குக் காரணமாக உள்ளன."

சிகரட் புகைப்பவர்களுக்கு இதய நோய்கள் (உ.ம்: மாரடைப்பு), பாரிசவாதம் (Stroke), சுவாசப்பை புற்று நோய், குருதித் சுற்றோட்டம் ... ஏற்பட வாய்ப்புள்ளது.

இவற்றைவிட ஆண்களுக்கு விந்து உற்பத்தியாவதில் பிரச்சனை, பெண்களுக்கு கர்ப்பப்பையில் புற்று நோய், முட்டை உருவாவதில் சிக்கல் மற்றும் கரு சிதைவடைதல் என்பனவற்றுக்கும் சந்தர்ப்பம் உள்ளது.

அத்தோடு புகைத்தல் தோலில் சுருக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதனால் வயது போனவர்களைப் போன்ற ஒரு தோற்றத்தை இது ஏற்படுத்தி விடுகின்றது. பத்து வருட காலம் தொடர்ந்து புகைப்பவர்களின் தோல் இந்தபாதிப்பை வெளிப்படையாகக் காட்டும்.

நாவின் சுவையறியும்சக்தியையும், மூக்கின் மணம் அறியும் சக்தியையும் வெகுவாக குறைக்கின்ற தன்மையும் இந்த புகைத் தலினால் உருவாகின்றது.

சிகரட்டில் Nicotine என்கின்ற இரசாயனப் பதார்த்தம் உள்ளது. இதுவே புகைக்கும் போது ஏற்படுகின்ற இன்ப உணர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றது. ஆனால் தொடர்ந்தும் தொடர்ந்தும் ஒருவர் புகைக்கும் போது, இந்த Nicotine க்கு மனித மூளையும், உடலும் அடிமையாகி விடுகின்றன. அதன் பின்னர் இந்த Nicotine இல்லாமல் செயல்பட முடியாத நிலைமைக்கு தள்ளப் படுகின்றனர்.

"எல்லாம் தெரிந்து கொண்டுதான் நாம் இந்த புகையை விடுகின்றோம். இதனால் உமக்கு என்ன நஸ்டம்? பேசாமல் உன் வேலையைப்பார்த்துக் கொண்டு போய்யா". இவ்வாறு பலர் நினைக்கலாம்.

புகைப் பிடிக்காதவர்களுக்கு பெரிய நஸ்டம் இருக்கின்றது. அதனால் புகைப்பிடிக்காதவர்களை எச்சரிக்கை செய்யவே இந்தக் கட்டுரை எழுதப்படுகின்றது.

கனடாவில் சிகரட் புகையினால் வருடாந்தம் இறக்கின்ற நாற்பத்தையாயிரம் பேரில் ஆயிரம் பேர் புகைபிடிக்காதவர்கள். இந்த ஆயிரம் பேரில் முந்நூறு பேர் சுவாசப் புற்று நோய் காரணமாகவும், எழுநூறு பேர் இதயநோய்களாலும் இறந்து போகின்றனர்.

## புகைப் பிடிக்காதவர்கள் ஏன்? எதற்காக இறக்க வேண்டும்?

வீட்டுக்குள் வைத்து உங்கள் கணவர், தம்பி, மாமா, நண்பர்கள், உறவினர்கள் சிகரட் புகையை ஊதி ஊதி தள்ளுவதை கண்டிருக்கின்றீர்களா?

அவர்கள் ஒரு தடவை தம் இழுத்து வீட்டுக்குள் விடுகின்ற சிகரட் புகையிலும் நாலாயிரத்திற்கும் மேற்பட்ட இராசாயனப் பொருட்கள் உள்ளன. இதில் குறைந்த பட்சம் ஐம்பதுக்கும் மேற்பட்ட நஞ்சுத் தன்மையான இரசாயனப் பொருட்கள் உள்ளன. இந்த புகையை அதே வீட்டில் வாழ்கின்ற குழந்தைகளும், தாய்மாரும், தாய்மாரின் வயிற்றில் உள்ள சிசுவும் உள்ளெடுக்கின்றன. கொஞ்சம் கொஞ்சமாக இந்த நஞ்சு அவர்களின் உடலில் சேமிக்கப்படுகின்றது. இது தான் சிகரட்டை வாயிலும் வைத்தறியாத மனிதர்கள் மரணிப்பதற்குக் காரணமாக உள்ளது.

இவ்வாறு வாயில் சிகரட்டை வைத்து ஊதி புகைத்தல் செய்யாமல், வளிமண்டலத்தில் இருக்கின்ற அதே சிகரட் புகையை சுவாசிப்பது Second hand smoke (SHS) என்று அழைக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் US Environmental Protection Agency உத்தியோக பூர்வமாகவே இந்த Second hand smoke (SHS) ஐ "class A" cancer causing substance என்று முத்திரை குத்தியுள்ளது. கனடா அரசாங்கமும், கனேடிய சுகாதார மையமும் இது குறித்த போதுமான எச்சரிக்கைகளையும், பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளன. இருந்த போதும் வீட்டுக்குள் தாராளமாகப் புகைவிடுகின்றவர்கள் இன்னமும் ஏராளமாக இருக்கின்றார்கள்.

இவர்களில் சிலர் தாம் கொஞ்சம் புத்திசாலி என்று நினைத்து வீட்டுக்குள் இருக்கும் குளியல்அறையில் புகை விடுகின்றார்கள். அங்கு விடுகின்ற புகையும் வீட்டில் உள்ளவர்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றது என்பதை இவர்கள் அறியவேண்டும்.

தொடர்ச்சியான Second hand smoke (SHS) உள்ளாகின்ற குழந்தைகளில் ஐம்பது சதவீதமான குழந்தைகளின் சுவாசப்பை பாதிப்பு அடைவதுடன், சுவாசிப்பதில் சிக்கல் ஏற்பட்டு அஸ்மா(asthma)நோய் ஏற்படுகின்றது.

கனடாவில் 2001ல் மட்டும் 800,000ம் பன்னிரெண்டு வயதுக்கு குறைந்த குழந்தைகள் இவ்வாறு Second hand smoke (SHS) க்கு உள்ளாகியுள்ளனர் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தையாக உள்ள போது Second hand smoke (SHS)க்கு உள்ளாகும் குழந்தைகள், வளர்ந்து பெரியவர்கள் ஆகின்ற போது, அஸ்மா நோய் ஏற்படுகின்ற வாய்ப்பும் அதிகமாக உள்ளது என்றும் அறிவிக்கப்படுகின்றது.


Second hand smoke (SHS)ஆல் சுவாசப்பை புற்று நோய், இதயநோய்கள் ஏற்படுவதுடன், குருதி கட்டி பட்டு கட்டிகள் உருவாகி மாரடைப்பும் ஏற்படலாம். அத்தோடு இதய தசைகளும் தளர்ந்து பழுதடைகின்றன. இவற்றோடு, பதினெட்டு மாதத்துக்கு குறைந்த வயது உடைய குழந்தைகள் இந்த Second hand smoke (SHS) ஆல் படுக்கையிலேயே சடுதியாக இறந்து போகலாம்.

இத்தனைக்கும் பிறகு உங்கள் வீட்டுக்குள் யாராவது புகைப்பதை நீங்கள் அனுமதிக்கத்தான் போகின்றீர்களா?

■ ■ ■


**N.K.S**

Drapery & Blinds Fabric LTD



**திறமையான சேவையால் பல விருதுகளை பெற்ற நிறுவனம்**

உங்கள் வீட்டுக்குனுத் தேவையான சகலவித யன்னல் திரை வகைகளையும், கேட்டின் துணி வகைகளையும் மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.

**கேதா நடராஜா**

**416.321.6420**

**Ketha Nadarajah**
(President)
**Tel: 416.321.6420, 905.944.0218**
Fax: 416.321.2217
www.nksdrapery.ca

Drapery & Blinds Fabric Ltd., 210 Silver Star Blvd., Unit #825, Scarborough, ON M1V 5J9


# தமிழர் மத்தியில் புதிய நிறுவனம்

# QUICKFENCE

PARTY RENTALS & SALES

**24/7 Days a Week**


Birthdays|Weddings|Meetings|BBQ Parties|Trade Shows|Musical Events|Sport Events|Get to gether




We add more products to our inventory!!! Please visit our website!!! or Call Us for Quote!!!



| Folding Chair | Party Chair | Meeting Chair | Office Chair | Folding Table | Round Table |
|---|---|---|---|---|---|
| $1.00 | $2.00 | $3.50 | $4.50 | $7.00 | $8.00 |




**3 UPTON ROAD SCARBOROUGH ON.**
**WWW.QUICKFENCE.CA - info@quickfence.ca**
**TEL: 416 759 8222 FAX: 416 642 4922**

---

- PENS
- CLOCKS
- CALENDERS
- MEMOS
- MEASURING TAPES
- CELL PHONE STANDS
- FRIDGE MAGNETS
- B. CARD HOLDERS
- CORPORATE GIFTS
- SEASONAL GIFTS
- LASER ENGRAVING
- PAD PRINTING
- AND MORE................

# One Stop for

## TROPHIES, AWARDS AND PROMOTIONAL PRODUCTS

2007ம் ஆண்டுக்கென தமிழ்க் கலை சார்ந்த
தொழில், வியாபார விருத்தி அன்பளிப்புப் பொருட்கள்
(PROMOTIONAL PRODUCTS)
கலை சார்ந்த நிறுவனங்களுக்கும் கலை நிகழ்வுகளுக்கும்
சிறப்பு விலைகளில் கிடைக்கிறது.

புதிய அறிமுகம்

On high with your thoughts
உன்தன் எண்ணங்களோடு உயரத்தில்





**PRO MAR**
Awards & Promotions Ltd

www.promarawards.com **416-291 2344**

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

---

**The Big choice**
இல்லங்களை அழகுபடுத்த ஓர் பெரிய தெரிவு

மிகப் பெரியதும் மிக வித்தியாசமுமான வீட்டு, அலுவலக
சுவர்களை அலங்கரிக்கும் வர்ணக் கலைப் பொருட்கள்

சிறப்புத் தெரிவுகளாகவும், குறைந்த எண்ணிக்கையிலும்
இறக்குமதி செய்யப்பட்டிருப்பதால் உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்
**IN WHOLESALE PRICE FOR RETAIL**

**80 Nasdane Rd Unit C-59 416-898 4846**

# வியாபாரம் கொள்வனவும் விற்பனையும்

## (BUYING & SELLING A BUSINESS)


தங்கவேல்
M. கேசவன்
Barrister & Solicitor




வியாபாரக்கொள்வனவு சொத்துக்களையோ (Assets) அல்லது கம்பனியின் பங்குகளையோ (Shares) வாங்குவதன் மூலம் நிறை வேற்றப்படலாம். பேரம் பேசுதலின் ஆரம்பத்தில், அந்தக் கொடுக்கல் வாங்கல்களில் சொத்துகளை வாங்குவதா அல்லது பங்குகளை வாங்குவதா என்ற அடிப்படைக் கேள்விக்கு, வாங்குபவரும் விற்பவரும் பதில் கூறக்கூடியதாக இருக்கவேண்டும்.

கொள்வனவு உடன்படிக்கையை நிறை வேற்றமுன்னர், வியாபாரம் வாங்குபவர் சட்டம் மற்றும் கணக்கியல் ஆலோசனையைப் பெறுவது முக்கியமாகும். கம்பனியின் பங்குக்கொள்வனவு மூலம் வியாபாரம் வாங்கும் போது, வியாபாரத்தின் கொள்விலைக்கு அந்த கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்பவர் வாங்குகின்றார்.

சொத்துக் கொள்வனவு மூலம் வியாபாரம் வாங்கும்போது, தான் வாங்குவதற்கு விரும்புகின்ற சொத்துக்களையும் தான் ஏற்க விரும்புகின்ற பொறுப்புக்களையும் தெரிவு செய்யக்கூடிய நிலையில் கொள்வனவு செய்பவர் இருக்கின்றார்.

பொதுவாக, வியாபாரம் வாங்குபவர், மாதிரி உடன்படிக்கையை(Draft Agreement) தான் தயார் செய்து, அதில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களைக் கேட்டு விற்பவருக்கு வழங்குகின்றார். அந்த உடன்படிக்கை வியாபாரக் கட்டிட சொந்தக்காரரின் குத்தகை அங்கீகாரம், அரசாங்கத் திணைக்களத்தின் முக்கிய அங்கீகாரம் அல்லது வியாபாரம் வாங்குபவருக்குத் தேவையான கடன் அங்கீகாரம் போன்ற வேறு அங்கீகாரங்களை நிபந்தனையாகக் கொண்டு அந்த உடன்படிக்கையை மேற்கொள்ளலாம். நிபந்தனைகளை அடிப்படையாக கொண்ட உடன்படிக்கையைத் தெரிவு செய்வதற்கான காரணம்,வியாபாரம் வாங்குவதுடன் சம்மந்தப்பட்ட முக்கிய மூன்றாம் நபர்களில் தங்கி இருப்பதனாலும் அவர்களில் தங்கி இருப்பது தீர்க்கப்படும் வரை, அந்தக் கொடுக்கல் வாங்கல்களை நிறைவிற்கு கொண்டுவர ஒப்பந்தக்காரர் விரும்பாததும் ஆகும். அந்த உடன்படிக்கை ஒப்பந்தக்காரரின் உள்நோக்கத்தைப்(intention) பிரதிபலிக்கின்ற ஒரு எழுத்து வடிவான ஆவணம் என்பதுடன் அவர்களது உரிமைகளையும் கடமைகளையும் தீர்மானிக்கின்ற ஒரு சட்ட அடிப்படையாகும். வியாபாரக் கொடுக்கல் வாங்கல் உடன்படிக்கையில் உள்ளசொற்களுக்கு வர்த்தக ரீதியான அர்த்தங்கள் கொண்ட எளிமையான, சாதாரண வியாக்கியானமே கொடுக்கப்படுகின்றது.

அந்த வியாபாரத்தின் சொத்து வியாபாரத்திற்குச் சொந்தமான கட்டிடமாக (Freehold Property) இருந்தால், அந்தச் சொத்தின் பதியப்பட்ட சொந்தக்காரன் (Registered Owner) வியாபாரத்தை விற்பவர்தான் எனவும், அந்த சொத்தை பாதிக்கின்ற ஈடு அல்லது பாராபந்தங்கள்(encumbrances) யாதும் இல்லை எனவும் நீங்கள் உறுதிப் படுத்த வேண்டியிருக்கும். வியாபாரத்தில் பாவிக்கப்படுகின்ற சகல இயந்திரங்கள், உபகரணங்கள் வாகனங்கள் மற்றும் அசையாச் சொத்துக்கள் என்பவற்றின் பட்டியலை வியாபாரத்தை விற்பவரிடமிருந்து நீங்கள் பெறவேண்டும். மேலும் கண்டுபிடிப்புக்கள், பதிப்புரிமைகள் வியாபாரச் சின்னங்கள், கம்பியூட்டர் Software, அனுமதிப் பத்திரங்கள் மற்றும் வியாபார ரகசியங்கள் போன்ற புலமைசார் சொத்துரிமைகளின் (intellectual property) பட்டியலையும் பெற வேண்டும். நீங்கள் கொள்வனவு செய்யவிருக்கும் வியாபாரமானது வேலை ஆட்களைக் கொண்டிருந்தால் நீங்கள் அவர்களை வியாபாரத்தில் தொடர்ந்து அமர்த்த தேவையாஎன தீர்மானிக்க வேண்டியிருக்கும். வியாபாரவிற்பனை வியாபாரக் கட்டிடத்தின் குத்தகையை மாற்றிப்பெறுவதுடன் சம்மந்தப்பட்டால், குத்தகை தொடர்பாக விற்பவர் தெரிவித்த விடயங்கள் ஒன்று என உறுதிப் படுத்த வியாபாரக் கட்டிடத்தின் குத்தகை உடன்படிக்கையை நீங்கள் மீளாய்வு செய்யவேண்டியிருக்கும்.

### குத்தகை உடன்படிக்கையில் உள்ள விடயங்கள் (terms & conditions)

குத்தகையானது மொத்தக் குத்தகையா (Gross Lease)அல்லது நிகர குத்தகையா (Net Lease), குத்தகைக் காலம், அதைப் புதிப்பிப்பதற்கான உரிமை அல்லது அதை மாற்றி எடுப்பதற்கான உரிமை என்பவற்றை உள்ளடக்கும். மொத்தக் குத்தகையும் நிகரக்குத்தகையும் ஒன்றாறியோ மாகாணத்திலுள்ள இரு வேறுபட்ட மாதிரிகளாகும் (two distinct models). இரு மாதிரிகளுக்கிடையிலான முக்கிய வேறுபாடுயாதெனில் அவை ஒவ்வொன்றும் வரிகள், பராமரிப்பு, திருத்தங்கள் மற்றும் காப்புறுதி போன்ற தொழில் பாட்டு செலவிற்கான (Operating Costs)பொறுப்பைப் பகிர்ந்தளிக்கும் விதத்தைப் பொறுத்ததாகும்.மொத்தக் குத்தகையின் கீழ், கட்டிடச் சொந்தக்காரர் மாதாந்த வாடகைக்குள் உள்ளடக்குகின்ற தொழில் பாட்டு செலவுகளைச் செலுத்துகின்றார்.

### குத்தகைக் காலத்தில் தொழில்பாட்டுச் செலவினங்கள்

அதன் கட்டிடக்காரரின் மதிப்பீட்டை விட அதிகரிக்குமாயின், கட்டிடக்காரர் அதன் மேலதிக செலவைப் பொறுக்கின்றார். உண்மையான தொழில்பாட்டுச் செலவினங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட செலவிலும் குறையுமாயின் கட்டிடக்காரன் லாபமடைகின்றார். குறிப்பிட்ட மட்டம்வரை நிச்சயபடுத்தப்பட்ட(benchmarked) தொழில்பாட்டுச் செலவினத்தைத் தாண்டி மேலதிக வாடகை (additional rent) என வாடகையாளரினால் செலுத்தப்படும் மேலதிக தொகையுடன் கூடிய பல மொத்தகுத்தகைகளும் உண்டு. நிகர குத்தகையின் கீழ், கட்டிடச் சொந்தக்காரரின் இலாபம் மற்றும் மூலதனத்தின் மீதான வட்டி கணக்கிடப்பட்டு, அடிப்படை வாடகை (Base Rent) நிச்சயிக்கப்படும். ஆனால் தொழில்பாட்டுச் செலவு மாறுபடும். நிகர குத்தகையில் வாடகையிருப்பாளர் தொழில்பாட்டுச் செலவினங்கள்

தொடர்பான முழுப்பொறுப்பையும் சுமக்கின்றார். அதன் விளைவாக குத்தகை காலத்தின் போது, அத்தொழில்பாட்டு செலவினங்கள் மீது பணவீக்கத்தின் அழுத்தம் (inflationary pressure) ஏற்படும் போது அதற்கான அதிகரிப்பிற்கு வாடகையிருப்பாளரே பொறுப்பாளியாகின்றார். மறுதலையாக, தொழில்பாட்டுச் செலவினத்தில் வீழ்ச்சி வாடகையிருப்பாளருக்கு நன்மையைத் தருகின்றது. நிலையான பொருளாதாரத்தில் எது மிகவும் விரும்பத்தக்கது என்பது பற்றி ஒரு குழப்பமான அபிப்பிராயம் வாடகையிருப்பாளரின் மத்தியில் காணப்படுகின்றது. இது தவிர, விகிதாசார வாடகை(Percentage Rent) கனடா பூராவும் உள்ள சில்லறை விற்பனை நிலையங்களுக்குப்(shopping centres & malls)பிரயோகிக்கப்படுகின்றது.அடிப்படை வாடகைக்கும் தொழில்பாட்டுச் செலவினத்திற்கும் மேலதிகமாக மொத்த வருவாயின் குறித்த விகிதாசாரத்தை வாடகையிருப்பாளர் செலுத்தவேண்டும்என்பதை விகிதாசார வாடகை தேவைப்படுத்துகின்றது. பாரிய விற்பனையும், ஆனால் சிறிய லாபமும் நிகழுகின்ற மலிவு விற்பனை மாதங்களில் (promotional months) கூட விகிதாசார வாடகையை செலுத்த வேண்டும்.

வியாபார விற்பனை நிறைவின்போது (Business Closing) ஒப்பந்தக்காரர்கள் ஒருவர் மற்றவருக்கு விற்பனைப் பணத்தையும் மற்றவர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களையும் கொடுப்பதுடன் பல்வேறு ஆவணங்களையும் பரிமாறுகின்றார்கள். மேலும் ஒப்பந்தக்காரர்கள் அத்தினத்தில் தாங்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்புக்களை நிறைவு செய்யவேண்டும்.

■ ■ ■


**KESAVAN LAW OFFICE**



- *Real Estate*
- *Business Law*
- *Immigration Law*
- *Family Law*
- *Last Wills*
- *Power of Attorney*
- *Affidavits*

சட்டம் சம்பந்தமான சகல தேவைகளுக்கும்
**கேசவன் சட்ட நிறுவனம்**

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களிலும் சந்திக்கலாம்.

**THANGAVEL M. KESAVAN**
*Barrister & Solicitor*

5200 Finch Ave. East, Unit 302, Scarborough, ON M1S 4Z5
(Middlefield & Finch)
**TEL: (416) 754-9843**
**Fax: (416) 754-2362**



**Help Wanted**

Home ADT Security Alarm வீடுகளுக்குப் பொருத்துவதற்கும்,

Sales rep, Telemarketing, Technipion போன்ற வேலைகளுக்கும்

அனுபவம்வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள்

கோரப்படுகின்றன

**416-332 1989, 647-893 4414,**

**416-302 1023.**



சிகையலங்காரம் உங்களை
மெருகூட்டுகிறது,
எமது அலங்காரம் உங்கள்
இல்லத்தை உருமாற்றுகிறது!
visit or call
www.4168316397.com
digi Media
அயலவரையும் ஆச்சரியப்படுத்த அழையுங்கள்...
Best Way
BLINDS & SHUTTERS
DISCOVER THE WORLD FROM YOUR WINDOW
www. bestwayblinds.com
bestwayblinds@yahoo.ca
FREE ESTIMATE
8 Shaddock Cres, Toronto, ON
416.831.6397, 416.269.6117




தலா 1000.00 டொலர் பரிசில்கள் நான்கினை வழங்கும்
அக்கினி குஞ்சுகள் 07
ரொறன்ரோவின் முன்னணி இசையமைப்பாளர்களின்
உழைப்பில் உருவான பாடல்களின் இசைத்திறன் போட்டி
இசையில் மனம் இசையும்
உமாரமணன் வழங்கும்
இசைக்கு ஏது எல்லை
செப்ரம்பர் 16, 2007
மாலை 6.30
சென்ரானியல் கல்லூரி கலையரங்கு
அஸ்ரொன்பே வளாகம்
வார்டன் எக்லிங்ரன் சந்திப்புக்கருகில்
TICKETS:
647.999.3353
www.isaiyarangam.com

# மரபு கலைத்தெழுந்து
# கவனமற்றுப்போன பிரதி

## நிரூபாவின் ‘சுணைக்கிது’ சிறுகதைத் தொகுப்பு பற்றிய மதிப்பீடு



தேவகாந்தன்

புலம்பெயர் புலத்தில் கவிதை பேசப்பட்ட அளவு சிறுகதையோ, நாவலோ பேசப்படவில்லையென்பது மிகவும் சரியான வார்த்தையென நினைக்கிறேன். கவிதை தனக்காக எடுத்துக்கொண்ட தீவிரத் தளம் அந்த நிலைமைக்கான காரணமாகவும் இருக்கலாம்.

‘கொரில்லா’வும் ‘வெள்ளாவி’யும் ஓரளவு நன்கு பேசப்பட்ட நாவல் வடிவங்களேயெனினும், அத்துறையில் போதுமான ஆக்கங்கள் வெளிவந்தனவெனக் கூற முடியாதே உள்ளது. புலம்பெயர் வாழ்வின் இயங்குநிலை சார்ந்த விஷயமாக இதைக் கொள்ள முடியும். இத்தகு இயங்குதளத்தில் உரைநடை சார்ந்து கருத்து வெளிப்பாட்டுக்கான வடிவமாக இருப்பது சிறுகதை. இருந்தும் வேற்றுப் புல வாழ்வின் அவதி, பிற பண்பாட்டுக் கலப்பின் முறைமைகள், ஏகாதிபத்தியப் பெருவெடுப்பில் இனங்கள், தொழிலாளர்,பெண்கள், பாலியல் தொழிலாளர், ஒருபாலின கலவியாளர், குழந்தைகள் ஆகியோரின் நிலைமைகள் பேணப்படாமை, சுற்றுச் சூழல் மாசுப்பாடு, வனவழிப்பு என பெருகும் ஆகக்கூடிய கவலைகள்கூட எடுபொருளாகாதிருக்கின்றன. மனிதன் பிறரைத் தின்று கொழுப்பதான வாழ்வியல் நிலை மாறி, தன்னையே மெல்லமெல்லத் தின்று கொண்டிருப்பதான மிகவும் மோசமான நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. எப்படி இவையெல்லாம் மறக்கப்பட முடிந்தன. ஒரு மாயையில்போல் மேற்கின் வாழ்வியலில் விழுந்துகிடக்கும் மக்கள்பற்றி ஒரு கவனமும் எழவில்லையா? இவையெல்லாம் படைப்பாக்கமாகாமற் போனமைக்கான காரணம் என்னவென்பது விசாரிக்கப்பட வேண்டிய கேள்வியேயெனினும், இங்கே அதை நான் செய்யப்போவதில்லை. இத்தகு சூழ்நிலைமையிலும் வெளிவரும் படைப்பொன்று கவனமற்றுப் போவது எதைக் காட்டுகிறது என்பதே எனது ஆதங்கம்.

மொழியின் மிக்க வீரியத்தோடும், பாசாங்குத் தனமற்ற வெளிப்பாட்டுத் திறனோடும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கிடையில் வெளிவந்திருக்கிற நூல்களில் முக்கியமானது நிரூபாவின் ‘சுணைக்கிது’ சிறுகதைத் தொகுப்பு. இதன் வெளியீடும் கருத்தாடலும் ஸ்கார்பரோ சிவிக் சென்ரறில் அப்போதே நடந்திருந்தன. நூல் கிடைத்த உடனடியாகவே அதை நான் வாசித்திருந்தேன். அந்த மொழிநடையில் எனக்குப் பிரமிப்பே ஏற்பட்டிருந்தது. அதுபற்றி எழுதவேண்டுமென்றிருந்தும், பல்வேறு காரணங்களால் அப்போது அது முடியாது போனது.

இப்போது மீண்டும் அந்நூலை வாசிக்க நேர்ந்தது. முன்னரைவிட அதிகமாக அது என்னை ஆகர்ஷித்திருக்கிறது. அதன் விளைவே எனது இந்த எழுத்து.

1)ஒரு பழம் தப்பிச்சின்னு 2) போட்டு வாறன் 3) சுணைக்கிது 4) பயந்தாங்கொள்ளி 5) கடுதாசிப்பூ 6) காதல் 7) அடி அடியாய் 8) கூட்டுக்கொலை 9) முதல்நாள் 10) மழை ஏன் வந்தது? 11) மாயமனிதன் 12) யாருடைய பிள்ளை? என பன்னிரண்டு சிறுகதைகள் இத்தொகுப்பில். பன்னிரண்டாவதை விட்டுவிடலாம். மீதி பதினொன்றிலும் முதல்கதை தன்னிலைக் கதையாய்த் துவங்க, மீதி சிலவற்றில் வெவ்வேறு பாத்திரங்களும், சிலவற்றில் ஒரே பாத்திரமே திரும்பத் திரும்ப வருவதுமாய்க் கதைகள். இவை தனிக்கதைகளாய் இருக்கும் அதே வேளையில் ஒரு நாவலின் வடிவத்தை ஏறக்குறைய அடைவதற்கான சாத்தியத்தையும் கொண்டிருக்கும். இதுதான் வடிவ ரீதியாக இதன் விசேஷம்.

இதிலுள்ள எந்தக் கதையாவது சிறுகதை வடிவத்தை அடைந்திருக்கிறதா என்றால் சிறப்பான பதிலொன்று வர நியாயமில்லை. ஆனால் அண்மைக்காலமாய் நம் தமிழ்ப் பரப்பில் விளங்கும் குதர்க்கமான கேள்வி போல் இங்கேயும் கேட்கப்பட முடியும். ஏன், இது சிறுகதையில்லையா? சிறுகதையின் வடிவத்தைத் தீர்மானிப்பது யார்? விமர்சகனா, வாசகனா, படைப்பாளியா? மூன்று பக்க சின்னக் கதையை எழுதிவிட்டு சிறுகதையென்பாரும் நம்மிடையே இருக்கிறார்கள். முன்னூறு பக்கச் சிறுகதையையே தாகூர் எழுதவில்லையா என்று முப்பது பக்கச் சிறுகதையை எழுதுபவர்களும் இருக்கிறார்கள். ஒரேமூச்சில் வாசித்துவிடக்கூடிய கதையையே சிறுகதை என எட்கார் ஆலன்போ கூறியதைச் சொல்லி சிறுகதை வடிவத்தை வரையறுப்பாரும் உண்டு.




சிறுகதைக்கான இலக்கணங்கள் மதிக்கப்படவேண்டும்தான். இலக்கணங்கள் இன்றி இலக்கியம் கணக்கிலெடுக்கப் படுதல் தவிர்க்கப்படவேண்டும் தான். ஆனாலும் மீறல்களுக்கும் இடமுண்டு என்பது நோக்கப்பட வேண்டும்.

இங்கே எப்போது இலக்கணம் மீறப்படலாமென்ற கேள்வி எழும்.

படைப்பின் வெளிப்பாட்டுக்கு வடிவ வெளி போதாமையாயிருக்கிறபோது மீறல் நியாயமானது என்பதுதான் அதன் பதில்.

நிரூபாவின் பல கதைகள் வடிவம் மீறியவை. அவற்றில் பல செழுமையற்றவையாயும் தோன்றும். ஆனால் அவற்றின் உள்ளடக்கம், அது வெளிப்படுத்தும் பாத்திரத்தின் தன்மை போன்ற காரணங்களை வைத்துப் பார்க்கிறபோது அதுவே அதன் சரியான வெளிப்பாட்டு வழியாய் இருப்பதையும் ஒரு ஆழ்ந்த வாசிப்பு காட்டும்.

நம் வாசிப்பின் போதாமைகளை பிரதியின் மேலேற்றி கவனமழியவிடல் இலக்கிய நேர்மையாகாது. 2005 இல் வெளிவந்த இந்நூல் இதுவரையில் மிக்க கவனம் பெற்றிருக்கவேண்டும். ஆனால் இது வந்த சுவடேயின்றி அடங்கிக் கிடக்கிறது.

ஒரு குழந்தையின் பார்வையில் யாழ்ப்பாணத்தின் வாழ்வியல்பு பார்க்கப்படுகிறது. இது எதனையும் விசாரணை செய்யவில்லை. ஒரு சமூக அமைப்பு இவ்வாறு இருக்கிறதென்று ஆதங்கப்படவுமில்லை. ஆனால் தான் தேர்ந்துகொண்ட களத்தை மிகத் துல்லியமான வார்த்தைகளால் பதிவாக்கியிருக்கிறது. இது நாவலின் வடிவத்தையும் ஒருவகையில் எடுத்திருக்கிறது என்றிருந்தேன் முன்பு. அப்போதும் அதன் மய்ய பாத்திரம் சமூகமாகவே இருக்கிறது. தன் புலமிழந்து வந்த ஒரு பறவையின் இறக்கையடிப்பே இக்கதைகள் எனினும், இவை கலைத்துவமானவையாய் இருப்பதுதான் இவற்றின் சிறப்பு.

இவற்றின் வடிவம் சிறிது செழுமைப்படுத்தப்பட்டிருக்கலாமோ என ஒருபோது நான் எண்ணினேன்தான்.ஆனால் பின்னர் யோசிக்கத்தான் தெரிந்தது, இதுவே இதன் சரியான வடிவம் என்பது. இதன் சில பகுதிகளின் விளக்கக் குறை அச்சாக்க முறைமைப் பிழையினால் நேர்ந்திருப்பதைச் சொல்லவேண்டும்.

எழுத்து, படைப்பு ஆகியவற்றுக்கிடையே இருக்கும் வித்தியாசங்கள் போல்தான், நூல், பிரதி என்பனவற்றுக்கிடையேயும் பாரிய வித்தியாசங்கள் உண்டு. எழுதப்படுவனவெல்லாம் பிரதியாகிவிடுவதில்லை. பிரதி மொழியால் தாங்கப்படுவது என்பான் ரோலன் பார்த். ‘சுணைக்கிது’ சிறுகதைத் தொகுப்பு மொழியால் தாங்கப்பட்டிருக்கிறது. பேச்சு மொழியின் வலு அது. ஆனால் அது செம்மொழியின் வீறார்ந்தும் அவ்வப்போது வெளிப்படையும்.

மழை ஏன் வந்தது? என்ற கதையில் ஒரு நாகம் வருகிறது. உருவமாக அல்ல, அருவமாக.

**‘தீபாவிற்கு தலை சுற்றியது. நிறைந்திருந்த கிணற்றைப் பார்த்தாள். அப்படியே விழுந்து விடவேண்டும் போலிருந்தது. விழுந்தால் எல்லாப் பிரச்சனையும் முடிந்து விடுமென்றில்லை. சாகிறமாதிரி விழவேணும்.**

**‘ஆனால் கிணத்துக்குள்ள விழுந்தவுடன செத்துப்போவினம் எண்டில்லைத்தானே. ஆராவது காப்பாற்றிட்டா? கோதையக்காவ காப்பாத்தினமாதிரி. பழுத்து விழுந்த சில இலைகள் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தன. எத்தனை நாட்களாய் மிதக்கின்றனவோ தெரியாது. பார்க்கப் பரிதாபமாகவே இருந்தன.**

**‘அவைகளைப் பார்க்கும் போது தானே மிதப்பதாக உணர்ந்தாள். இன்று வரப்போகும் இரவு பற்றியே சிந்தித்தாள். நாகம் இப்போது தலைக்குள் ஒரு மூலையில் படுத்துக் கிடந்தது.’**

மழை ஏன் வந்தது, சுணைக்கிது இரண்டு கதைகளும் சிறுபெண்களின்மீதான பாலியல் தாக்கங்களைக் காட்டும் கதைகள். ஆண்களின் வக்கிரம் பிடித்த பாலியல் எழுச்சிகள் எந்தமாதிரியெல்லாம் குழந்தைப் பெண்களில் பாய்கிறதென்பது இக்கதைகளில் அற்புதமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

**‘அந்த உருவம் இவ்வளவு விரைவாகஓடி அப்பாவாகவோ, அண்ணாவாகவோ, மாமாவாகவோ மாறிவிட்டதே. அதுதான் எப்படியென்று அதிசயமாக இருந்தது தீபாவிற்கு.’**

மழை ஏன் வந்தது கதையில் தீபா பிரலாபிப்பது கிராமம்தோறும் நகரம்தோறும் இன்றும் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

சுணைக்கிது கதை வேறொரு காட்சியைக் காட்டுகிறது.

**‘கடகத்தைப் போட்டுவிட்டு ஓடுவதற்கு முன்…**

**“விடுங்கோ நித்தியண்ணை.. விடுங்கோ…”**

**‘இறுக்கமான மாட்டுப்பிடி. இல்லையில்லை. ஐயோ! இது மோட்டுப்பிடி. இம்மியளவும் அசைய முடியவில்லை ஜீவியால்.**

**‘புனை மரத்திற்கு இடித்துப் பார்த்தது சின்னக் கால்கள். அசையவேயில்லை.**

**“விடடா. விடு. ஏன்னை இப்ப விடு. புனங்கொட்டை. சோறி நாய். இப்ப என்னை விடு. நாயே.”**

**‘அவள் அழ அழ பூப்பூ யங்கியை கீழே விழுத்திவிட்டு றொக்கற் வேகத்தில் மசுக்குட்டி…’** என்று முடிகிறபோது எந்த மனதுதான் சிறுபெண்களின் நிலை கண்டு பதறாமல் இருக்கும்?

‘சுணைக்கிது’ நூலைப் புரிந்துகொள்ள கொஞ்சம் வாசிப்புப் பயிற்சி அவசியம். கடிதம் படிக்கத் தெரிந்த, கனடா வாரப் பத்திரிகளைப் படித்துப் பழக்கமான சுளுவோடு இதை வாசித்துப் புரிந்துவிட முடியாது. ஆல்லது ரமணிசந்திரன் மாதிரியான வாசிப்புப் பழக்கமும் உதவிசெய்யாது. இலக்கியம் தனி வாசிப்புக்கானது. ஆதற்கு முயற்சியும் பயிற்சியும் அவசியமான கூறுகள். நாம் பின்தங்கியிருக்கிறோம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஒரு நல்ல பிரதியை நாம் ஒதுக்கத்தில் போட்டுவிடக்கூடாதல்லவா?

‘சுணைக்கிது’ அண்மையில் தமிழில் வெளிவந்த முக்கியமான வாசிப்புக்குரிய நூல். புலம்பெயர் சூழலிலும், ஈழத் தமிழிலக்கியமாயும் இது கவனம் பெறவேண்டியதாகும்.

■ ■ ■

ஓர் அனுபவம்! ஒரு எச்சரிக்கை!

# தொலைபேசியில் சகலதையும் விளாசித் தள்ளுபவர்களுக்கு

1994ம் ஆண்டு கனடாவில் நம்மவர்கள் மத்தியில் இச்சம்பவம் நடந்தது. தாயக மண்ணில் பல இன்னல்கள், துயரங்களை எதிர்கொண்டதாக ஒரு கதையினைச் சோடித்து அதனைத் துயரத்துடன் எடுத்துக்கூறி, அகதி அந்தஸ்து கோர முயன்ற ஒரு தமிழ் இளைஞனின் விசாரணையில் நடந்த சம்பவம் இது!

இத்தகைய குடிவரவு பிரிவினரின் விசாரணையில் ஆஜராகும் கனடிய சட்டத்தரணிகளுக்கு உதவியாளராக ஒரு தமிழ்க் குடிமகன் இருப்பதும், அவர்கள் குடிவரவு பிரிவினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அகதி அந்தஸ்து கோருபவர் சார்பில் பாதிக்கப்பட்ட ஒரு கதையினை சிலசமயம் சோடித்து வழங்கி உதவிசெய்வதும் சகலரும் அறிந்த விடயம்!

அகதி அந்தஸ்து கோரும் இளைஞனுக்கு எப்படிக் கதைசொல்ல வேண்டும் என பயிற்சி கொடுத்த உதவியாளர், விசாரணைக்கு முதல்நாள் தொலைபேசி ஊடாக மீண்டும் ஒரு பயிற்சி கொடுத்து விசாரணைக்கு அனுப்பிவிட்டார். மறுநாள் விசாரணை நடந்தது. இளைஞன் மொழிபெயர்ப்பாளரின் உதவியுடன் இம்மியும் பிசகாது தமது கதையினைக் கூறிக்கொண்டே வந்தான். “எவராவது இக்கதையினைச் சோடித்து இப்படிக்கூறு என பயிற்சி தந்து விட்டார்களா” என கேள்வி கேட்டால் “இல்லை” என பதில் கூற வேண்டும் என்று சட்ட உதவியாளர் குறிப்பிட்டது போல இவ்விளைஞன் குறிப்பிட்டு இருந்தான். குடிவரவு விசாரணை நீதிபதி விசாரணையில் இடைநடுவில் நிறுத்தப் பட்டது. மேசையில் தயார்நிலையில் இருந்த ஒலிப் பதிவுக் கருவியை ஒருமுறை இயங்கவைத்தார். முதல் நாள் தொலைபேசியில் சட்ட உதவியாளர் வழங்கிய அறிவுரை, சம்பாசணை யாவும் ஒலிப்பதிவு நாடாவில் இருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அங்கிருந்த மொழிபெயர்ப்பாளர் தமது கடமை தவறாது யாவற்றினையும் மொழிபெயர்த்துக் குறிப்பிட்டுக் கொண்டே வந்தார். அகதி அந்தஸ்து கோரிய இளைஞனுக்கு எல்லாமே கேள்விக்குறியாகியது...

என்ன நடந்தது? எப்படிப் பதிவாகியது? எல்லாமே ஒரு அதிசயம்!

தொலைபேசியில் சகலதையும் விளாசித் தள்ளுபவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை! தமிழர்களின் அகதி அந்தஸ்து கோரிக்கையினையே ஒரு கேலிக்கூத்தாக்கிவிட்டது இந்த ஒரு அசட்டையீனமான ஒரு செயல்!

இலவசத் தொலைபேசி உங்கள் இருப்பையும் ஆட்டிவைக்கும்.

**- நெற்றிக் கண்ணன் -**

■ ■ ■



**Reastaurant For Sale**
**Markham**

L.L.B.O அனுமதியுடன்

மார்க்கம் நகரில் உணவகம் ஒன்று

விற்பனைக்கு உண்டு

**$ 99.900**

**416 302 7283**

## வீடு வியாபார நிலையம் வாங்க விற்க










**Brand New condos in**
Downtown,Etobicoke, Scarborough,Richmond Hill

**VAUGHAN**
Keele / Major Mac
Semi Detached 2 Story
Bedrooms 3+1 ,Washroom 4
**$349,000**

**Brampton**
Detached, 2 Story, Bedroom 3, Washroom3 Finished Basement
வடக்குவாசல், கூட்டுத்தொகை 1
**$349,900**

**VAUGHAN**
Weston / Rutherford
Detached 2 Story
Bedrooms 4 ,Washroom 3
**$486,500**

FREE Market Evaluation
Lowest Commission

**Dir. 416 816 1500**

**Gas Stations**
(Petro Canada, Shell, Esso, Sunoco)
Convenience Stores
Also
AVAILABLE

**சத்தி மருதப்பா**
**Sathhi Maruthappah**

Century 21
Affiliate Realty Inc. Brokerage.
80 Corporate Dr. # 208
Toronto,ON, M1H 3G5
416 290 1200



# உங்கள் வீட்டுக்கான ஈட்டுக்கடன் தேவைகளுக்கு

**அனுபவம் - நம்பிக்கை - நாணயம் - சேவை**

"Debt is the Slavery of the Free. Our Ambition is Your Freedom"

## ஈட்டுக்கடன் முகவராக விரும்புகிறீர்களா?

வீட்டுக்கான ஈட்டுக்கடன் முகவராக வருவதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா?

வீட்டுக்கான ஈட்டுக்கடன் பற்றியும் அனைத்து ஆலோசனைகயையும், கல்வியும் தொடர்ச்சியான பயிற்சியும் எம்மால் வழங்கப்படுகின்றன. இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**Want to become a Mortgage Consultant?**

We provide you free workshops, training and seminars to become a certified Mortgage



digi Media Creation

**BonaFide**
Mortgage Solutions

1920 Ellesmere Road, Suite 111, Toronto, ON M1H 2V6
Tel: **416.548.7475**, Fax: 416-548.7496
Toll Free: 1.800.952.1366
www.bmsic.com, info@bmsic.com

- Mortgages
- Re-Finance
- Seminar
- Workshops

www.bmsic.com

one stop solution for all your mortgage needs

## BRAMPTON



**429,900**

Immaculate Well Kept 4 Bed, 3 Wash Detached 2 Storey, In A Quiet Neighborhood Unfinished basement. Very Spacious And Well Maintained With Very Nice Backyard. Eat-In Kitchen With B/I Dishwasher. Upgraded Cabinets

## TORONTO



**394,900**

Detached 2 Storey, 3 Bedrooms and 4 washrooms finished basement Your Search Stops Here! Stunning And Immaculate Home Featuring Open Concept Main Floor With Maple Hardwood Floors



Office: 416-321-6969
HomeLife GTA
Realty Inc., Real Estate Broker
1711 McCowan Road, Suite #20[illegible]
Scarborough, ON M1S 3Y3

**SHIVA SHARMAH**
**416-666-5515**
**416-878-3215**

## FINCH/WESTIN



**399,900**

Excellent Location 2800 Sq. Industrial Automotive Related building Corner Unit With Plenty Of Parking Close To Unit. Access From Finch, For Both The Front And Back Of The Unit.

## MARKHAM



**379,900**

Detached 2 Storey 3 bedrooms and 3 washrooms Unfinished basement. Wow!!Extra Bright Immaculate All Brick Detached, Close To School, Hospital, Park. Spotless, Proposed School In Walking Distance

## MIDLAND/STEELES



**525,000**

Detached 2 Storey 4+1 bedrooms and 4 washrooms Custom Built Home Outstanding Interior Features. Various Exterior Evaluations With Brick & Stone Combos. 9Ft Ceilings. Finished Bsmt With Den And Rec Rm With Large Windows

**BANKRUPTCY HOUSES**

| ELLESMERE/CONLINS | MIDLAND/PAINTEDPOST | MARKHAM/ELLESMERE | DRYDEN/GERRARD | FINCH/NEILSON |
|---|---|---|---|---|
| 366,000 | 279,000 | 292,500 | 294,000 | 309,000 |

CLARICA




Clarica is becoming Sun Life Financial.
Your trusted Clarica advisor remains your trusted Sun Life Financial advisor.

Ask us how these changes will benefit you.



**I'm Chandran Rasalingam.**
I have been your trusted Clarica advisor and am now becoming your Sun Life Financial advisor. Please call me at 416 412-0401 ext 305 so I can talk about the benefits to you.

Sun Life Financial

Associated with Clarica Financial Services Inc. and Clarica Investco Inc., a Mutual Fund Dealer. These companies intend to change their names to reflect the Sun Life Financial brand. Both companies are wholly owned subsidiaries of Sun Life Assurance Company of Canada, one of the Sun Life Financial group of companies.




$ 149,900.



**Downtown Bradford**
Restaurant Fully Licensed, Established For Over 20 Years, Easy Operation,Good Long Term Lease Will Be Negotiated, At Least For 15-Years With Very Good Rent.

$ 168,000.



**Mccowan/Steeles**
**Well Maintained Building** Great Investment Or Vacant Possession. **Lower Price** 2+1 Appprox 1224 S/F. Kitchen W/Window. 2 Full Bathrooms, Fridge, Stove, Washer, Dryer, B/I Microwave (As Is).

$ 265,000.




**Weston/Steeles**
Excellent Unit In Good Location Close To All, 3200 Sq Ft



**Logan Manikkavasagar**
Associate Broker

Century 21

Percy Fulton Ltd.
**416•298•8200**

**416•708•9903**
www.loganhotproperties.com

**Kalai Logan**
Sales Representative

# THINKING OF BUYING OR SELLING PROPERTY

for professional, reliable and honest service

- **Residential-Commercial-Industrial-Investment**
- **List Your Home (Low Commission)**
- **Mortgage, Lawyer, Home Inspection**



## Manickanadarasa Karunahkaran
Sales Representative

Dir: 647.272.8597

1345 Morningside Ave., Suite: 8, Toronto, ON M1B 5K3,
Office: 416.759.6000 fax: 416.759.6005
www.veedu.com

VEEDU REALTY INC. BROKERAGE

I'm here to get your mortgage smarter and faster.

உங்களுக்கு அதிக கடன் பளு இருந்தால் அனைத்தையும் குறைந்த ஒரு மாதக்கட்டணத்தில் கொண்டுவருவதுடன் உங்களுக்கு அதிக பணத்தையும் சேமிக்க உதவுவேன்.

- **Residential**
- **Industrial**
- **Commercial**

**1st, 2nd, 3rd Mortgages Upto 100%...**

வங்கி வட்டி வீதத்தை விட குறைந்தளவு வட்டி வீதம்

**NO FEE FOR RESIDENTIAL MORTGAGES**
- Rate discount up to 3%
- Give me a call for free consultation
- Mortgages without no down payment

நீங்கள் வங்குரோத்துக்கு போயிருந்தாலும் நிராகரிக்கப் பட மாட்டீர்கள். யாருமே நிராகரிக்கப் படமாட்டார்கள் அனைவரும் தகுதியானவர்கள். குறைந்த வட்டி வீதத்தில் ஈட்டுக்கடன் பெற்றுக்கொள்ளவும், கடன்கள் குறித்த இலவச ஆலோசனைகளுக்கும் அனைவரதும் நம்பிக்கைக்கு பாத்திரமான அகிலா செந்திலை அழையுங்கள்

**We are giving the best rate in town and pay your mortgage faster with good advise**

**Our interest rates starts from 0%**
- First-time Buyers
- Renewal
- Refinancing
- Pre-Approval
- Self Employed
- Bankruptcies
- Poor Credit
- New Immigrants
- Debt. Consolidation
- Construction Loans

invis

**After Approval**

# Joy is yours
# Pride is ours





September 15, 2007
Saturday
5:30pm

Armenian Youth Centre Auditorium
(50 Hallcrowm Place, Toronto)

இது எமக்காக எங்கள் கலைஞர்கள் வழங்கும்
எம்மவர் நிகழ்வு



சிரிக்க

சிந்திக்க

சிறார்களின் தமிழறிவை வளர்ப்போம்
உள்ளூர்க் கலைஞர்களை ஊக்குவிப்போம்

தொடர்புகளுக்கு:
குணா: 519-404-6707
S.K.தீசன் : 416-803-5296

tvi Tamil Vision Int. & cmr Diversity FM 101.3

அன்பளிப்பு
$ 10

typros
typros printing

Business Cards
Invitation Cards
Wedding Cards
Brochers
Booklets
Bulletins
Flyers
Posters
Letter Heads

Message Pads
Note Pads
Tickets
Business Forms
Aplication Forms
Order Forms
Stickers
Labels
Much More.......

உங்கள் நினைவுகளை நாங்கள் அச்சில் கொண்டுவருகிறோம்

- வியாபார அட்டைகள்
- தன்னறிமுக அட்டைகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- பூப்புனித நீராட்டு விழா
- அழைப்பிதழ்கள்
- அரங்கேற்ற மலர்கள்
- விழா மலர்கள்

இது போன்ற உங்கள் அனைத்து அச்சுத் தேவைகளையும் உங்கள் விருப்பப்படி நீங்கள் அச்சில் ஏற்றிட இன்றே நாடுங்கள் Typros அச்சகம்

Call Us Today!

t. 416.635.8761
f. 416.635.7244

3957 Chesswood Drive,Downsview,
ON, M3J 2R8

digi

# கலாச்சாரம் எதிர்க் கலாச்சாரம்...

**47ம் பக்கத் தொடர்ச்சி...**


Rothkop "Godless Communists versus Corrupt Capitalists" எனக் கூறினார். தமிழ் நாட்டில் பெரியாரின் போராட்டத்தையும், திராவிடர் கழகங்களின் எழுச்சியையும், இதன் வழி வந்த கூறாகக் காணலாம்.

இதன் தொடர்ச்சியாக சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னர், அமெரிக்க மயமாதல் இலகுவாக நடைபெற்று வருகின்றது. இதற்கு உதவியாக Inernational Monetary Fund, World Bank, World Trade Organization போன்ற நிறுவனங்கள் உதவி புரிகின்றன. இவை மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கும் கடன்கள், இதன் மீதான வட்டிகள்போன்றன மூன்றாம் உலக நாடுகளின் பொருளாதார சந்தையை தீர்மானிக்கின்றன. தனியார்மயமாக்கலைத் துரிதப்படுத்துகின்றன. அமெரிக்க மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிறுவனங்கள், மூன்றாம் உலக நாடுகளில் தமது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன.

உ-ம்: ஜமேக்கா, அமெரிக்க மாநிலமான புளோரிடாவுக்கு அருகில் உள்ள ஓர் தீவு. இங்கு அமெரிக்க நிறுவனங்கள் உல்லாச விடுதிகளை நடாத்துகின்றன. சுற்றுலாத் துறையை நம்பியே இந்தத் தீவு மக்கள் வாழ்கின்றனர். இவர்களது கலாச்சாரம், மொழி, வளங்கள் என்பன அழிக்கப்பட்டு விட்டன. அமெரிக்க உணவு விடுதிகளே ஆட்சி புரிகின்றன. இதே தீவுக்கருகில் உள்ள மற்றொரு தீவு கியூபா. இங்கும் உல்லாசத்துறை உண்டு. ஆனால், இன்றும் உலக சந்தையில் பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் தன்னிறைவுடன் கம்பீரமாக வாழ்கின்றது. இங்கு அமெரிக்கமயமாதல் இல்லை.

### புலம் பெயர்வு

70களில் மிக அதிகளவில் தோன்றிய புலம்பெயர்வு, எதிர்க் கலாச்சாரத்தை இலகுவில் காவக் காரணமாகின்றது. புகுந்த நாட்டில் இவர்களுக்கு ஏற்படும் கலாச்சார அதிர்வுகள், இவர்களது மரபு நாடுகளையும் சென்றடைகின்றது. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து புலம் பெயரும் மரபு அறிவு



ஜீவிகள், கல்விமான்கள், முனைவர்கள் தமது நாடு பற்றிய பன்முகத்தன்மைகளை (கலாச்சரம், உளவியல், மொழியியல், மதம், நம்பிக்கைகள், விஞ்ஞானம்) ஆய்வுகளாக வெளியீடுகின்றனர். இது மேற்கத்திய வர்த்தகர்களுக்கு, கீழைத்தேய நாடுகளில் வியாபாரங்களைத் தொடங்க உதவுகின்றது.அத்துடன் இவ்வாறு புலம்பெயர்ந்த பின்னர், மரபு நாடுகளுக்குச் செல்லும் அவர்கள் மேலைத்தேய முகாமைத்துவ முறைகளை மேற்கொள்கின்றனர். இது மேலும் இவர்களுக்கு உதவுகின்றது. இவர்கள் மூலமே பசுமதி அரிசியின் மூலத்தை அமெரிக்கா தனதாக்கிக் கொண்டது.

புலம்பெயர்வு அடையாளங்களையும் மாற்றிவிடுகின்றது. உ-ம். Adrian Dimitri Mascarenhasஎன்ற இங்கிலாந்து கிரிக்கெட் விளையாட்டு வீரரது மூலம் தமிழ். இவர்களது மூதாதையர் தூத்துக்குடியில் இருந்து, இலங்கை நீர்கொழும்பைச் சென்றடைந்தார்கள். றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். இவரது பெற்றோர் நன்கு தமிழ் பேசக்கூடியவர்கள். இவர் இங்கிலாந்தில் பிறந்துவளர்ந்தமையால்,இவரது அடையாளம் அருகிவிட்டது. (சமிந்த வாஸும், இவர்கள் வழிவந்த தமிழரே) (http://content-www.cricinfo.com/engvind/content/story/308580.html)

யோகா போன்ற கீழைத்தேய முறைகளை மேற்குலக நாடுகள் தமக்குரியதாக்கிக் கொண்டன.April 23,2001, Time Magazineல் யோகா பற்றிய சிறப்பு வெளியீடு ஒன்று வெளிவந்தது. இதில் யோகாவிற்குரிய கீழைத்தேய வடிவங்களுக்கான, விஞ்ஞான ரீதியான மேற்கத்திய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### உலக அழகிப்போட்டிகள்

மூன்றாம் உலக நாடுகளில் இப்போட்டிகளை நடாத்துவதன் மூலம் "ஓர் கவர்ச்சி வியாபாரத்தை" இந்த நாடுகளில் உருவாக்கலாம்.1996ல் இந்தியாவிலும்,2004, 2005ல் சீனாவிலும் நடாத்தப்பட்டது. இப் போட்டிகள் மூலம் பல கோடிக்கணக்கான அழகு சாதனப் பொருட்களை மூன்றாம் உலக நாடுகளில் விற்கலாம்.

### விளையாட்டு

கலாச்சாரத்தின் கூறுகளில் முக்கியமானது விளையாட்டு. ஒரு கலாச்சார வளர்ச்சியில் இதன்பங்கும் முக்கியம். ஆங்கிலேயர்,தாம் ஆட்சிபுரிந்த நாடுகளில் தமது விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தினர். இவற்றுள் ஒன்று பேர்னாட் சா "பதினொரு முட்டாள்கள் விளையாட, பதினோராயிரம் முட்டாள்கள் பார்க்கின்றார்கள்" எனக் கூறிய கிரிக்கெட்.இதற்கு அதிகளவு பணம்தேவை. இன்று இலங்கை, இந்தியா, பாகிஸ்தான, பங்களாதேஸ்,மேற்கிந்திய தீவுகள் போன்ற நாடுகளின் பிரதான விளையாட்டாக மாறிவிட்டது. இந்த நாடுகள் இதில் அதிக கவனமும், பணத்தையும் செலவழிப்பதனால் தமது பராம்பரியவிளையாட்டுகளில் கவனம் செலுத்தத் தவறிவிட்டன. இதன் விளைவு ஒலிம்பிக் போட்டிகளில் இவை பெறும் பதக்கங்களினூடகக் காணலாம்.

ஒலிம்பிக்கில் இதுவரை இந்தியா பெற்ற பதக்கங்கள் மொத்தம் 17

இவற்றுள் பத்து பதக்கங்கள் கொக்கி விளையாட்டுக்குரியது.1900ம் ஆண்டு ஒலிம்பிக்கில் 200 M, 200 M hurdles ஆகிய இரு வெள்ளிப் பதக்கங்களே இவர்கள் மைதான நிகழ்ச்சிகளில் பெற்ற பதக்கங்கள்.

இலங்கை இதுவரை இரு பதக்கங்களையே பெற்றுள்ளது. 1948இலும், 2000ம் ஆண்டிலும் பெறப்பட்டவையே இவை. பாகிஸ்தான் பெற்ற பத்தில் எட்டு ஹொக்கி பதக்கங்கள்.

அமெரிக்கமயமாதல் பல புதிய அமெரிக்க விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தியுள்ளன. இவை மேலும் இந்த பாரம்பரியத்தை அழிக்கின்றன.

### தொழில்நுட்பமும், வெகுசன ஊடகங்களும்

உலகமயமாதலின் காவிகளாக தொழில்நுட்பமும், வெகுசன ஊடகங்களும் இயங்குகின்றன. இன்று எங்கு பார்த்தாலும் CNN – Latest Story ம், இவர்களது தொலைக் காட்சித் தொடர்களும்,இவர்களது சஞ்சிகைளும், புத்தகங்களும் காணப்படுகின்றன. காலையில் எழுந்ததும் சி.என்.என் செய்திகள். அமெரிக்கப் பொருட்கள், அமெரிக்க உணவு, அமெரிக்க நிறுவனத்தில் வேலை, அமெரிக்க மக்களுக்கு அவர்களது பெயரில் அறிமுகப்படுத்தி, பதில் கூறல் என அமெரிக்க வாழ்க்கையாக மாறிவிட்டது ஹொலிவூட் படங்கள் இன்று சர்வதேச சந்தையில் பெருவெற்றி நடை போடுகின்றன. சீனா, யப்பான் போன்ற நாடுகளில் இப்படங்கள் வெற்றிகரமாக ஓடுகின்றன. பல நாடுகளில் உள்நாட்டுத் திரைப் படங்களின் எண்ணிக்கை பூச்சியமாகிவிட்டது. பெரும்பாலும் ஹொலிவூட் தயாரிக்கும் அனைத்துப் படங்களும் இங்கு இறக்குமதியாகின்றன. மத்திய, மேல்தட்டு மக்களைக் கவர்ந்துள்ள சற்றலைட், மற்றும் அமெரிக்க சஞ்சிகைகள் புதிய கலாச்சார வடிவங்களை உருவாக்கியுள்ளன. மிகவும் கட்டுப் பாட்டுடன் உருவாக்கப்பட்ட முஸ்லிம் நாடுகளில் கருப்புச்சந்தை சற்றலைட்கள் கலாச்சார மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. ஈரானிய படங்கள் உலகின் தலைசிறந்த படங்கள் வரிசையில் இடம் பெறலாம். ஆனால் இவை "கருப்புச் சந்தையினூடாக்கூட அந்த மக்களைச் சென்றடையவில்லை. மாற்றத்தை ஏற்படுத்தவில்லை" கருப்புச் சந்தை சற்றலைட்கள் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் இங்கு"அடையாள மூலதனம்" ஆக செயல்படுகின்றன.

வட அமெரிக்க சுதந்திர வலயம் உருவாக்கப்பட்ட பொழுது "Hunger for American goods" என மெக்ஸிக்கன் மக்களைப் பார்த்துக் கூறியது ஓர் அமெரிக்கப் பத்திரிகை. இந்த அமெரிக்க மயமாதலை மெக்ஸிக்கன் வெகுசன தொடர்பு சாதனங்களும் வளர்த்தன. NAFTA (North Aerican Free Trade Agreement) இதனை அமுல் படுத்தவேண்டும் என மெக்ஸிக்கோவைச் சேர்ந்த நிதி முகவர்கள் சுமார் 40 மில்லியன் டொலர் களை செலவழித்துள்ளனர். இந்தியாவிலும் இந்த நிலை காணப்பட்டது.

சர்வதேச உதவி புரியும் நிறுவனங்களும் உதவி புரிதல் என்ற பெயரில் புதிய அடையாளங்களை மூன்றாம் உலக நாடுகளில் புகுத்துகின்றன. சுகாதாரம், கல்வி, சுற்றுச் சூழல், போன்றவை சர்வதேச விவகாரங்களாக மாற்றப்படுகின்றன. இவை சர்வதேச சந்தையை வளர்க்கின்றன.மூன்றாம் உலக நாடுகளில் புதிய தொழிலாளர் சமூகத்தை உருவாக்கலில் இவர்களின் பங்கு முக்கியமானது. மூன்றாம் உலகத் தொழிலாளர்கள் மேற்குலக தொழிலாளர்களை விட ஒன்பது மடங்கு அதிகம் உழைக்கக்கூடியவர்கள் என்பது ஆய்வுகள் கண்டறிந்த உண்மை. இந்தத் தொழிலாளர் சமூகம் சர்வதேச அடையாளங்களைக் கொண்டதாகவும், அதன்மொழியை உணர்ந்ததாகவும் காணப்படும். இவர்கள் மூன்றாம் உலக நாடுகளில் வாழும் அமெரிக்க அடையாளங்களை, கருத்தியலைக் கொண்ட பிரசைகளாகக் காணப்படுவார்கள்.

### பெரும் வணிக நிறுவனங்கள்

பிரான்ஸில் CAFÉ என அழைக்கப்படும் "டொனட்" கடைகள் காணப்பட்டன. அங்கு தேநீருடன்-கோப்பியுடன் ஆறுதலாக அமர்ந்து பத்திரிகையும் வாசிக்கலாம். இது மக்டொனால்ட் அதி வேக சுவையகங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இந்த நிலை மாறிவிட்டது. இவை தொழில் நகரங்களில் தொழிலாளிகள் மதிய இடைவேளையை வேகமாக முடிக்கவும் உதவுகின்றது.

**McDonald's ன் வருமானம் 2005**

- ஐரோப்பியா ... $7,072 (35% of total company revenues)
- அமெரிக்கா ... $6,955 (34%)
- Australia/Asia-Pacific ... $2,815 (14%)
- Latin America ... $1,327 (6%)
- Canada ... $948 (5%)
- Other ... $1,343 (6%

**Coca Cola**

உலகம் முழுவதும் குளிர் பானம் வழங்கும் இந்த நிறுவனம் ஏற்படுத்தும் தண்ணீர் பிரச்

50ம் பக்கம் பார்க்க...

ELROD
Renovation
- Kitchen
- Washroom
- Hardwood Flooring
- Laminate Flooring
- Tiling
- Electrical
- Plumbing
- Separate entrance
- Full basement

Over 12 years of experience
For free estimate and consultation contact
Prem @ 416-712-1016

# கலாச்சாரம் எதிர்க் கலாச்சாரம்...

49ம் பக்கத் தொடர்ச்சி...

சினைகள் அதிகம். தாமிரபரணி இன்று கோக்கின் உற்பத்தி மையமாகி விட்டது. இன்நிலை கேரளாவிலும் தொடர்கின்றது. இதுவரை இதற்கெதிராக மாநில, மத்திய அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. இதற்காக போராடியவர்களுக்கு எதிராக வன்முறையை மேற்கொண்டது.

### Pepsi

US: Pepsi forced to admit it's bottling tap water பெப்சியின் தண்ணீர் போத்தல்களான Aquafinaவில் குழாய் தண்ணீரை நிரப்பு கின்றோம் என்பதனை பெப்சி ஒத்துக் கொண்டுள்ளது. இந்த நிறுவனங்கள்தான் மூன்றாம் உலக நாடுகளை நோக்கி நகர் கின்றன. இவை பற்றி பிறிதொரு கட்டுரை யில் விரிவாக பார்க்கலாம்.

http://fitsugar.com/455102

### WalMart

உலக நாடுகள் அனைத்திலும் தனது கால் களைப் பதித்துள்ள இந்தநிறுவனம் விற்கும் பொருட்களில் 80 விகிதமானவை சீனாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அமெரிக்க நிறுவனங்கள் சீனத் தயாரிப்பு பொருட் களை உலகெங்கும் விநியோகிக்கின்றன. Major consumer-products company: 28.3% of Dial's (soap products); 24% of Del Monte Foods'; 23% of Clorox's (bleaches and cleaners); and 23% of Revlon's (cosmetics). அமெரிக்காவில் இந்த நிறுவனத் தின் தொழிலாளியின் சராசரிச் சம்பளம், ஏனைய நிறுவனங்களைவிட ஒரு மணித் தியாலத்துக்கு மூன்று டொலர்களினால் குறைவானது இந்தநிலை இங்கு. மூன்றாம் உலகநாடுகள் இவர்களுக்கு சொர்க்கம்.

பெரும் வணிக நிறுவனங்களில் சில உதா ரணத்தை மேலே பார்த்தீர்கள். இவை உள் நாட்டு உற்பத்தியைக் குறைக்கும்.உள்நாட் டுத் தொடர்புச்சாதன சமூகத்தையும், இந்த பெரும் முதலாளிகள் கைப்பற்று வார்கள். Wall Mart "Small Town Capitalism" என்ற ஆதிக்கத்தைக் கொண்டுள்ளதாக மேற்கு லக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றார்கள். இந்த பெரும் கடை உள்ள சிறு நகர மக்கள், உலகம் இக்கடையைச் சுற்றியே அமையும். அங்கு சகல பொருட்களும் கிடைக்கும். (தரமானவையல்ல) இதனால் அந்த நகரத்தில் உள்ள சிறு வணிகர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அந்த சிறு நகரத் தையே சூறையாடிவிடும்.

பஞ்சாப் மாநிலத்தில் வோல்மார்ட் 50,000 ஏக்கர் பரப்பளவில் ஒப்பந்த விவசாயத் திலும் ஈடுபடவுள்ளது. இவை கொள்முதலி லும், விநியோகத்திலும் ஆதிக்கம் செலுத்த வுள்ளன. பயிரிடும் பயிர்களையும் இவையே தீர்மானிக்கின்றன.

"விதை, உரம் இலவசம், காய்கறிகளைப் பயிர்செய்துகொடுத்தால் விலையும் கிடைக் கும்."போன்ற விளம்பரங்கள்மூலம் உள்ளூர் விவசாயிகள் குத்தகை விவசாயிகளாக மாறிவிடுகின்றார்கள்.இவ்வாறு பயிரிடப்படும் நிலங்களில் வேறு பயிர்கள் வளராது. கார ணம் பாவிக்கப்படும் உரம், ஒரு குறிக்கப் பட் பயிருக்கே உரியது இந்த உரம், விவ சாயிகள் ஒன்றுமே செய்யமுடியாத நிலை யில் உள்ளனர். அரசு எப்பொழுதும் போல் விவசாயிகளுக்கு எதிராகவே செயற்படும். பஞ்சாய் பறந்திடும் பஞ்சாப்!

### மூலதனம்

மேற்கத்திய நாடுகளில் தேசிய இறைமை குறைந்து செயல்படுவதனையும், அதனிடத் தில் சர்வதேச மூலதனம் அமைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினையும், பரவலாக ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு கோட்பாடு ஏற்படுகின் றது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிப்படிக-ளின் உச்சக்கட்டங்களில் ஒன்று உலக சந் தையை உருவாக்குவது. இதற்கு பொருளா தார ஊடுருவல்கள் அவிசியமாகின்றது.

**Top International Grocery Retailers (காய்கறிகள் மட்டும்)**

| Rank | Company | Country of Origin | Net sales ($ mn) | Domestic sales (%) | Foreign sales (%) |
|---|---|---|---|---|---|
| 1 | Wal-Mart | USA | 191,329 | 83 | 17 |
| 2 | Carrefour | France | 62,263 | 52 | 48 |
| 3 | Ahold | Netherlands | 50,424 | 18 | 82 |
| 4 | Kroger | USA | 49,000 | 100 | 0 |
| 5 | Metro | Germany | 46,353 | 56 | 44 |
| 6 | Albertson's | USA | 37,478 | 100 | 0 |
| 7 | Kmart | USA | 37,028 | 100 | 0 |
| 8 | Tesco | UK | 33,058 | 90 | 10 |
| 9 | Safeway | USA | 31,977 | 89 | 11 |
| 10 | Rewe | Germany | 31,898 | 80 | 20 |

மூலதனத்தை தொடர்ச்சியாக திரட்டுவது அவசியம். மூலப் பொருட்களை கட்டுப்பாட் டுக்குள் வைத்திருப்பதும் அவசியமாகின் றது.

நிதி மூலம் சர்வதேசமயமாதல் உலகமய மாதலின் முக்கிய அம்சமாகும். வங்கிகள் சர்வதேச எல்லைகளைகடந்து உலக நாடு களில் செயற்படுகின்றன.

(City Bank–46 நாடுகள், 1400 கிளைகள், 3800 தானியங்கி வங்கி இயந்திரங்கள்,

Bank of Nova Scotia -40 நாடுகள் - 720 கிளைகள், 1500 தானியங்கி வங்கி இயந்தி ரங்கள்) 1960 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு சத விகிதமாக இருந் தது. 1980 களில் இது 20 சத விகிதமாக அதிகரித்துள்ளது. சாவதேச வங்கிகளின் ஒரு குறிப்பிட்டசெயற்பாடு உலக வர்த்தகத் துக்கு நிதியளிப்பது. மூன்றாம் உலக நாடு களின் அதிகரித்த கடன் தேவைக்கு ஏற்ற வகையில் புதிய பணச் சந்தைகள் உருவா கின. இவை பன்முகத் தன்மை கொண்ட பல புதிய நிதிசார் பொருட்கள் உருவாக் கப்படன. இவை கடன் முறையின் அடித்த ளத்தை விரிவுபடுத்தின. இது வங்கிகளின் வருமானத்தை அதிகரித்தன. ஊலகளாவிய ரீதியில் அமெரிக்க டொலர்கள் விநியோகிக் கப்பட்டன. 1971ல் நிக்சனால் ஏற்படுத்தப் பட்ட டொலர், தங்கம் மாற்றத்துக்குப் பின் னர் வளர்ச்சியடைந்த நாடுகள் அந்நியச் செலவாணி விகிதங்களை உறுதியாக வைத்திருப்பதற்கான புதிய வழிமுறைக ளைக் கையாண்டன. 1970களில் நிர்ணயிக் கப்பட்ட பரிவர்த்தன முறைக்குப் பதிலாக (Fixed Exchange Rate) மித்க்கும் பரிவர்த் தண முறை (Floating Exchange Rate) அமுல்படுத்தப்பட்டது.இது மேலும் மூன்றாம் உலக நாடுகளைப் பாதித்தது. 1971ல் டொலருடனான, தங்கத்துக்கான இணைப்பு துண்டிக்கப்பட்டது. ஆனால் இந்நிலை சர்வ தேச சந்தை வியாபாரத்துக்கும், பணப்புழக் கத்துக்குமான விகிதத்தைக் குறைத்தது. 1986ம் ஆண்டு 18800 கோடியாக இருந்த பணப்புழக்கம், 2001ம் ஆண்டில் 2ரில்லியன் டொலர்களானது.1974ல் ஏற்பட்ட எண்ணெய் விலை அதிகரிப்பும், 1980களில் ஏற்பட்ட விலைப்பணவீக்கமும், நிதி மூலதன வளர் ச்சிக்கு உதவி புரிந்தன. இதன் பின்னர் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்,மூன்றாம் உலக நாடுகள் உலக சந்தைக்கு திறந்து விடப் பட்டன.

### மூலதனத்தின் வீச்சு

உலகமயமாக்கலின் வர்த்தமும், உற்பத் தியும் முக்கிய அம்சங்கள். அவற்றை விட முக்கியமானது மூலதனத்தின் வீச்சு. நாடு களின் பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் மூலதனத்தின் வீச்சு முக்கிய இடம் பெறுகின்றது. இந்த நிதி மூலதனம், நவீன தொழில்நுட்ப வசதிகள் மூலம் ஓரிடத்திலி ருந்து மற்றொரு இடத்துக்கு மிக விரை வில் செல்லக்கூடியது.எங்கு லாபம் கிடைக் குமோ அந்த இடத்தை நோக்கி நிமிடங்க ளுக்குள் நகர்த்தலாம். உலகமயமாதலின் இன்றைய வளர்ச்சிக்கு மூலதன வீச்சும் காரணம். உலக வர்த்தகம் சில குறிப்பிட்ட நாடுகளிலேயே குவிந்துள்ளது.(G7 Countries). இவை உற்பத்தி, வர்த்தகம், முதலீடு என்பவற்றை இந்த நாடுகள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

### வர்த்தக நிறுவனத்தின் பலம் சில உதாரணங்கள்

(based on a comparison of corporate sales and country GDPs).

உலகின் 100 பெரிய பொருளாதர மையங் களில் 51 வர்த்தக நிறுவனங்கள், ஏனைய 49 நாடுகள்.

The Top 200 corporations' sales are growing at a faster rate than overall global economic activity. Between 1983 and 1999, their combined sales grew from the equivalent of 25.0 percent to 27.5 percent of World GDP.

Between 1983 and 1999, the profits of the Top 200 firms grew 362.4 percent, while the number of people they employ grew by only 14.4 percent.

U.S. corporations dominate the Top 200, with 82 slots (41 percent of the total). Japanese firms are second, with only 41 slots

Of the U.S. corporations on the list, 44 did not pay the full standard 35 percent federal corporate tax rate during the period 1996-1998. Seven of the firms actually paid less than zero in federal income taxes in 1998 (because of rebates). These include: Texaco, Chevron, PepsiCo, Enron, Worldcom, McKesson and the world's biggest corporation - General Motors

### எங்கே செல்கின்றது உலகம்?

பலம் வாய்ந்த, பணம் நிறைந்த நிறுவனங் கள் மேற்குலக அரசுகளை நிர்ணயிக்கின் றன. இவை தான் உலக எல்லைக் கோட் டையும் இந்த அரசுகள் மூலம் தீர்மானிக் கின்றன. 1945ல் Roosevelt ம் Churchiil ம் Stalin க்கு கூறியது "You can have Poland, Hungary, Chezchoslovakia. Yogoslavia should be fifity-fifty. Greece is ours, so if there is a revolutionary moment there, we'll crush it, and you stay out of it. (போலாந்து, ஹங்கேரி,செக்சோசிலோவோக்கியா உனக் குரியது, யுகோஸிலாவியா 50க்கு 50.கிறீஸ் எங்களது. அதில் ஏதாவது மாற்றம் ஏற்பட் டால்,புரட்சி நடைபெற்றால் உன்னை சும்மா விடமாட்டோம்) அமெரிக்கர்கள் லத்தீன் அமெரிக்காவைப்பற்றி கூறியவை "இந்த நாடுகள் எங்களுக்குரியவை. எங்களது பின் முற்றம் இவை" இவற்றை Banana republic என்பார்கள். இவை மிகவும் வறுமையான ஏழை, அரசியல் ஸ்திரமற்ற நாடுகள் என்ப தனால் இப் பெயர் சூட்டப்பட்டது.. உலக நாடுகளை இவ்வாறு கொண்டு வருவதே இந்த பலம் வாய்ந்த நிறுவனங்களது திட் டம்.இவர்கள்வசம் அரசு, வெகுசன தொடர் புச் சமூகம்-நிறுவனங்கள், வங்கிகள் கைவ சம் உள்ளன.இத்துடன் உள்நாட்டு முதலா ளிகளும் உதவி புரிகின்றனர்.(உ-ம்: தமிழ்த் தொலைக்காட்சிகள்,சஞ்சிகைகள் போன்றன பன்னாட்டு நிறுவனங்களின் விளம்பரங்க ளைக் கொண்டுள்ளன.) இதே பன்னாட்டு நிறுவனங்கள் மூன்றாம் உலக அரசையும் தீமானிக்கின்றன.


Coca - Colanization, McDonaldiza tion, WallMall களையும் நிறுத்துவது கடினம். பெண்ணடிமை, சாதி, மொழி வேறுபாடு களை தொடர்ச்சியாகப் பேணுவதன் மூலம் எதிர்க் கலாச்சாரத்தை இவர்கள் இந்த அரசு மற்றும் வெகுசனச் சமூகம் மூலம் நிறுவுகின்றனர்.எதிர்க்கலாச்சாரம் பன்னாட்டு நிறுவனங்களை வாழவைக்கின்றது.

நவீனத்துவத்தையும், சீரிய அரசுகளையும் ஒவ்வொரு சுயஇனக் குழுமங்களும் அமை க்கும்வரை இது தொடரத்தான் செய்யும்.

இப்பொழுது மேற்குல நாடுகள் மூன்றாம் உலக நாட்டு மக்கள்மீது "அடையாளமற்ற அடையாளத்தை" ஏற்படுத்துகின்றார்கள்.

■ ■ ■






**MEGA CARPET & DUCT CLEANING LTD.**


உங்கள் இல்லத்தினுள்ளே சுழலும் காற்றோட்டத்தை சுத்தமாக்கி சுத்தமான காற்றை சுவாசிக்க வழிவகுக்கின்றோம். அனுபவம் மிக்கவர்களினால் தரமாகவும் ஆலோசனைகளுடன் கூடிய நிதானமான சேவை

• Heavy duty equipment • Real high presure cleaning • Remove mold yest and bacteria • We use state of art technique • Individually cleaning all vents

**NATHAN:** Dir: **416.893.8363,** Tel: **416.286.2416,** www.megaduct.com


கனேடிய தமிழ் கலைஞர்கள் கழகம்
பாரதி புறொடக்கூஷன்ஸ் வழங்கும்
கே. எஸ். பாலச்சந்திரனின் அண்ணை றைற்
முதலான தனிநடிப்பு நிகழ்ச்சிகளின் தொகுப்பு
இறுவட்டு (CD) வெளியீட்டு விழா
K.S. Balachandran's
ANNAI RIGHT
STANDUP COMEDY
கே. எஸ். பாலச்சந்திரனின்
அண்ணை றைற்
தனிநபர் நகைச்சுவை நிகழ்ச்சிகள்
October 7th 2007 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:30க்கு
இடம்: Scarborough Civic Centre
150 Borough Drive
(North-west corner of
McCowan Road and Ellesmere Road)
தொடர்புகளுக்கு: (416) 529-2821
(416) 457- 8424 (416) 400-6406
http://www.karavaiyuran.blogspot.com


அரங்கேற்றம்
இராகலயம் இசைக்கல்லூரி மாணவி
செல்வி பிருந்தா ஜெயானந்தன் அவர்களின்
கனிஸ்ட இசைக் கதம்ப அரங்கேற்றம்
( வாய்ப்பாட்டு, வயலின் & Key Board )
அன்பு
அறிவிப்பாளர்
அப்துல் ஹமீத்
பிருந்தா
ஜெயானந்தன்
பிருந்தா
ஜெயானந்தன்
அதிபர் இராகலயம் இசைக்கல்லூரி
சங்கீத வித்துவான், இசைத்திலகம், வயலின்
வித்துவான் பல்கலைவேந்தன். இசை அமைப்பாளர்
On Saturday September 15, 2007 @ 5:30 pm
Toronto JCC Leah Polsuns Theatre (Sheppard / Bathurst)
Accompaning Artists
வயலின் வித்துவான்
K.S. இரவீந்திரன்
மிருதங்கம், தபேலா
கலைமாமணி
K.S. ராஜ்குமார்
கடம்
S.சண்முகலிங்கம்
மோர்சிங்
S. சிறீஸ்காந்தன்
அணிசேர் இசைக் கலைஞர்கள்
K.S. Rajkumar, Ayas Savahir, Amal Peeris, Ravi Selliah, Roy Fernando, Suresh Sivanantharajah


தகவல்
2008
வர்த்தகக் கைநூல்
தகவல் வர்த்தகக் கைநூல் 2008 இற்கான விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. தகவல் வர்த்தகக் கைநூலில் இலவசமாக விளம்பரங்களை பிரசுரிக்க விரும்புவோர் உங்கள் விளம்பரங்களை 4.5"x 2.1" அளவில் வடிவமைத்து அனுப்பிவைக்கவும். அல்லது உங்கள் வியாபாரத் தன்னறிமுக அட்டையை எமக்கு மின்னஞ்சலிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்கவும்.
FREE
digi Media Creations
Tel: 416.361.0482
Fax: 416.361.0482
www.3610482.com, info@3610482.com
55 Nugget Ave., Suite 230, Toronto, ON M1S 3L1


# அர்ப்பணிப்புடன் கூடிய சேவை

1


# UPROPERTIES.COM





**_Lakeshore/Bathurst_**
2+1 Bedrooms,
3 Washrooms, Completely Custom Finished Condo Left With Selective Materials. Surreal View Of The Entire City & Lake. Heated Floor Throughout. All Light Fixtures, Plumping & Wiring Are Upgraded.




**_Markham/Elson_**
4 Bedrooms,
3 Washrooms, Excellent Location!!! Minutes To Highways, Shoppings, Restaurant, Close To T.T.C Park,Steps Away From School, New Double Door Entry, Easy To Convert W/O Basement




**_Bramalea / Queen_**
4 Bedrooms,
3 Washrooms, Spacious 4 Bdrm Semi-Detached Double Door Entry House In A Desirable Neighbourhood. Approx. 2058 Sq Ft. Master Bdrm With 5 Pc Ensuite




**_Squre one (Mississauga)_**
3+2 Bedrooms,
2 piece: 1 Washrooms, Great Neighbourhood, Convenient Location, Child Safety Cul De Sac Street, Potential Complete In-Law Suite, Closer To All Major Hwys, Malls, Restaurants, Schools In Walking Distance.

digi Media

UTHAYA

**_UTHAYAN NADARAJAH_**
_Broker_

**Cell: .416.727.9945**



ROYAL LEPAGE
Credit Valley Real Estate Brokerage
104-44 Peel Centre Drive, Brampton, L6T 4B5. Tel: 905.793.5000

# M and M CONSULTANTS

Serving 22years in Canada
www.mandmconsultants.net

- Financial Planning
- Advice on Bankruptcy
- Arrangement with Creditors
- Credit Management & Counselling
- Corporate & Personal Tax Consultations
- Settlement without Bankruptcy / Consumer Proposals
- Interview with CCRA and Ministry of Finance on Audit Issues
- Client Support on Audit Issues relating to Canada Revenue Agency & Ministry of Finance

2075 Lawrence Ave East #203
(Warden & Lawrence)
Scarborough, ON
M1R 2Z4
Tel: 416-266-0706
Fax: 416-256-2876

3645 Bathurst Street #212
(Bathrust & Wilson)
North York, ON
M6A 2E4
Tel: 416-256-9550

BMK

# SERANDIBTRAVEL1

AROUND THE WORLD WITH SERANDIB




Serandib Travel1


For tour packages and more information contact us or vist our website. TICO (retail) #:50012691

Toronto: 416-750-0009, Montreal: 514-448-1389,
Canada wide Toll Free: 1-888-207-0902
serandibtravel1@bellnet.ca www.serandibtravel.com

USA

| | | | |
|---|---|---|---|
| New York: | 716-408-0342 | Detroit: | 313-263-0610 |
| Washington DC: | 202-517-0139 | Chicago: | 312-625-1420 |
| Los Angeles: | 213-254-0119 | Miami: | 305-625-4102 |
| New Jersey: | 732-783-1513 | Honolulu: | 808-457-1730 |

# கோடை விடுமுறை



திரு மகேசன்

புனித மண்ணாக இந்துக்களாலும்,மற்றைய மதத்தவர்களாலும் மதித்துப் போற்றப்படும் இந்தியாவின் வடக்குப் புறத்தின் மனதை விட்டகலாக் காட்சிகளை மனக்கண் கொண்டு ஜெய்ப்பூரிலிருந்து டில்லி நோக்கி பயணமாகி இரவு உணவையும், தூக்கத்தையும் டில்லி நகரின் அழகிய ஹோட்டலில் கழித்தபின் மறுநாள் காலை டெல்லி நகரின் அழகைக் காணும் பயணம் ஆரம்பமாகிறது.

5000 ஆண்டுகள் சரித்திர சான்றுகளை சுமந்து நிற்கிறது டெல்லி நகரம். முகலாய சாம்ராஜ்யத்தின் ஏற்றங்களையும் இறக்கங்களையும் கண்ட மண்ணல்லவா?. Purana Qila இவை எல்லாவற்றிற்கும் சாட்சியாக நிமிர்ந்து நிற்கிறது. மகாபாரதத்தில் 'இந்திரப் பிரத்த' என்று குறிப்பிடப்படுவது இந்த டெல்லி தான் என ஐதிகமுண்டு. பழைய டெல்லி சன நெரிசல் அதிகமாகவும் புதுடெல்லி மேற்குலக கலாச்சாரச் சீரழிவுகள் நிறைந்ததாகவுமிருக்கிறது.



'காஷ்மீரி கேட்' என்றழைக்கப்படும் பஸ் தரிப்பு நிலையத்தில் நேப்பாள நாட்டிலிருந்து வரும் பயணிகளை காணக்கூடியதாக இருக்கின்றது. சுவாமி விவேகானந்தரின் நினைவாக அமைந்திருக்கும் ஆனந்த விகார் பஸ்தரிப்பு நிலையமும் பகல் வேளையில் சனநெரிசலால் மூழ்கித் தவிக்கிறது.

Red Fort என்றழைக்கப்படும் செங்கோட்டையே உல்லாசப் பிரயாணிகளின் முதன்மை கவர்ச்சியைப் பெறுகிறது. முகலாய சாம்ராஜ்யத்தின் பேரரசன் சாஜகான் தனது அரச கட்டிடமாகப் பயன்படுத்த இதைக் கட்டினான். இவனாலேயே இந்தியாவுக்கு பெருமைசேர்ந்த காதல்ஓவியம் தாஜ்மகாலும் கட்டப்பட்டது. 1648 இல் Red Ford கட்டி முடிக்கப்பட்டது. இதனை முற்று முழுதாக அனுபவித்து சுற்றிப் பார்க்கவே ஒரு நாள் தேவை.

Unesco வின் உலக கலாச்சார பாதுகாப்பு பகுதியாக பாதுகாக்கப்படும் Humayun's Tomb பிரதேசம் டெல்லியில் தான் காணப்படுகின்றது. Tomb of Humayun 1562 இல் இரண்டாவது முகலாய பேரரசால் கட்டப்பட்டது. இதன் இரண்டாவது தளத்திற்கு ஏறிச் சென்றால் அங்கே தான் Humayun புதைக்கப்பட்ட (Buried) சமாதியைக் காணலாம்.

இங்கிருந்து Inida Gate வழியாக Rashrapati Bhavan இன் கம்பீரம் காண நுழைகின்றோம். முன்னர் அப்துல் கலாம் அவர்கள் அலங்கரித்த ஜனாதிபதி மாளிகை மலர்த் தோட்டங்களால் பூத்துக் குலுங்குகிறது. ஜனாதிபதி மாளிகையின் ராஷ்ரபதி பவனினுள் நுழைவதற்கு நாம் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.தமிழர்களைக் காண ஜனாதிபதி அப்துல் கலாம் அதீத அக்கறை காட்டுவது வழமை. நமது குழுவினர் பலர் அவரோடு அவருக்குப் பிடித்தமான றோஜா தோட்டத்தில் அளவளாவும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். மாலை நேரத்தில் ராஷ்ரபதி பவனில் சனத்திரள் அலை மோதுவது அதிகம். நாம் வாழ்நாளில் மறக்காமல் பார்க்க வேண்டிய இடங்களில் இதுவும் ஒன்றாகும்.

இங்கிருந்து உலகத்திற்கே அகிம்சையைப் போதித்த மகாத்மா காந்தியின் சமாதிக்குச் செல்கின்றோம். Rajghat என்றழைக்கப்படுகிறது இப்பிரதேசம். அமைதியே உருவாக அகிம்சையின் தந்தை என்று போற்றப்படும் காந்தி சமாதியைக் காணச் செல்லுமுன் காட்டப்படும் பாதுகாப்பு கெடுபிடிகள் எதற்காக என்றே புரியவில்லை. மண்படுக்கைகளால் மிகஅமைதியே உருவாக நெஞ்சை உருக்குகிறது காந்தி மகானின் புனித பிரதேசம். ஜனவரி மாத 30ஆம் திகதி மட்டும் இங்கே தயவு செய்து போக முயற்சிக்காதீர்கள். அரசியல் பிரமுகர்கள், பிரதமர் முதல் மந்திரிகள் வரை இப் பிரதேசத்தில் நுழையவே முடியாது.



கடல் மட்டத்திலிருந்து 1360 அடி உயரத்தில் அமைந்திருக்கிறது ரிஷிகேசம். பரதன் தியானத்தில் ஈடுபட்டதாகச் சொல்லப்படும் ஆலயம் இங்கே அமைந்துள்ளது. Luxman Jhula என்றழைக்கப்படும் 450 அடி உயர பாலமானது 1939 இல் கட்டப்பட்டது. இதனுடன் புதிதாக கட்டப்பட்ட Ram Jhula இணைக்கப்பட்டுள்ளது.இப்பாலத்தில் நின்று கங்கை நதியின் ஓசையையும், குளிர்ந்த சுவாசத்தையும் அனுபவிக்க முடியுமே தவிர எழுத்தில் தரமுடியாது.

ஹரித்துவாரிலிருந்து 25 கி.மீற்றர் தொலைவிலுள்ளது ரிஷிகேசம். 'World of Yoga' என்றே ரிஷிகேசம் அந்நிய நாட்டவர்களால் அழைக்கப்படுகிறது. திரும்பிய பக்கமெல்லாம் ஆலயங்கள், மெய்மறந்து தியானத்திலிருப்பவர்கள், யோகா பயிற்சி பெறுபவர்கள் எனறு ஒரே தியான பூமியாக ஜொலிக்கிறது ரிஷிகேசம். சுவாமி சிவானந்தாவால் ஆரம்பிக்கப்பட்ட சிவானந்த ஆசிரமம் வெளிநாட்டுப் பயணிகளால் நிரம்பி வழிகிறது. மாலை நேரத்து 'Ganga Arathi' மனதைப் பிழிகிறது. Ganga Arathi எனப்படும் கங்கையை தீபத்தால் ஆராதிக்கும் நிகழ்வில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுகின்றனர். ஹோட்டல்களில் தங்கியிருப்பவர்கள் கூட மாலை மங்கும் வேளையில் கங்கையில தமது விளக்கு தீபத்தை கங்கை நதியில் மிதக்க விட்டு கங்கை நதியை ஆராதனை செய்கின்றார்கள். மங்கலான ஒளியில் கங்கை நதியில் தீபங்கள் நகர்ந்து செல்வது அழகைக் கொடுக்கின்றது. ரிஷிகேசத்தில் தங்கியிருப்பவர்களும், வருகை தருபவர்களும் இந்த தீப ஆராதனையில் கலந்து கொள்ளத் தவறுவதேயில்லை. சந்தனவாசனை எம் சுவாசத்தை ஊடுருவ, மந்திர உச்சாடனங்கள் மனதை ஒருமைப்படுத்த இந்த அனுபவத்தை எப்படி வர்ணிப்பது? ரிஷிகேசத்தின் ஆலய மகிமைகளைக் கண்டு களித்தபடி மறுநாள் அதிகாலை ஆலய தரிசனத்திற்காக ஹரித்துவார் நோக்கி புறப்படுகின்றோம்.



Haridwar என்பதன் அர்த்தமே புதுமையானது. Hariஎன்பது ஆண்டவர் Dwar என்பது வாசல் என்பதாகவும் குறிக்கப்படுவதால் Haridwar என்பது 'Gateway to God' எனப்படுகிறது. இந்துக்களின் 7 புனிதப் பிரதேசங்களில் ஹரித்துவாரும் ஒன்றாகக் கருதப்படுகிறது. தேவர்கள் தமது காலடித் தடங்களை இங்கே பதித்திருப்பதாக ஒரு ஐதிகம். 12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பமேளா இங்கே மிகப் பிரசித்தி பெற்றதாகும். இங்கே கும்பமேளாவில் கலந்து கொள்ள இமயமலையிலிருந்து பல சாதுக்கள், சித்தர்கள் கூட ஹரித்துவார் வந்து செல்வது வழக்கம்.

கருடனால் கொண்டு செல்லப்பட்ட கும்பத்திலிருந்து அமிர்தத்தின் ஒரு பகுதி ஹரித்துவாரில் விழுந்ததாக சொல்லப்படுகிறது. அதனால் தான் இங்கே நடைபெறும் கும்பமேளாவில் கலந்து கொண்டு கங்கையில் மூழ்கி நமது பாவங்களைப் போக்கிக் கொள்ள முடியும் என்று ஹரித்துவாரில் சொல்லப்படுகிறது. இவ் அமிர்தம் விழுந்த இடத்தை பிரம்ம குண்டம் என்றழைக்கின்றார்கள். எனவே தான் இங்கே பாவங்களைக் கழுவுவதால் மோட்சத்தை அடையலாம் என்று அதிகம் ஐதிகம் உண்டு. இன்னமும் இடிபாடுகளுக்கிடையே பண்டைய இந்து கலாச்சார சின்னங்களை உள்ளடக்கியபடி ஹரித்துவார் விளங்குகின்றது. பிரம்மா,விஷ்ணு, சிவன் மூவரும் இன்னமும் ஹரித்துவாரில் பிரசன்னமாகியிருப்பதாகவே கூறப்படுகிறது. விஷ்ணுவின் பாதச் சுவடுகள் HAR-KI-PAUR இன் உயர்ந்த சுவர்களில் பதிந்திருப்பதாக சொல்லப்படுவதால் அச்சுவரின் உயரத்திற்கு எந்நேரமும் கங்கை நதியானது பாய்ந்து நனைத்தபடி இருப்பதைக் காணும் போது நெஞ்சம் சிலிர்க்கின்றது. திரும்பிய பக்கமெல்லாம் பக்தி மணம் கமழும் ஹரித்துவாரில் நமதுமனத்தைப் பண்படுத்தி தூய்மைப்படுத்தி கங்கையை கையெடுத்து வணங்கி நாம் பிறந்ததன் பயனாய் இப் பூமிக்கு வருகை தர ஆண்டவர் ஒரு சந்தர்ப்பத்தை தந்ததற்கு நன்றியை கூறி வாரணாசி நோக்கி புறப்படுகின்றோம்.

கங்கை நதியோரம் அமைந்திருக்கும் வாரனாசியை ஆங்கிலேயர்கள் அன்றைய காலத்தில் பனாரஸ் என்றும் இன்றைய காலகட்டத்தில் வாரனாஸ்- காசி என்றும் அழைக்கின்றார்கள். வாரனாசியின் திரும்பிய பக்கமெல்லாம் தாடி, சடையுடனும் காவி உடையுடனும் நிறைந்திருக்கும் சாமியார் கூட்டத்திற்கு எல்லையே இல்லை. இந்துக்களின் Holy City என்றே வாரனாசி அழைக்கப்படுகின்றதாக ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் காசியே வாரனாசி ஆகும். எத்தனை ஆயிரம் ஆண்டுகளை கடந்த பின்பும் வாரனாசி இந்து கலாச்சாரம் மறையாது

■ ■ ■




சொற்ப ஆசனங்களே இருப்பதால் உங்கள் ரிக்கற்க்கு முந்துங்கள்! - ரிக்கற் கிடைக்குமிடங்கள்

| | |
|---|---|
| Sunrise Food Market | 416 287-9779 |
| Kana Super Market | 416 534-7770 |
| New Ocean Super Market | 416 292-0122 |
| Markham Video | 905 294-4253 |
| Markham Spicy Mart | 905 294-2336 |
| Yarl's Super Store | 416 923-9806 |
| A.V.S. Super Stores | 416 496-9160 |
| Thanishi & Brothers | 416 332-0961 |
| Murugan Book Depot | 416 285-9118 |
| P.J.J. Dollar Var & Gift | 416 916-2933 |
| Kumar Video | 416 292-9043 |
| N.N. Video Ltd. | 416 289-1730 |
| Sathi Yal Market | 416 266-5025 |

## வீடு திருத்துவதற்குத்

# தகுந்த ஒப்பந்தகாரரைத் தேர்ந்து எடுப்பது எப்படி?


அலன் சிவசம்பு

- வீடு விற்பனைப் பிரதிநிதி -




நீங்கள் ஒரு வீட்டைத் திருத்துவதற்காகவோ அல்லது வீட்டைச் சீர்திருத்துவதற்காகவோ முடிவு எடுத்தால், ஒரு ஒப்பந்தகாரரைத் தேர்ந்து எடுக்கவேண்டி வரும். அப்படியான நிலையில் நல்ல ஒரு ஒப்பந்தகாரரைத் தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாது, சந்தையில் அதற்கான சரியான விலையையும் எவ்வாறு அறிந்துகொள்வது எனப் பார்ப்போம்.

ஒரு ஒப்பந்தகாரரை அமர்த்தும் போது, அவரை உங்களுக்குத் தெரிந்தவர்களூடாக – ஏற்கனவே அவரது வேலை அனுபவத்தோடு தெரிந்தவர்கள் மூலம் எடுப்பதால் அவரது வேலைத் தரத்தையும் அதற்கான செலவையும் இலகுவாக அறிந்து கொள்ளலாம். அப்படித் தெரிந்தவர்களூடாக எடுக்கமுடியாத நிலையில், நீங்கள் தகவல்கள் கொடுக்கப்படும் புத்தகங்களில் தொலைபேசி இலக்கங்களைப் பெற்று அதில் நான்கோ அல்லது ஐந்தோ ஒப்பந்தகாரருடன் கதைத்து, அதில் சிலரைத் தேர்ந்தெடுத்த பின்பு, அவர்களிடம் உங்களது திருத்தவேண்டிய தகவல்களைச் சரியாகக் கொடுத்த பின்பு, அவர்களிடம் எவ்வளவு செலவு உண்டாகும் எனப்பார்த்தல் வேண்டும். ஆகக் குறைவான செலவில் செய்ப்பவர்களையும் தேர்ந்து எடுத்துவிடக் கூடாது. குறைந்த செலவில் சரியான வேலையை, செய்து முடிக்க முடியாதவர்களாக இருக்கலாம். அத்துடன் அவர்கள் ஒரு ஒப்பந்தத்தை எடுக்கும் நோக்கம் மட்டும்தான் இருக்குமே தவிர அதைச் சரியாகச் செய்துமுடிக்கும் அனுபவம் குறைவாக இருக்கலாம். ஆகவே, நீங்கள் இரண்டோ அல்லது மூன்றோ ஒப்பந்தகாரர்களைத் தேர்ந்தெடுத்த பின்பு அவர்களிடம் தேவையான லைசென்ஸ் உள்ளதா எனவும் அத்தோடுworker's compensation உரித்தான காப்புறுதியும் property damage and personal liabilityக்கான காப்புறுதியும் உள்ளதா எனவும் பார்த்தல் வேண்டும். அதன் பின்பு, அவர்கள் வேறு இடங்களில் வேலை செய்த ஆதாரங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும். அதன்பின்பு அவர்கள் வேலை செய்தவர்களுடன் தொடர்புகொண்டு, இவர்களின் வேலையைப் பற்றிய தகவல்களையும். அதற்கான செலவுகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ளவும். அவர்களுக்கு இவர்களில் நல்ல அபிப்பிராயம் இருந்தால் அவர்களின் வேலையைப்பற்றி உத்தரவாதத்தைத் தருவதற்குத் தயங்கமாட்டார்கள். அவர்களின் உத்தரவாதத்தில் உங்களுக்குத் திருப்தியாக இருந்தால் அவர்களுக்கு இந்த ஒப்பந்தம் மட்டும்தானா அல்லது வேறு ஒப்பந்தங்களும் உள்ளதா எனவும், அத்தோடு இதை இந்த ஒப்பந்தம் எடுப்பவர் தான் நின்று செய்து முடிப்பார்களா அல்லது வேறுஒருவரைப் பொறுப்பாக விடுவார்களா என்பதையும் கேட்டு அறிந்து கொள்ளவும். ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தபின்பு ஒப்பந்தத்தை எழுத்து மூலமாக உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நீங்கள் எழுதும் ஒப்பந்தத்தில் இரண்டு தரப்பினதும் பெயர்கள், விலாசங்கள் என்ன வேலை செய்யப்போகின்றார்கள் எப்படியான materials பாவிக்கப் போகின்றார்கள், அத்துடன் கொடுப்பனவுகள், திகதி போன்றவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். ஆகவே, ஒப்பந்தத்தில் இருக்கவேண்டியவற்றை முழு விபரமாகக் கீழே பார்ப்போம்.

முதலாவதாக, ஒப்பந்தத்தில் ஈடுபடும் இரண்டு தரப்பினரும் பெயர், விலாசம் அத்துடன் என்ன வேலைகள் செய்வதற்காக இரு தரப்பினரும் ஒத்துள்ளார்கள் எனப் பார்த்தல் வேண்டும். ஆகவே எவர் எந்த வேலைக்குப் பொறுப்பு என்பதைச் சரியாக எழுதிக்கொள்ளுதல் வேண்டும். அதாவது, உதாரணமாக ஒரு வீட்டை உடைத்துப் புதிய வீடு ஒன்றைக் கட்ட வேண்டுமானால், அந்த இடத்தை உடைப்பதற்கு ஒத்துள்ளவர், அதைத் துப்பரவு செய்பவரின் பெயர்கள் என்பன தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் உங்களது திட்டத்தில் தொடக்கம் முதல் முடிவுவரை தெளிவாக இருக்க வேண்டும். காரணம் உங்களது பிரதானமான திட்டத்தில் ஏதாவது ஒரு மாற்றம் ஏற்பட்டாலும் நீங்கள் மேலதிகமாகப் பணம் செலுத்தவேண்டி இருக்கும். காரணம் மேலதிக மாற்றங்கள் வேலையை அதிகமாக்கும்.

### Mterials:

என்ன materials பாவிக்கப்பட வேண்டுமென்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். அப்படிக் குறிக்கும்போது அந்த materials சரியாகக் கிடைக்காவிட்டால் அதற்குச் சமமான materials பாவிப்பதானால் அதற்கு முதலில் உங்களதுஅனுமதி வேண்டும் என்பதையும் உள்ளடக்க வேண்டும். அத்தோடு உங்களது original plan budget இல் சேர்க்கப்படாமல் இருக்கும் plumping fixtures and floor coverings என்பவை உங்களது budget இனுள் அடங்கி உள்ளதாக இருத்தல் அவசியம்.

### Payments and dates

உங்களது ஒப்பந்தத்தை எழுதும் போது உங்களது வேலை முடியும் சரியான திகதியையும் வேலை செய்வதற்கான பணத்தை எந்தத் திகதியில் கொடுக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடுதல் நல்லது. எதுவித காரணம் கொண்டும் நீங்கள் செலுத்தவேண்டிய பணத்தைவிட அதிகமாகச் செலுத்த வேண்டாம்.


அத்துடன் சில ஒப்பந்தகாரர் வேலை தொடங்கும் முன்பு deposit கேட்பது வழக்கம். அப்படியான நேரத்தில் உங்களது ஒப்பந்தத்தின் 10வீதம் அல்லது 1000 இதில் எது குறைவாக இருக்கின்றதோ அதைக் கொடுக்கலாம். அதே நேரத்தில் மேலதிகமான பணத்தினை வேலை நடந்துகொண்டிருக்கும் போதும் கொடுக்கலாம். பணத்தைச் சரியாகச் செலுத்தும்போதுதான் வேலை செய்பவரும் வேலையைத் தொடர்ந்தும் செய்வதற்குத் தூண்டப்படுவார்கள்.

வேலை முடியுமுன்பு completion statement இல் ஒப்பமிடக் கூடாது. அத்துடன், materials தருபவர்களோ அல்லது subcontractors உங்களது projectஇல் கூலி செலுத்தா விட்டால் உங்களது property இல் lien போட முடியும். அதாவது உங்களது வீட்டு உறுதியில் கடன் கொடுக்கப்படவேண்டும் என்னும் தகவல் இணைக்கப்படலாம். ஆகவே, suppliers இனதும் subcontractors இனதும் கூலிகள் (பணம்) சரியாகச் செலுத்தியதற்கான proof ஐக் கேட்க வேண்டும். அத்தோடு உங்களது payment இன் ஒரு பகுதியை escrow account இல் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

■ ■ ■




வீடு வாங்க விற்க



Sutton


Alen Sivasambu

Sales Representative

Please Call Alen :

905-822-5000

Fax: 905-822-5617



alen@sutton.com



Logos
Flyers
Businesscards
Brochures
Cover Designs
Banners/ Posters
Vinyl Signs

Religious Program Recording/Mixing
Radio Commercials
Tamil Karaoke Songs
Tape to CD Transfers
CD Albums
Voice Dubbing & Re-recordings
Audio Mixing & Mastering

Video Commercials
Logo Animation
Short Films
HD Movie Production

"Connecting your voice to media"

STS ADVERTISING

416 640 5445

stsads@gmail.com


Kuberan
Divine Homes
1845 Lawrence Av.East. Scarborough,
ONT. M1R 2Y3 (Lawrence /Pharmacy)
Tel: 416 999 3997, 647 435 0105
சுவாமி சிலைகள், குபேரன் சிலைகள், வலம்புரிச் சங்குகள்,
அலங்காரப் பொருட்கள், பூச்சாடிகள்
அன்பளிப்பு பொருடகள் இன்னும் பல...
www.divinehome.org
divinehome@rogers.com


For all occations
BOBBIKA
Bridal & Hair styling
Certified Hair Stylist, Over 15years Experience in SriLanka, India & Canada
திருமணம், பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு, ஒன்று கூடல்
வைபவங்களுக்கு பெண்களை
அழகுபடுத்த அழையுங்கள்
Bobbika 905- 470 0337 • 416- 737 4807

# Zero Down Zero Net

மாறன் செல்லையா
- நிதி திட்டமிடல் ஆலோசகர் -



அமெரிக்காவில் 23 மில்லியன் Digital T.V கள் 34 மில்லியன் MP3 Players, 127 மில்லியன் wireless கருவிகளை நுகர்வோர் வாங்கியிருக்கிறார்கள். இதை வாங்குவதற்காக தங்களது வீட்டின்பெறுமதியை அடமானம் வைத்து அந்தப் பணத்தில் இவற்றை வாங்கியுள்ளார்கள்.

வட்டி வீதங்கள் குறைவாக இருக்கையில் வீட்டின்விலை உயர்ந்து கொண்டு போகையில் இவற்றை வாங்குதல் எல்லாம் இலகுவாக இருந்தது. தற்போது வட்டி வீதங்கள் உயர்ந்து வீட்டின் பெறுமதியும் குறைந்து கொண்டு போகையில் பல பேருக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதிலும் கடன் எடுக்க முடியாத நிலையிலிருந்தோருக்கு கொடுக்கப்பட்ட அடமானக் கடன்கள் மிகவும் இக்கட்டான நிலையை அடைந்துள்ளன. இக் கடன்களை Sub Prime mortgage என்பார்கள்.

இந்த அடமானக் கடன்களைக் கொடுக்கும் நிறுவனங்கள் இந்த அடமானங்களை மீளக் கட்டமைத்து புதிய அலகுகளாக அமைத்து வேறு முதலீட்டாளர்களுக்கு விற்பது வழக்கம். தற்போது இந்த Sub Prime அடமானக் கடனை வைத்திருப்போர் தமது கடன்களை புதுப்பிக்கும் போது கூடிய வட்டி வீதத்திற்கு புதுப்பிக்க நேரிட்டுள்ளது.கூடிய வட்டி வீதத்திற்கு இந்த அடமானக் கடன்களைப் புதுப்பிக்கும் போது இந்தக் கடனை இனியும் கட்டமுடியுமா? கட்டவேண்டுமா? என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி வங்குரோத்து நிலைக்கு போகும் வீட்டு உரிமையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

இப்படி சாதாரண சராசரி மக்கள் வங்குரோத்துக்குப் போகும்போது அது அவர்களுக்கு கடன் கொடுத்த நிறுவனத்தையும் அந்த நிறுவனத்திடம் இருந்து இந்த அடமானக் கடனின் அலகுகளை வாங்கியமுதலீட்டாளர்களையும் பாதிக்கிறது.கனடாவில் மட்டும் இப்படிப்பட்ட கடன்கள் 140 பில்லியன் வரையில் இருக்கலாம் எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.


இப்படி இநத தொடர் விளைவு சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அமெரிக்கப் பொருளாதாரத்திலும் அமெரிக்க நுகர்வோர் மீதும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. உலகின் மிகப் பெரிய சந்தையான அமெரிக்காவில் எற்பட்ட சிறிய அதிர்ச்சி உலகெங்கணும் உள்ள பங்குச் சந்தைகளில் விலை வீழ்ச்சியை ஏற்படுத்தி பல முதலீட்டாளர்களுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளது.

அடமானக் கடன் நிறுவனங்களின் கடன் கடமைகளை புதுப்பிக்க வேண்டிய நேரத்தில் முதலீட்டாளர்கள் புதுப்பிக்க தயங்கியதால் அல்லது கூடிய வட்டி வீதங்களைக் கேட்டதால் கடன் சந்தையில் ஒரு நெருக்கடி ஏற்பட்டது. இந்த நெருக்கடியைத் தொடர்ந்து உலக நாடுகளின் மத்திய வங்கிகள் பல பில்லியன் டொலர்களை பணச் சந்தைக்கு கொடுத்து வட்டி வீதங்களை சமப்படுத்தியுள்ளன.

ஒருமுறை வந்து போயுள்ள இந்த எச்சரிக்கை அதிர்வினால் அமெரிக்க மத்திய வங்கி 0.5% வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது.

இது இவ்விதமிருக்க வீழ்ச்சியடைந்து வரும் வீடுகளின் விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியடையுமா? அல்லது ஒரு சமநிலை அடையுமா? இந்த நேரத்தில் அமெரிக்க மத்திய வங்கியின் செயல் தேவையானதுதானா? பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதா? கிறது. கடன் வாங்குவோர்கள் அதனை திரும்பிக் கட்டும் பணத்தை எங்கிருந்து பெறப்போகிறார்கள் என ஆராயாமல் கடன் கொடுத்தல் ஒரு பொறுப்பற்ற செயலாகும்.

உலக முதலாளித்துவ பொருளாதாரம் இந்த இக்கட்டில் இருந்து மீளும், ஏனென்றால் மத்திய வங்கிகளும் பெரிய நிதி



என பொருளியல்அறிஞர்கள் பலரும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டில் அமெரிக்க நுகர்வோர் 100 டொலர் உழைப்பதற்கு 93 டொலர்களை செலவழித்தார்கள். 7 டொலர்களைச் சேமித்தார்கள். இன்று 100 டொலர் உழைப்போர் 136 டொலர்களை செலவழிக்கிறார்கள். இதற்கு வீட்டின் பெறுமதியில் இருந்து கடன் வாங்குவது ஒரு காரணமாகும். இப்படி எவ்வளவு காலத்திற்கு அமெரிக்க பொருளாதாரம் நடக்கும்?

அமெரிக்காவின் ஒரு முதன்மையான தொழில் அதிபர் Henry Ford தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தனது காரை வாங்க வசதி இருக்க வேண்டும் என சிந்தித்து அந்த தொழிலாளர்களுக்கு தேவையான ஊதியத்தையும் வசதிகளையும் செய்து கொடுத்தார். அவரைப் போலவே இருந்த பல்வேறு தொழில் அதிபர்களால் அமெரிக்கா செழித்தது. ஆனால் இன்றைய பெரிய நிறுவனங்களான Wal Mart போன்றவை மிகக் குறைந்த சம்பளத்தையே கொடுக்கின்றன.

Wal Martஇல் வேலைசெய்வோர் Salvation Army இல் தான் பொருட்களை வாங்கலாம். Wal Mart இல் கூட மற்றைய இலத்திரனியல் பொருட்களை வாங்க Wal Mart ஊதியம் கொடுப்பதில்லை.இப்படி குறைந்த ஊதியம் பெறுவோரை கவர்ச்சிகரமான கடன் திட்டங்கள் கவர்ந்து இருக்கின்றன.

Pay day loans, rent to, buy, No payment till 2009 மிகக் கவர்ச்சிகரமான திட்டங்கள். இத்திட்டங்கள் ஒரு பொறிபோல நுகர்வோரை கவர்ந்து இருக்கின்றன. அமெரிக்காவின் J.C Penney போன்ற நிறுவனங்களை அமைத்தோர் நுகர்வோரின் நிதி ஆரோக்கியத்தை மனதில் கொண்டு மற்றைய நிறுவனங்கள் கடன் கார்டுகளை அறிமுகப்படுத்திய போதும் தமது நிறுவனத்தில் கடனுக்கு விற்பனை செய்வதை நிராகரித்து வந்தார்கள்.

அதிலும் கடந்த சில ஆண்டுகளாக கடனை அதன் வட்டியைக் கட்ட முடியாமல் போகக் கூடியவர்களுக்கு உயர் வட்டியில் கடன் கொடுக்கும் நிலை உச்ச நிலையில் இருக்கிறது.

நிறுவனங்களும் அதற்காகிய நடவடிக்கையில் இறங்கியுள்ளன. ஆனாலும் முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் நுகர்வோரின் பழக்க வழக்கங்களை ஆய்ந்து அதற்கேற்ப ஏழை மத்திய தர வர்க்கத்தின் ஒவ்வெரு சதத்தையும் உறிஞ்சுமாயின் அது முதலாளித்துவத்தின் நீண்ட கால ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல.

அமெரிக்காவின் சிறிய நகரங்களில் சில கறுப்பின மக்கள் சமர்ப்பித்த வங்குரோத்து விண்ணப்பங்கள் ரோக்கியோவிலிருந்து நியுயோர்க் வரையிலும் சிட்னியிலிருந்து லண்டன் வரையுமான பங்குச் சந்தைகளை அதிர வைக்குமானால் இதன் அடிப்படைப் பிரச்சனையை சரியாக அணுகாவிட்டால் என்ன நடக்கும்?

இது இவ்விதமிருக்க கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற கம்பர் இப்போது இங்கிருந்தால் கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கினான் என்று முடிப்பாரோ?

■ ■ ■

Law Office
T. JEGATHEESAN
(Barrister, Solicitor and Notary Public (on)



உங்கள் சட்டப் பிரச்சினை எதுவாகிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.
தி. ஜெகதீசன்
(Barrister, Solicitor and Notary Public (on)
Off: 416 • 266 • 6154
Res: 416 • 449 • 0358
Fax: 416 • 266 • 4677
2620 Eglinton Ave., East # 201
Scarborough. ON
M1K 2S3

தாய் வீடு
THAIVEEDU உள்ளும் புறமும்
வீடு பத்திரிகையில்
விளம்பரம் செய்வீர்.
வணிகத்தின்
எல்லைகளை
விரிவாக்குவீர்!
416-400-6406


UT AUTO TECH
General Repair & Tire Change
• செய் நேர்த்தி • நம்பிக்கை • உத்தரவாதம்
• Oil Change
• Driver Shaft
• Upper Control
• Ball Joint
• Time Belt Pakage
• Brakes
• Fast Tire Change & Wheel Balancing
New & Used Tire SALE!!
உங்கள் பழைய வாகனங்களை புதிய வாகன மிடுக்கோடு தருகிறோம்.
இயந்திரம் மற்றும் வாகன உற்புற சாம்பூ
Engine $34.99
Interior from $79.99
Engine & Interior Shampoo
Oil Change $24.99
சகல வாகன திருத்த வேலைகளுக்கும் மற்றும் Body Works களுக்கும் அழையுங்கள்
Call
Uthayan or Babu
Off: 905•910•0148
416•931•1890
166 Bullock Drive Unit #30
(McCowan/ HWY 7)
Markham, ON.
N
Bullock Dr.
McCowan Rd.
HWY 7
Markham Rd.
jayacs ad • 416•275•0070

# உருகு குமிழ்களும் மின்தடைப் பொறிகளும்

- த. சிவதாசன் -
வீடு விற்பனை முகவர்

உருகு குமிழ்களும் மின் தடைப் பொறிகளும் ஒரே கருமத்தையே செய்கின்றன. அதாவது மின் சுற்றில் தேவைக்கதிகமான மின்னோட்டம் இருக்கும் போது இவை அவ்வோட்டத்தைச் சடுதியாக இடை முறிக்கின்றன (Overload). உதாரணமாக உருகு குமிழ் 10A, 15A, 25A, 30A, 60Aஎன்று பல அளவுகளிலும், பல வடிவங்களிலும் இருக்கின்றன. பழைய வீடுகளில் மின் உருகு குமிழ்களும் புதிய (எண்பதுகளில் கட்டிய வீடுகள்) வீடுகளில் மின் தடைப் பொறிகளும் பாவிக்கப்பட்டன. பலர் மின் உருகு குமிழ்களைக் கொண்ட வீடுகளில் விசைப் பலகைகளை தடைப்பொறிப் பலகையாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

உருகு குமிழுள்ள வீடுகளில், விபரம் தெரியாதவர்கள் சிலர் தேவைக்குமதிகமான அளவில் உருகு குமிழ்களைப் பொருத்துகிறார்கள்.உதாரணத்துக்கு சுவரிலுள்ள ஒரு மின் இணைப்பு 15 அம்பியர் உச்சவரம்பு வைத்துப் பொருத்தப்பட்டிருக்கலாம். அச்சுற்றில் 15 அம்பியருக்கு மேல் மின்சாரத்தை இழுக்கும்போது உருகு குமிழிலுள்ள கம்பி உருகி மின்னோட்டத்தைத் துண்டித்து விடுகிறது. விபரம் தெரியாத ஒருவர் இந்த உருகிய குமிழை மாற்றிவிட்டு 25அம்பியர் அளவுள்ள குமிழைப் பொருத்துகிறார்என்று வைத்துக்கொள்வோம்.. இப்போது அந்த மின்சுற்றில் 20 அம்பியர் மின்சாரம் பாய்ந்தாலும் சுற்று துண்டிக்கப்படாது. ஆனால் 15 அம்பியருக்குக்காகத் தயாரிக்கப்பட்ட மின் கம்பிகள் 20 அம்பியரைத் தொடர்ந்து பாய்ச்சிக் கொண்டிருக்கும்போது அம் மின் சுற்று சூடேறி வீடே தீப்பற்றி எரிந்துவிடும். இத்தவறுகளைக் காணுமிடத்து காப்புறுதி நிறுவனங்களும் நட்டஈடு வழங்குவதில் சிரமம்கொடுக்க வாய்ப்புண்டு. துரதிர்ஸ்டவசமாக எல்லா அளவுகளிலுமுள்ள மின் குமிழ்களும் எல்லாத்துளைகளிலும் பொருத்தப் படக்கூடியதாகவிருப்பதால் பெரிய அளவிலுள்ள குமிழ்களைச் சிறிய அளவுள்ள மின்சுற்றுகளில் தவறுதலாகப் பொருத்திவிடுகிறார்கள். இதைத்தவிர்ப்பதற்காக உருகு குமிழ்கள் தத்தம் அளவுகட்கேற்ப வித்தியாசமான நிறங்களில் தயாரிக்கப் படுகின்றன. உதாரணமாக நீலம் 15 அம்பியர்,ஒரேன்ஞ் 30 அம்பியர் என்று தரம் பிரிக்கப்பட்டுள்ளது. சில பலகைகளில் பொருத்தமற்ற உருகு குமிழ்களைப் பொருத்த முடியாதவாறு பிளாஸ்டிக் வளையங்களை (Fuse Rejectors) குமிழ் துளைகளில் பொருத்தி விடுகிறார்கள்.

மின் தடைப்பொறிகள் தேவைக்கு அதிகமான மின்சாரத்தைக் காவும் போது தாமாகவே இடைமுறிக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. இதை Tripவிழுகிறது என்பார்கள். இப்படியான தடைப்பொறிகளைTrip விழுந்த பின்னர் பழைய நிலைக்குக் கொண்டுவரலாம்.(Reset)மீண்டும் trip விழுமானால் மின் சுற்றிலோ அல்லது அதில் பொருத்தப்பட்டுள்ள ஏதாவது ஒரு உபகரணத்திலோ மின்னொழுக்கோ அல்லது குறுக்கிணைப்போ ஏற்பட்டிருக்கலாம்.

## கிளை மின் சுற்று (Branch Circuit)

விசைப்பலகையிலிருந்து(Breaker Panel)மின் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களுக்கு மின்சாரத்தைக் காவிச்செல்லும் இணைப்புகள் செப்புக்கம்பியினால்ஆனவை. இரண்டு தனித்தனி காப்பணி (Insulated) பொருத்திய கம்பிகளும் ஒரு காப்பணியற்றதுமாக மூன்று கம்பிகள் ஒரு கேபிளினூடு செல்லும்.இக்காப்பணிகள் பொதுவாக இரப்பரோ அல்லது பிளாஸ்டிக்காகவோ இருக்கும். ஒரு கம்பி வெள்ளைக் காப்பணியுடனும், மற்றது கறுப்புக் காப்பணியுடனும் இருக்கும்.‘கறுப்பு’க் கம்பியை லைவ் (live) அல்லது ஹொட்(Hot)என்று மின் தொழிலர் அழைப்பர். ‘வெள்ளை’க் கம்பியை ‘நியூட்ரல்’ (Neutral) என்றழைப்பர். மூன்றாவது காப்பணியற்ற கம்பியை ‘கிரவுண்ட்’ (Ground) என்றழைப்பர். இந்த மூன்றையும் சேர்த்து பொதுவான உறைக் குழாய் இருக்கும். இது காகிதத்தாலோ, துணியினாலோ, ரப்பராலோ, பிளாஸ்டிக்கினாலோ அல்லது உலோகத்தாலோ ஆனதாக இருக்கலாம். கறுப்பு வெள்ளை கம்பிகளில் மின்சாரம் பாயும்போது 120 வோல்ட்டுகளும் 15 அம்பியர் மின்சாரத்துக்குக் குறைவானது மாக இருக்கும். கிரவுண்ட் கம்பி மின் அதிர்ச்சி ஏற்படும் நேரத்தில் மட்டுமே மின்சாரத்தைக் கடத்துகிறது. ஏனையவேளைகளில் அதற்கென ஒரு கடமையுமில்லை. 1950களுக்குப் பிறகே வீட்டு மின் இணைப்புகளுக்கு கிரவுண்ட் கம்பி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் சில பழைய வீடுகளில் இரண்டு துவாரங்களுள்ள சுவரிணைப்புகளில் கிரவுண்ட் இணைப்புக்கான துவாரம் இல்லாதிருக்கும். கணனி போன்ற சாதனங்களோ அல்லது ஈர உடலோடு கையாளும் மின்சாதனங்களோ பாவிக்கின்ற போது இந்த கிரவுண்ட் இணைப்பு மிக அவசியமாகிறது. சாதனங்களில் கிரவுண்ட் இணைப்புக்கான கம்பி பச்சைநிற காப்பணியைக் கொண்டிருக்கும்.

சில இணைப்புக் கம்பிகள் சிவப்பு காப்பணிகளினால் அடையாளப ்படுத்தப்பட்டிருக்கும். இவை 240வோலட் சாதனங்களின் இணைப்புக்களுக்காப் பயன்படும். மின்னடுப்பு, உடுப்புலர்த்தி போன்ற சாதனங்கள் 240 வோல்ட் இணைப்பில் இயங்குபவை. இவ்விணைப்புகளில் மூன்று கம்பிகளுடன் கிரவுண்ட் இணைப்புக் கம்பியும் இருக்கும்.

## இரட்டை இணைப்புகள் Doubled-up Circuits

சில பலகைகளில் ஒரு தடைப்பொறியிலிருந்து இரண்டு கம்பிகள் புறப்படுவதை அவதானிக்கலாம். இதை Double-up அல்லது Double-Tap அல்லது Double-Lugs என்று அழைப்பார்கள். இது கட்டிட விதிகளின்படி ஏற்றுக் கொள்ள முடியாதது. பலகையில் தடைப்பொறிகளின் எண்ணிக்கை போதாவிடில் புதிய மின்சுற்றை இப்படி இணைத்து விடுவார்கள். எத்தனை இணைப்புகள் ஒரே சுற்றில் இருப்பினும் அதில் இணைக்கப்பட்ட சாதனங்களின் மொத்த மின் பாவனை (ஒரேநேரத்தில்)15அம்பியர்களைத் தாண்டக் கூடாது. சில சமையலறைகளில் கேத்திலும் மைக்குரோவேவும் ஏககாலத்தில் இயங்கும் போது ‘ட்றிப்’ விழுவதை அவதானிக்கலாம். இது ஒரு ஓவர்லோட் காரணமான நிகழ்வு.

## நெகிழ்விணைப்புகள் Loose Connections

சிலவீடுகளில் மின்விளக்குகள் விட்டு விட்டு எரிவதும் அணைந்து போய்ப் பின்னர் தானாக எரிவதும் அல்லது சுவரில் ஓங்கி உதைத்தால் மட்டுமே எரிவதுமென்று பல விதமான ‘பேய்’ விளையாட்டுகளைக் காண்பிக்கும். இதற்கு முக்கியமான காரணம் நெகிழ்வான அல்லது தளர்வான இணைப்புகளே.இவற்றை உடனடியாகச் சீர் செய்வது நல்லது. இப்படியான நெகிழ்விணைப்புகளிலிருந்து வெப்பம் உருவாகி தீவிபத்து ஏற்படவும் சாத்தியமிருக்கிறது.

■ ■ ■

மூலிகை வைத்தியம்

Herbal Treatment



கனடாவில் 14 வருடங்களுக்கு மேலாக மூலிகை வைத்தியம்
செய்யும் ஒரேயொரு மூத்த வைத்திய நிபுணர்

தேங்காயில் நேரடியாக கொலஸ்ரோல் இல்லை என்று ஆய்வு
செய்து கனடாவில் நிரூபித்த டாக்டர்

நீண்டநாள் வியாதிகள், பிடிவாதமான நோய்கள்,
ஆய்வுகளில் புலப்படாத நோய்கள் இன்னதென்று கண்டு
பிடிக்கப்படாமல் கைவிடப்பட்ட நோய்கள்

- ஆலோர்ஜிஸ்
- குழந்தைகளின் கிரந்தி
- தோல் வியாதிகள்
- ஆண்மைக்குறைபாடுகள்
- மாதவிடாய் கோளாறுகள்
- கை, கால், கழுத்து, நரம்பு வியாதிகள்
- இடுப்பில் இருந்து குதிக்கால் வரையும் பாயும் நரம்பு வலிகள்
- முள்ளந்தண்டு 4ம் 5ம் விலகல்
- தலை மயிரில் புழு வெட்டுதல்

- Head aches + Migraine
- Allergies
- Skin Diseases
- Male Difficulties
- Menses Problem
- Nervous Disorders
- Sciatica
- Carpal Syndrome (Wrist)
- Pinch Nerve
- Twisted Nerve Nerve in hand & Legs
- Prolapsed disc 4 & 5

இங்குள்ள வைத்திய முறைகளால் உங்கள் வியாதி குணமடையவில்லையா?...
இனி என்ன செய்வது!! இலங்கைக்குப் போவோமா? இந்தியாவுக்குப் போவோமா?
என்று ஏங்கும் நோயாளிகள் ஒரு தடவை மட்டும் தொலைபேசியில் அழையுங்கள்.
பல மன உழைச்சல்களும் கவலையும் தீரும்

முன்பதிவு மட்டும் (By Appointment only)
Tel: 905-209-9464

கீதவாணிவானொலி, செந்தாமரை, உதயன், உலகத்தமிழர் பத்திரிகைகள் மற்றும் மருத்துவம் சஞ்சிகை புகழ்

Dr. N. M. குமார் Prd. MBBS, CNHP ( Canada)

Health Card not covered மருத்துவ அட்டை செல்லுபடியாகாது



SP ELECTRONICS

SALES & SERVICES

- COMPUTER
  COMPUTER INSTALLATION HARDWARE
- APPLIANCES SERVICES
- PRINTING & COPY SERVICES
- ACCOUNTING & TAX SERVICES

S PATHMANATHAR
416 264 6400
2641 Eglinton Ave. E
Brimley & Eglinton

# Tim Hortons ரிம் ஹோற்றன்ஸ்

## அறியவில்லையானால் அறிந்துகொள்ளுங்கள் கனடாவில் சில தகவல்கள்

சிவ பஞ்சலிங்கம்
- ஆயுட்காப்புறுதி பிரதிநிதி -



**தகவல் தொடர் - 9**

**Tim Hortons – “Always Fresh”**

### “ரிம் ஹோற்றன்ஸ்” (Tim Hortons) கோப்பிக் கடையின் வரலாறு என்ன?

அதன் ஆரம்பமும் வளர்ச்சியும் எப்படி அசுர வேகத்தில் மாறிக்கொண்டு போகின்றது?

**(யூலை1,2007இல் பெறப்பட்ட தகவலின்படி, கனடா முழுவதும் மொத்தமாக 2733 கிளைகள் இந்நிறுவனத்தின் அதி உச்ச வியாபாரம் நடக்கும் கோப்பிக் கடைகளாக மிகவும் நிகரலாப நோக்கில் முன்னேறிக் கொண்டுள்ளன.)**

### இந்நிறுவனத்தில் பங்குகள் வாங்கி, விரும்பிய தொகை பணத்தினை முதலீடு செய்வது என்றால் எப்படிக் கையாள்வது?

**இந் நிறுவனத்தின் கோப்பிக்கடை ஒன்றின் கிளையினை எடுத்து நடாத்த விரும்பும் ஒருவர் இவ்வுரிமையினை எப்படிப் பெற்றுக்கொள்வது?**

**ஏதாவது பொது வைபவங்களுக்கு எப்படி இந்நிறுவனத்திலிருந்து நன்கொடை பெறுவது?**

‘ரிம் ஹோட்டன்ஸ்’ இந்த பெயரினைக் கேள்விப்படாத அல்லது இந்தப்பெயரினைக் கொண்ட கோப்பிக் கடைக்குச் செல்லாதவர் கனடாவில் அனேகமாக எவருமே இருக்கமாட்டார்கள். கனடா முழுவதும் வீதிக்கு வீதி இதே பெயரில் உள்ள கோப்பிக் கடையில், இந்த உடனுக்குடன் தயாரித்து வழங்கும் கோப்பிக்கு அடிமையானவர்கள் ஏராளம்! அதில் சந்தேகமே யில்லை

சரி! இந்நிறுவனத்தின் பெயருக்குரிய இதனைத் தமது பெயரில் ஆரம்பித்த ‘திரு.ரிம் ஹோற்றன்ஸ்’ என்பவர் யார்?

1930ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள ‘கோச்றேன்’(Cochrane) என்னும் சிறுநகரம் ஒன்றில் பிறந்த ஒரு மனிதன்தான் இந்த ‘ரிம் ஹோற்றன்ஸ்’.

ஹொக்கி விளையாட்டுத் துறையில் கனடாவில் தேசிய அளவில் புகழ்பெற்ற ஒரு ‘ஹீரோ’ 1949ம் ஆண்டு தொடக்கம் கனடாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பிரபல்யமான விளையாட்டுக் கழகங்களுக்காக விளையாடி புகழ்பெற்ற, உயரம், கம்பீரம் நிறைந்த மனிதன்.

தனது முழுநேர ஹொக்கி விளையாட்டுத் துறையும் அதில் கிடைக்கும் சம்பளமும் நீண்ட காலம் தொடர்ந்து கை கொடுக்க மாட்டாது என்ற தூர நோக்கில் (இன்றைய காலகட்டத்தில் முழுநேர விளையாட்டுத் துறையில் பிரகாசிக்கும் ஹீரோக்கள் உழைக்கும் சம்பளம் போல அன்றைய காலகட்டத்தில் இவரது சம்பளம் இருக்கவில்லை என இவரது வரலாற்று ஆங்கில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.) TDL (Tim Donut Limited) என்னும் ஒரு கம்பனியைப் பதிவுசெய்து, இக்கம்பனியின் கீழ் ‘ரிம் ஹோற்றன்ஸ்’என்னும் கோப்பிக் கடையினை 1964ஆம் ஆண்டு ஹமில்ரன் நகரில் ஆரம்பித்தார். அப்போது ஒரு கோப்பியின் விலை பத்து சதம்.

இதவே இவரதுதொழிலின் முதல் ஆரம்பம்!

ஹொக்கி விளையாட்டிலும் தமது கவனத்தினைச் செலுத்திக் கொண்டிருந்த திரு.ரிம் ஹோற்றன்ஸ் அவர்களுக்கு,தமது தொழில் துறையினைத் தம்முடன் சேர்ந்து வளர்த்து எடுப்பதற்கு ஒரு பங்காளி தேவை என விளம்பரப் படுத்தியதைத் தொடர்ந்து, $ 10,000 டொலர் முதலீட்டுடன், இந்நிறுவனத்தின் இன்னொரு கோப்பிக் கடையினை ஹமில்ரன் நகரின் இன்னொரு பகுதியில் எடுத்து நடாத்துவதற்காக இவருடன் சேர்ந்துகொண்டார் திரு.றொன் ஜோய்ஸ் (Ron Joyce) என்னும் ஹமில்ரன் நகரின் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்.

1967ம் ஆண்டு மேலும் இரு கடைகளைத் தமது பெயரில் ஆரம்பித்த இப்பங்காளி, இதே ஆண்டில் திரு.ரிம் ஹோற்றனுடன் சேர்ந்து ரிம் ஹோற்றன்ஸ் என்னும் இந்நிறுவனத்தின் சட்டபூர்வமான பங்காளியாகச் சேர்ந்து கொண்டார்.

இவரின் வருகையின் பின்பு இக் கோப்பிக் கடையின் முன்னேற்றம் என்பது கனடா முழுவதும் துரித கதியில் வளரத் தொடங்கியது.

சரி! இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குக் கை கொடுத்து,இறுதியில் முழுமையான உரிமையாளராக மாறிய திரு.றொன் ஜோய்ஸ் என்பவர் யார்?

நோவாஸ்கொஸியா மாகாணத்தில் 1930ம் ஆண்டு பிறந்து பலகாலம் கனடாவின் கடற்படையில் தொடர்பு சாதனங்கள் பிரிவில் பணிபுரிந்தவர்.

ஹொக்கி விளையாட்டுத் துறையில் ஒரு கால், வர்த்தகத் துறையில் ஒரு கால் என வைத்திருந்து ஓடிக்கொண்டிருந்த திரு.ரிம் ஹோற்றன்ஸ் அவர்களுக்கு இவரின் வருகையும் கைகொடுப்பும் நிறுவனத்தினை உன்னதமான வளர்ச்சிக்கு இழுத்துச் சென்றது.

சுமார் நாற்பது கோப்பிக்கடைகளை கனடாவின் பல இடங்களிலும் விஸ்தரித்து விறுநடைபோட்டு வந்த இவ்விருவருக்கும் இவர்களின் தொழில்துறை வரலாற்றில் 1974ஆம் ஆண்டு பெப்பிரவரி 21ஆம் திகதி நடந்தது மிக கொடுமையான அந்த சோக சம்பவம்!

அமெரிக்காவில் கனடாவின் எல்லையில் உள்ள ‘பவ்வலோ’ நகரில் ஒரு ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிவிட்டு ரொறன்ரோ நோக்கி ‘குயின் எலிசபெத்’ நெடுஞ்சாலை வழியாக தமது விலை உயர்ந்த ஸ்போர்ட்ஸ் காரில் இரவுநேரம் வந்துகொண்டிருந்த திரு.ரிம் ஹோற்றன்ஸ் அவர்கள், விபத்து ஒன்றில் சிக்கி, வாகனம் சுக்கு நூறாக நொருங்கியதுடன், வாகனத்துடன் சேர்ந்து அவரும் பலியானார். விபத்து புலன்விசாரணையில் அன்றுமாலை சற்று மது அருந்தியிருந்தார் என்பதும், தொடர்ந்து விளையாட்டில் ஏற்பட்ட கால் நோவுக்காக வலியினைக் குறைக்கும் மாத்திரைகள் எடுத்துவந்தார் எனவும் தெரியவந்தது.

இவ்விரண்டும் வாகன ஓட்டத்தில் ஒரு நிதானத்தினை இழக்கப் பண்ணியிருக்கலாம் என்பதும் மரண விசாரணையில் அறிவிக்கப் பட்டிருந்தது.

1974ஆம் ஆண்டு இவர் விபத்தில் மரணமானபோது இவருக்கு நான்கு பெண் குழந்தைகள். இவரது மனைவியின் பெயர் திருமதி லொறி ஹோற்றன்ஸ். கம்பீரமாக நின்று ஹொக்கி விளையாட்டுத்துறை ஹீரோவாக வலம் வந்து, தமது வர்த்தகம் மிகத் திறமையாக - அதிர்ஸ்டமும் பின்னால் இருந்து தள்ளிக் கொடுக்க - முன்னேற்றப் பாதையில் போய்க் கொண்டிருந்த இந்நிறுவனத்தில் இவரது திடீர் மரணத்தின் பின்பு இவரது விதவை மனைவியால் நான்கு குழந்தைகளுடன் அதனை கணவனின் இடத்தில் நின்று பங்காளியாக நிர்வகிக்க முடியாமல் போயிருந்தது. இதனால்




இவ்விதவை மனைவிக்கும் பங்காளியான திரு.றொன் றோய்ஸ்க்கும் இடையில் பல இழுபறிகள்!

இறுதியாக இருவரும் ஒரு முடிவுக்கு வந்தனர். 1975ஆம் ஆண்டு அதாவது திரு.ரிம் ஹோற்றன்ஸ் மரணமாகி ஒரு வருடத்தின் பின்பு, இவரது பங்குக்கு ஒரு விலையாக ஒரு மில்லியன் டொலர் பணம் மனைவிக்கு வழங்கப்பட்டு, பங்குதாரர் உரிமையில் இருந்து ரிம் ஹோற்றன்ஸ் குடும்பத்தினர் விடுவிக்கப்பட, திரு.றொன் ஜோய்ஸ் அவர்கள் ஏகபோக உரிமையாளர் ஆனார்.

ஒரு மில்லியன் பணத்துடன் 1975இல் விலகிக் கொண்ட திருமதி ரிம் ஹோற்றன்ஸ், கடந்த டிசம்பர் 2000 இல் மரணமாகிய போது, கையில் ஒரு பணமும் இல்லாது மரணமாகியிருந்தார் என பல ஆங்கில சஞ்சிகைகளில் கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டிருந்தது.

ஆனால், உரிமையில் இருந்து விலகிய திருமதி ரிம் ஹோற்றன்ஸ் அவர்கள், இவர் விலகிய பின்பு நிறுவனத்தின் அதிர்ஸ்டகரமான வளர்ச்சியில் பங்கு கேட்டு வழக்குத் தொடர்ந்திருந்தார் எனவும் ஆனால் அது அவருக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை எனவும் கனடாவின் ஆங்கில சஞ்சிகை ஒன்று தகவல் தெரிவித்திருந்தது.

இதே நேரம் திரு.ரிம் ஹோற்றன்ஸ் அவர்கள் விபத்தில் மரணமாவதற்கு சில நாட்

VIEW TECH WINDOWS INC.
•Industrail •Commercial • Residential

• Storm Doors
• French Doors
• Patio Doors
• Porch Enclosures
• Thermal Windows
• Vinyl Windows
• Aluminum Windows
• Glass & Screen
All work Guaranteed
Vinyl and Aluminum Replacement Windows
FREE ESTIMATE

6068 Netherhart Rd Unit # 5, Mississauga, ON
KARUNA 905•796•9292/ 416•892•7070

களுக்கு முன்னர்,தமக்கும் தமது மனைவிக்கும் இடையில் கசப்பு உணர்வுகள் இருப்பதாகவும், விரைவில் விவாகரத்துச் செய்யப் போவதாகத் தம்மிடம் தெரிவித்த இரகசியத்தினை பின்னைய காலங்களில் பங்காளி திரு.றொன் ஜோய்ஸ் பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருந்தார்.

துரித கதியில் பல பல கிளை நிறுவனங்களாக விஸ்தரிக்கப்பட்ட இந்த அதிர்ஸ்டகரமான வியாபாரத்தின் 300ஆவது கோப்பிக் கடை 1987ல் அல்பேர்ட்டா மாகாணத்தின் கல்கேரி நகரில் திறக்கப்பட்டது. 500ஆவது கோப்பிக் கடை 1991ல் கியூபெக் நகரில் திறக்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு இதன் வளர்ச்சியில் ஒரு மாற்றம் வந்தது. அமெரிக்காவில் இயங்கும் 'வென்டிஸ் இன்ரர் நாஷனல் கம்பனி' (Wendy's International Inc) என்னும் உணவக கம்பனியுடன் இணைக்கப்பட்டு, இவ் இரண்டும் சேர்ந்து அமெரிக்காவிலும் விஸ்தரிக்கப்பட்டது. (புதிதாக இரு நிறுவனமும் சேர்ந்து உருவாக்கும் இடங்களில் ரிம் ஹோற்றன்ஸ் நிறுவனத்தின் ஏகபோக உரிமையாளர் திரு.றொன் ஜோய்ஸ் அவர்கள், தமது வயது முதிர்ந்த நிலையில் ஓர் இளமைச் சிரிப்புடன் கையில் ரிம் ஹோற்றன்ஸ் கோப்பிக் கிண்ணத்துடனும் 'வெண்டி' நிறுவனத்தின் தலைவர் தமது கம்பனி பெயர் பதித்த கிண்ணத்துடனும் கூட்டாகத் தோற்றும் படங்கள் கடைகள் அமைந்த இடங்களின் சுவர்களில் அழகாகத் தோற்றமளிப்பதனை அவதானித்து இருக்கலாம்.)

**துரிதகதியில் வளரும் கூட்டு நிறுவனத்தில் தங்கள் பணத்தினை முதலிட விரும்பும் பொது மக்களையும் விரும்பினால் முதலீடு செய்ய அழைத்துள்ளது.**

கனடாவில் உள்ளவர்கள் "ரொறன்ரோ பங்குச் சந்தை" மூலமாகவும், அமெரிக்காவில் உள்ளவர்கள் "நியூயோர்க் பங்குச் சந்தை" மூலமாகவும் இதில் முதலீடு செய்யும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு பங்கின் விலை இக்கட்டுரையைத் தயார்செய்யும்போது 34.04 டொலர்களாகும். இதுவரை 232,246 பங்குகள் விற்பனை செய்யப்பட்டு, இப் பொதுமக்களின் பணமும் இந்நிறுவனத்தின் முதலீட்டில் சுழன்று அடித்து வேலை செய்கிறது.

இதில் முதலீடு செய்ய விரும்புபவர்கள் தங்கள் வங்கிகளில் முதலீட்டு கணக்குத் திறந்து அதில் பணத்தினை வைப்புச்செய்து வங்கிகள் மூலம் இந்நிறுவனத்தில் முதலீடு செய்யலாம்.

10,000 டொலர் முதலீடு செய்தால் 10,000 ÷ 34.04 = 298.88 பங்குகள் என வாங்கிக் கொள்ளலாம். பங்கு லாபம் கிடைக்கும். விரும்பிய நேரத்தில் பங்குகளை விற்றுவிட்டு, போட்ட பணத்தினை மீளப் பெற்றுக் கொண்டு இதிலிருந்து விலகியும் கொள்ளலாம்.

இந்நிறுவனத்தின் தலைமை அலுலகம் ஒன்ராறியோ மாகாணத்தில் பின்வரும் விலாசத்தில் உள்ளது.

**Tim Hortons – Head office**
**874, Sin clair Road,**
**Oakville**
**Ontario**
**L6G 2Y1**
**Tel: 905 845 6511**
**Fax: 905 845 0265**

கனடாவின் ஏனைய எட்டு இடங்களில் இதன் பிராந்திய தலைமை அலுவலகங்கள் உள்ளன. 2006ஆம் ஆண்டு பெறப்பட்ட புள்ளி விவரங்களின் படி, மொத்தம் 70,000க்கு மேற்பட்ட ஊழியர்கள் இப்பெயரின் கீழ் உள்ள நிறுவனங்கள், கோப்பிக் கடைகளில் பணிபுரிகின்றனர்.

இந்நிறுவனத்தின் பெயரில் ஒரு கிளை நிறுவனமாக கோப்பிக்கடை ஒன்றினை எடுத்து நடாத்த விரும்புபவருக்கு உரிய செலவு எவ்வளவு எனத் தெரியுமா?

$420,000 தெடங்கி $450,000 டொலர் வரை விலைவரலாம். இதுதவிர இவ் விலைக்கு மேலதிக வரியும்உன்டு. இது தவிர செயல்படும் முதலீடாக இன்னொரு (Working Capital) $ 50,000 டொலர் மேலதிகமாகத் தேவைப்படும். பத்து வருடங்களுக்கு ஒரு கோப்பிக் கடையின் கிளையினை நடாத்தும் உரிமை வழங்கப்படும். இதில் $135,000 டொலர் சொந்தப் பணமாகக் கொண்டு வருதல் வேண்டும். மிகுதி வங்கிகளில் கடனாகப் பெறமுடியும். இச்செலவில் கட்டிடத்தின் வாடகைச் செலவு அடங்கமாட்டாது. எட்டுக் கிழமை பயிற்சி, ஆரம்ப நிலையில் இரு கிழமைகள் நேரடி உதவிகள் யாவும் இச் செலவினுள் அடங்கும்.

அதாவது, சுதந்திரமாக இக்கடையினை எடுத்து நடாத்த விரும்புபவர்களுக்கு உரிய ஆரம்ப உதவிகள், வழிகாட்டல்கள் யாவும் இந்நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மொத்த விற்பனையில் மூன்று சதவீதம் நிறுவனத்திற்கு கிழமைக்குக் கிழமை வழங்க வேண்டும். விளம்பரத்துக்கென மொத்த விற்பனையில் நான்கு சதவீதம் வழங்க வேண்டும்.

கடையில் உருவாக்கிக் கொடுக்கப்பட்ட உபகரணங்களுக்கான செலவாக குறைந்த மாத வாடகைக் கட்டணம் அல்லது 10 சதவீதம் விற்பனையில் மாதாமாதம் செலுத்த வேண்டும்.

எல்லாச் செலவும் கழித்து இந்நிறுவனத்தின் கோப்பிக் கடை உரிமையாளர்களின் கூட்டான மொத்த நிகர லாபம் 67.2 மில்லியன் டொலர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஏதாவது பொது நிகழ்ச்சிகளுக்கு நன்கொடை பெற விரும்புபவர்கள் - donation@timhortons.com என்னும் மின்னஞ்சலுடன், அந்நிகழ்ச்சி நடப்பதற்கு பத்துக் கிழமைகளுக்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(தின்பண்டங்கள்,கோப்பிக் கூப்பன்கள் ஆகியன நன்கொடையாக வழங்கத் தயாராகவுள்ளனர்.)

ஏதாவது சமூக பணி நிகழ்வுகளுக்கு இந்நிறுவனத்தின் ஸ்பொன்சர் தேவையாக இருந்தால் 12 கிழமைகளுக்கு முன்னர் sponsorships@timhortons.com என்னும் மின்னஞ்சலுக்கு நிகழ்வு, நடாத்தப்போகும் நிறுவனம் பற்றிய தகவல்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

(கடந்த ஜுன் 2005இல் ஹமில்ரன் நகரில் உள்ள மக் மாஸ்ரர் பல்கலைக்கழகத்திற்கு விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு பத்து மில்லியன் டொலர் வழங்கப்பட்டது இங்கு குறிப்பிடவேண்டிய செய்தியாகும்.

ரிம் ஹோற்றன்ஸ் கடைகளில் பணிபுரியும் ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் என 1000 டொலர் வழங்குவதும் வழமையாகும். இது தொடர்பான தீர்மானத்தினை அந்தந்தக் கிளையின் உரிமையாளர் எடுத்துக் கொள்வார். ஒரு குறிப்பிட்ட வரையறைவரையே இவ் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

■ ■ ■

காப்புறுதி சம்பந்தமான
தேவைகளுக்கும்
ஆலோசனைகளுக்கும்
சிவ. பஞ்சலிங்கம்
B. Com,
Licensed Insurance Broker
416.321.0999

Computek College
BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY



Good news !
for Real Estate Agents
Computek College is approved as a continuing education provider
by the
REAL ESTATE COUNCIL OF ONTARIO ( RECO)
for the following Courses
Windows XP
Ms Excel
Ms Word
Ms Access
Ms Power Point
Study at
Computek College
&
Earn your credits
for details :
416-321-9911
Kennedy / Sheppard
(North-East Corner)
Tel: 416-321-9911
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8
Kennedy / Eglinton
(N/W Corner, Above Library)
Tel : 416-285-9941
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON M1K 2P5

# இந்த மாதம் ரொறன்ரோவில் நடைபெற உள்ள நிகழ்வுகளில் சில...



**September 06, 2007**
- திருச்செந்தூர் முருகன் ஆலய கொடியேற்றம்

**September 07, 2007**
- 7ஆவது ஆண்டில் கால்பதிக்கும் TVI இன் வெளியரங்கில் கலைநிகழ்வு

**September 08, 2007**
- நக்கீரனின் 'சோதிடப் புரட்டு' நூல் வெளியீட்டு விழா

**September 09, 2007**
- குரும்பசிட்டி நலன்புரிச் சங்கத்தினரின் ஒன்றுகூடல்

**September 15, 2007**
- Thamil Heritage school of Waterloo Region & Guelph வழங்கும் நகைச்சுவை மாலை 2007

**September 15, 2007**
- விஷ்ணு தேர்த் திருவிழா - ஸ்ரீ சிவா வி'ணு கோவில்

**September 15, 2007**
- மியூசிக் அன்ட் கொமடி நைற் - "சும்மா அதிருதில்ல 2007"

**September 16, 2007**
- Contest for Music Creation - "அக்கினிக் குஞ்சுகள்"
- மியூசிக் அன்ட் கொமடி நைற் - "சும்மா அதிருதில்ல 2007"

**September 22, 2007**
- ரொறன்ரோ மத்தி பீல் பிரதேச கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'தியாக தீபம்'
- தேவதைகளின் அரசி 2007-08-29

**September 23, 2007**
- ஸ்காபரோ தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் 'தியாகதீபம்'

**September 29, 2007**
- ஸ்காபரோ பெரியசிவன் கோவில் பெருமாள் தேர்த் திருவிழா
- கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் வழங்கும் அகில் எழுதிய 'திசை மாறிய தென்றல்' நூல் வெளியீட்டு விழா

**October 06, 2007**
- பொன் மாலைப் பொழுது – பராசக்தி முதல் படையப்பா வரை

**October 07, 2007**
- அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் அச்சாரம் 2007
- மாதகல் நலன்புரிச் சங்கத்தினரின் தமிழ் அறிவுப் போட்டி 2007
- கே.எஸ்.பாலச்சந்திரனின் 'அண்ணை றைற்' இறுவட்டு (C.D) வெளியீட்டு விழா

**October 08, 2007**
- கனடா காரை கலாச்சார மன்றத்தினரின் தமிழ் மொழித் திறன், பண்ணிசைப் போட்டிகள் 2007
- Thanksgiving Day

**இதைவிடவும் அதிக நிகழ்வுகள் ரொறன்ரோவில் நடை பெறுகின்றன. மேலே உள்ளவை inayam.net இல் பதியப்பட்ட நிகழ்வுகளில் சில. உங்கள் நிகழ்வுகளையும் inayam.netஇல் பதிவு செய்வதன் மூலம் இன்னொரு நிகழ்வு அதே நாளில் இடம்பெறுவதை தவிருங்கள்.**


inayam

**www.inayam.net**

info@inayam.net

**416.400.6.406**

# வீட்டில் வளர்க்கும் மரங்கள்



பாலா
இராஜேந்திரன்

இலங்கையில் பெரிய வளவுள்ள வீட்டில் வசித்திருந்தால் பல பிரயோசனமான மரங்களை நட்டு, பயன் பெற்றதை உங்களில் பலர் அறிவீர்கள். பொதுவாக உங்கள் வீட்டைச் சுற்றி, தென்னை (குள்ளச்சாதி) மா, வாழை, பலா, கொய்யா, எலுமிச்சை, முருங்கை, அகத்தி, தூதுவளை, சுண்டங்காய், மணத் தக்காளி, மற்றும் காய்கறிச் செடிகளையும், பூச்செடிகளான றோசா,செம்பருத்தி, மல்லிகை, துளசி, செவ்வந்தி (சாமந்தி), அலரி, சூரியகாந்தி, நந்தியாவட்டை (நித்திய கல்யாணி) மற்றும் கை மருத்துவத்துக்குத் தேவையான கற்பூரவள்ளி, புதினா, கொத்தமல்லிக் கீரை, வெந்தயக் கீரை, மருதாணி போன்றவற்றையும் வளர்க்கிறார்கள்.

ஆனால், கனடாவில் மேற்கூறிய மரங்களை கோடையில் மட்டும் வளர்க்கலாம். பனிக்காலத்தில் அவற்றை கண்ணாடி அறைகளிலும் அல்லது வீட்டிலுள்ள ஜன்னல்கள் அருகிலும் வளர்க்கலாம். ஜன்னல் அருகில் வளர்ப்பதால் அவற்றுக்கு சூரிய வெளிச்சம் கிடைக்கிறது. சூரிய வெளிச்சம் வீட்டிற்குள் வராவிட்டால், அதிக நேரம் எரிகின்ற மின் விளக்குகளின் கீழ் இவற்றை வளர்க்கலாம். வீட்டினுள் வளர்க்கும் மரங்களுக்கு தினமும் நீர் ஊற்றவேண்டிய அவசியம்இல்லை. ஒன்றவிட்டு ஒரு நாளோ அல்லது ஒரு வாரத்தில் இரண்டு நாட்களோ தண்ணீர் ஊற்றினால் போதுமானது. கோடை காலத்தில் வீட்டின் வெளியேயுள்ள பூஞ்செடிகளுக்கோ காய்கறி செடிகளுக்கோ மாலையில் நீர் ஊற்றுவது மிகவும் சிறந்தது.



ஏனென்றால் அடுத்தநாள் நண்பகல் வரை மரத்தின் அடியில் நீர் இருக்கும். காலையில் ஊற்றும் நீர் பகல் ஒரு மணியளவில் காய்ந்து செடிகள் வாடிக் காட்சியளிக்கும். உண்மையில் கீழைத் தேசங்களில் தோட்டங்களுக்கு மாலையில் மட்டுமே நீர் பாய்ச்ச வேண்டுமென்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

வீட்டினுள் சாடிகளில் வளர்க்கும் செடிகளுக்கு நீர் ஊற்றும்போது, அச்சாடிகளின் அடியில் ஒரு தட்டு அல்லது கோப்பை போன்ற பாத்திரங்களை வைத்தால் (அதே வகை பூச்சாடிகளுடன் இவையும் விற்கப்படுகின்றன) பூச்சாடிக்கு ஊற்றும் நீர் வடிந்து, கீழுள்ள தட்டில் தேங்கி நிற்கும். கீழேயுள்ள நீரை வெளியே வீசிவிட்டு மீண்டும் பூச்சாடியின்கீழ் வைக்கலாம். இப்படிச் செய்வதனால் உங்கள் வீட்டுத் தரை பழுதடையாது.

மேலும், வீட்டினுள் வளர்ப்பதற்குத் பூச்செடிகளையும் கற்பூரவள்ளி, துளசி கொத்தமல்லிக் கீரை, புதினா போன்ற கைவைத்தியத்திற்குத் தேவையான செடிகளையும் வளர்க்கலாம். போதிய வெளிச்சம் அளவான நீர், இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு ஒருமுறை பசளை (நீரில்கரைத்து) ஊற்றி, சாடியில் உள்ள மண்ணை மாதம் ஒருமுறை கிளறிவிட்டால் செடி நன்றாக வளர்ந்து, பூத்துக் குலுங்கும்.

பெரிய குரோட்டன், றோசா, செம்பருத்தி போன்றவற்றை பெரிய சாடிகளில் வளர்க்க வேண்டும். இவற்றின் வேர்களை வருடம் ஒருமுறை கத்தரிக்க வேண்டும். அவசியமாகச் சாடியில் உள்ள செடிகளை வேருடன் பிரட்டி,அவற்றின் ஆணிவேர்,சல்லி வேரைக் கத்தரித்தபின்னர் மீண்டும் சாடியில் நட்டு, புது மண் போட்டு, சாடியை நிரப்பி வழக்கம்போல பராமரித்துவந்தால் செடிகள் நன்றாக வளர்ந்து பூத்துக் குலுங்கும்.

## பொன்சாய் (Bonsai)

இது யப்பானியக்கலை.இதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஒரு பெரிய ஆல மரத்தையோ மாமரத்தையோ அல்லது ஸ்தலவிருட்சங்களான அரசு,வேம்பு போன்றவற்றை நீங்கள் வீட்டிலோ அல்லது கோவிலிலோ சாடிகளில் வளர்க்கலாம். சாடிகள் எந்த அளவிலும் இருக்கலாம். சாடிக்குத் தக்கபடி மரத்தைப் பெரிதாகவோ சிறிதாகவோ நாம் வளர்க்கலாம். உதாரணமாக இரண்டடி உயரம் ஒன்றரை அடி விட்டமுள்ள ஒரு சாடியை எடுத்து, அதில் ஒரு மரத்தை நட்டால் அந்த மரம் குறைந்தது 3 அடி உயரத்துக்கு மூன்றடி விட்டத்துக்குச் சடைக்கவிடலாம்.சிறு மரமாக 1அடி உயரம் வரை வளர விட விரும்பினால் அப்படியே செய்யலாம். ஒரு மாங்கொட்டையை ஒரு சாடியில் விதைத்து அதற்கு நீரூற்றி வாருங்கள். அது வளர்ந்து வரும்போது, அதன் நுனிக் கிளை அல்லது குருத்தைக் கிள்ளிவிடுங்கள். கிள்ளிய இடத்தில் கிளைகள் விட்டு வளரும். ஒவ்வொரு கிளையும் 3 அங்குலம் வளர்ந்ததும் கிள்ளிவிடுங்கள். இப்போது கிள்ளிய இடத்தில் பல கிளைகள் தோன்றும். இப்படி அந்த மரம் குள்ளமாக ஆனால் அநேக கிளைகளுடன் வளரும். நாளடைவில் வேர்கள் வளர்ந்து சாடியை நிரப்பிவிடும். எனவே, ஆறு மாதங்களுக்கு ஒருதடவை சாடியிலுள்ள மரத்தை வெளியே எடுத்து, அதன் ஆணிவேரையும் சல்லி வேர்களையும் கத்தரித்து, மீண்டும் சாடியில் நட்டு நிறைய மணல்போட்டு நீரூற்றி வர அந்த மரம் வளரும். அப்படி மூன்று அல்லது நான்கு வருடங்களில் மாமரம் காய்க்க ஆரம்பித்துவிடும். அதன் உயரம் இரண்டு அடிதான் இருக்கும். நீங்களும் வீட்டில் பொன்சாய் மரங்கள் வளர்க்கலாம்!

■ ■ ■



# கருணையை வளர்ப்போம்

இன்று மனிதன் முகம் கொடுக்கவேண்டிய பல பிரச்சனைகளில் சில இயற்கையால் ஏற்படுவது. இவற்றைத் தவிர்க்க முடியாது. எனவே முகம் கொடுக்கத்தான் வேண்டும். எஞ்சியவை மனிதனால் ஏற்பட்டவை இவற்றைத் தவிர்க்கலாம், தவிர்க்கவேண்டும். இப்படியான அனர்த்தங்கள் கோட்பாடுகளின் முரண்பாடால் ஏற்படுவது பல. இவை அரசியல் கோட்பாடுகள் மதக்கோட்பாடுகள் மோதுவதால் ஏற்படுவது. தனது கோட்பாடுதான் சிறந்தது என்று மற்றையவருடன் சண்டை பிடிக்கையில் இருவருமே மனித குலத்தின் நன்மைக்காகவே என்பதை மந்துவிடுகிறார்கள். நாம் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டியவிடயம் அனைத்து மதங்களும்,தத்துவங்களும்,அரசியல் கோட்பாடுகளும் எல்லாமே மனிதகுலத்தின் நன்மைக்காகவே ஏற்பட்டு உள்ளன என்பதே. இந்த அடிப்படைக்குறிக்கோளை மறப்பதனால்தான் எல்லாவகையான போராட்டங்களும் ஏற்படுகின்றன. கோட்பாடு, தத்துவம், நம்பிக்கை ஆகியவையிலும் அன்பு, கருணையாகியவற்றின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டால் முரண்பாடுகள் பெரிதளவு குறைந்துவிடும்.

இன்று மனிதகுலத்தின் அழிவிற்கு முக்கிய காரணியாக இருக்கக்கூடியது உலகலாவிய அனுவாயுத யுத்தம்தான். இது விளைவிக்கக்கூடிய அழிவு பற்றி அதிகம் கூறவேண்டியதில்லை. இப்படி ஒரு யுத்தம் ஏற்படின் மனிதகுலம் அழிந்துவிடும். எனவே விஞ்ஞானிகள் புதுப்புது ஆயுதங்களைக் கண்டு பிடித்துவருகிறார்கள். இவர்களை அந்தந்த நாடுகளின் தலைவர்கள் ஊக்குவித்து வருகிறார்கள். இப்போது உள்ள ஆயுதங்களுடன் ஒரு யுத்தம் ஏற்பட்டால் எல்லாரும் அழியவேண்டியதே இப்படி இருக்கும் நிலையில் நவீன கண்டுபிடித்து வருகிறார்கள். இவர்களை அந்தந்த நாடுகளின் தலைவர்கள் ஊக்குவித்துவருகிறார்கள். இப்போது உள்ள ஆயுதங்களுடன் ஒரு யுத்தம் ஏற்பட்டால் எல்லாரும் அழியவேண்டியதே. இப்படி இருக்கும் நிலையில் நவீன கண்டுபிடிப்புக்கு எமக்கு முன் எதிரி இறக்கவேண்டும் என்ற நினைப்பே காரணமாகும். இந்நிலையில் போருக்குக் காரணமானதைத் தவிர்ப்பது நல்லமல்லவா? ஆனால் இத்தகைய போரைத்தவிர்ப்பதுக்கு அதற்கான காரணத்தை அறியாதிருப்பதே காரணமாகும்.

> **அன்பும்**
> **கருணையுமான**
> **வாழ்வு**
> **மன அழுத்தத்தைக்**
> **குறைத்து,**
> **ஆரோக்கியத்தை**
> **வளர்த்து,**
> **தனிமையை போக்கி**
> **இனிமையான**
> **வாழ்க்கையைத்தரும்.**

உயிரினங்கள் அனைத்திற்குமே இயல்பான ஒரு ஆதங்கம் அமைதி, வசதி, பாதுகாப்பு என்பவையே. இது மனிதனுக்கும் பொருந்தும் மிருகத்திற்கும் பொருந்தும். சிறு மண்புழுகூட வெய்யிலை கண்டவுடன் நிழலை தேடி ஓடும். ஒவ்வொரு மனிதனும் வாழ ஆசைப்படுவதும் மரணத்தை தவிர்க்க முற்படுவதும் போல், எல்லா உயிரினமும்வாழ ஆசைப்படுவது இயல்பு, ஆனால் அவற்றின் வல்லமைதான் வேறுபடுகிறது.

பொதுவாகக் கூறுமிடத்து இருவகையான மகிழ்ச்சிகள் உண்டு. ஒன்று மனதில் ஏற்படுவது, மற்றது உடலில் ஏற்படுவது. மனதின் மகிழ்ச்சிதான் அடிப்படையாகையால் அதனைப்பற்றிக் கவனிப்போம். மகிழ்ச்சி என்பது உள்ளத்து அமைதி, பொருளாதார நிறைவு, சுற்றாடல் அமைதி ஆகியவற்றில் தங்கியிருக்கும். இவற்றை அடைவதற்கு உலகத்தின் அமைதிக்கு பொறுப்பெடுப்பதுடன் மற்றவர்கள் துன்பத்திலும் அக்கறைகொள்ள வேண்டும். இத்தகைய அக்கறை மதம், இனம், தேசியம், ஆண், பெண் என்ற வரையறையை கடந்திருப்பதவசியம்.

இந்த உலக அமைதியின் அடிப்படைக் குறிக்கோளின் அத்திவாரம் சகல உயிர்களுடைய பொதுவான எதிர்பார்ப்பான மகிழ்ச்சியும் அமைதியுமாகும். இந்த அடிப்படை உண்மையை மதிக்காவிட்டால் எமக்கு மீண்டும் மீண்டும் துன்பம்தான் எஞ்சியிருக்கும்.

## குமார் புனிதவேல் பக்கம்

எமது சுயநலத்திற்காக மனிதர் மற்றவர்களை பாவிக்கமுற்படும்வரை பெறப்படும் நன்மைகள் தற்காலிகமானவையாய்த் தானிருக்கும். அதேவளை எமது சொந்தவாழ்வில் நிரந்தரமான மகிழ்ச்சியும், அமைதியும் ஏற்படாமல் போய்விடும்.

மனிதன் தன் மகிழ்ச்சிக்காக பல வழிகளைக் கையாண்டுவந்துள்ளார்கள். அவற்றில் பல மூர்க்கத்தனமும், வன்முறையுமாயுள்ளதை அவதானிக்கக்கூடியதாயுள்ளது. சுயநலத்துக்காக மனிதர்கள் பல கொடூரங்களைத் தம் சக மனிதரிடமும், உயிர்களிடம் செலுத்திவந்துள்ளார்கள். குறுகிய நோக்குடைய இத்தகைய செயல்களால் நன்மை இல்லாமலும், வெறும் துன்பத்தைத்தான் அறுவடை செய்துள்ளார்கள். அரிதின் அரியது மானிடப்பிறப்பு என்று ஔவைப் பாட்டி புகட்டினார். இந்த அரிய வாழ்க்கையை பயனுடையதாக்குவது அவசியமல்லவா? நாம் அனைவரும் ஒரு முடிவை எடுக்கும்வேளை அனைவரும் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் மகிழ்ச்சியே என்பதை மனதில் வைத்து பிறர்க்கு வேதனைதரும் செயலைத் தவிர்ப்பதவசியம்.

மேற்படியான முடிவிற்கு முதல் முக்கிய தேவை கருணை. எந்த ஒரு பிரச்சனையை அணுகும்வேளை கருணையின் அடிப்படையில் முடிவு எடுப்பதவசியம். இன்று உலகம் மிகச்சுருங்கி வந்துள்ளது. காரணம் உலகச்


FOR YOUR REAL ESTATE AND MORTGATE NEEDS

Buying or Selling Residential, Commercial, Land and Investment Properties

Meet a Realty Expert

18 YEARS BANKING EXPERIENCE

- No Income / No Credit / New Immigrants
- Renewals / Refinancing / Switching
- Self Employed
- Bank Turn Down / Previously Bankrupt
- Amortization up to 40 years
- Fast Approval



One Stop Solution

Mobile Mortgage Service at your Door Step with Best Rates!

Pleasant Service with Lowest Commission Starting at 1%

RE/MAX

Nilani Ravindran

Sales Representative

Cell: 647.836.6502

Associates Realty Inc., Brokerage

Independently owned and operated

900 Middlefield Road #4, Toronto, ON M1V 4X1

Tel: 416.293.1100, 416.293.6700



digi

Not intended to solicit properties currently listed for sale

சந்தையின் வளர்ச்சி காரணமாக ஒருவரில் ஒருவர்,கூடிய அளவு தங்கியுள்ளோம். பண்டைய காலத்தில் பிரச்சனைகள் குடும்பத்தளவே தாக்கம் செய்தன,அதனால் அதற்கு குடும்ப அளவிலே தீர்ப்புக்காண முடிந்தது, ஆனால் இன்று நிலமைவேறு. இன்று ஒரு நாட்டின் பிரச்சனைக்கு தீர்வுகாண அந்த நாட்டின் அளவிலே முடியாது. மற்றைய நாடுகளின்தேவை அவர்களுடைய விருப்பு, அவர்கள் அனுசரனை என பல ஏதுக்கள் உள்ளன. எனவே உலகலாவிய பிரச்சனைகளுக்கு உலகலாவிய நிலையில் தீர்வு காண்பதுதான் சிறப்பு. இதுதான் நிரந்தர அமைதியையும் மகிழ்ச்சியையும் தரும்.

எங்கள் மகிழ்ச்சியை தேடும் வேளையில் மற்றவர்கள் மகிழ்ச்சியை மனதில் கொள்வது புத்திலிசாரித்தனமான சுயநலம் என்று கூறலாம் அல்லது பரஸ்பரநலம் என்று குறிப்பிடலாம். பலர் எண்ணுவதுண்டு கருணை உணர்வு மற்றவர்களுக்கு நன்மை தரும் என்று,ஆனால் இது தவறு. உண்மையில் இன்றைய மருத்துவம் அமைதியான மனம் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.இதனால் நீங்கள்தான் கூடிய பயனடைவீர்கள். அன்பும் கருணையுமான வாழ்வு மன அழுத்தத்தைக்குறைத்து, ஆரோக்கியத்தை வளர்த்து, தனிமையை போக்கி இனிமையான வாழ்க்கையைத்தரும். மருத்துவ ஆய்வுப்படி நான், எனது, எனக்கு எனும் சொற்களை அதிகம் பாவிப்பவர்கள் இருதய நோய்க்கு ஆளாகிறார்கள் எனக் கணித்துள்ளார்கள். சுயநலம் வரும் வேளை உங்கள் நோக்கம் செயல் யாவையும் உங்களுக்குள் அடங்கி விடுவதால் சிறு பிரச்சனையாய் விஸ்வரூபமாக தெரியும்.

மனிதர் மற்றவர் வேதனையில் அக்கறை இல்லாதிருக்கும் வரை உடன்பாடுகள் தவிர்க்கப்பட்டு போட்டிகள் வளர்க்கப்படுகின்றன.மக்கள் அவாவினாலும், பொறாண்மையாலும் உந்தப்படும் வேளையில் அமைதியையும், ஒற்றுமையையும் இழக்கிறார்கள். கருணை என்பது ஒருவருக்கு செய்யும் உதவியால் ஒருவித பிரதிபலனும் கிடையாது எனும் வேளை அதை செய்வதே. இதையே ஔவைப்பாட்டியும்.

"நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தானுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்."

எனும் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார். நாமும் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கையை விரும்பும்பட்சத்தில்

■ ■ ■


முதலீடு இல்லாமல்
(0% Down)
எப்படி வீடு வாங்கலாம்?

- வீடு வாங்குவதற்கு முதலிட முற்பணம் இல்லை என்று கவலைப்படுகிறீர்களா?
- வங்கிகள் இப்போது வீடு வாங்கும்போது வீட்டின் விலையின் முழுத்தொகையையும் கடனாகத் தரத் தயாராய் உள்ளன.
- நீங்கள் முதன் முறையாக வீடு வாங்குபவராக இருக்கலாம் அல்லது ஏற்கனவே ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாகக் கூட இருந்திருக்கலாம்.
- இப்படியான ஒரு கடனைப் பெற உங்களுக்கு என்னமாதிரியான தகுதிகள் தேவை என்பதை அறிந்து கொள்ள வேண்டுமா?
- இத்துறையில் பல ஆண்டு கால அனுபவமுள்ளவர்களினால் இது பற்றிய தகவல்கள் கொண்ட ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

416-284-9999
Ext 21 (தமிழ்)
Ext 34 (English)

வாடகை வீட்டை
சொந்தவீடாக
மாற்றுவது எப்படி?

- வந்த நாளிலிருந்தே வாடகைக்கே பல ஆயிரம் டொலர்கள் கொடுத்து வாழ்ந்து விட்டீர்களா?
- நீங்கள் கட்டும் வாடகைப்பணத்திலே தான் வீட்டுச் சொந்தக்காரன் தனது ஆழசவபயபந ஐக் கட்டி அந்த வீட்டை தனக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறான் என்பதை அறிவீர்களா?
- அந்த வாடகைப் பணத்திலேயே ஏன் நீங்கள் ஒரு சொந்த வீட்டை அமைக்கக்கூடாது?
- நீங்களும் எப்படி ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரனாக ஆகலாம் என்பதற்கான பல வழிமுறைகளை விளக்கி இத்துறையில் பல ஆண்டுகால அனுபவமுள்ளவர்களினால் தயாரிக்கப்பட்ட ஒரு விசேட அறிக்கை எம்மிடம் உள்ளது.
- இந்த அறிக்கையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்.

416-284-9999
Ext 20 (தமிழ்)
Ext 33 (English)


# ஈட்டுக் கடன் காப்...

69ம் பக்கத் தொடர்ச்சி...

ஆரோக்கியம் பாதிக்கப்பட்டிருந்தால், அல் லது நோய்கள் ஏற்பட்டு விட்டால் காப்புறுதி எடுக்க முடியாத நிலை ஏற்படும்.

வங்கியில் கொடுக்கப்படும் காப்புறுதியின் மாதாந்தக் கட்டுப்பணம் ஆரம்பத்தில் எவ்வளவுகடன்தொகை உள்ளதோ அதன் அடிப் படையில் கணிக்கப்பட்டு மாதாந்தம் அதே அளவு தொகை செலுத்த வேண்டும். ஆனால் கடனின் தொகை நீங்கள் பணம் செலுத்த ஒவ்வொரு மாதமும் குறைந்து கொண்டு செல்லும். ஆனால் மாதாந்த கட்டுப்பணம் குறைக்கப்படுவதில்லை.

வங்கி மூலம் கொடுக்கப்படும் காப்புறுதி உங்கள் வீட்டுக்கடன் முடிந்தவுடன் இரத்து செய்யப்படும். அல்லது உங்கள் வீட்டை விற்பனை செய்ததும் இரத்து செய்யப் படும். அதனால் இதற்காக மாதாந்தம் கட்டிய பணம் விரயமாகும். காப்புறுதி நிறுவனத்தில் பெறப்படும் காப்புறுதியை ஆயுட் கால காப்புறுதியாக மாற்றிக் கொள்ள முடியும். வீடு இருந்தாலும் இல்லாவிட்டாலும் காப்புறுதித் திட்டம் ஆயுட் காப்புறுதியாக செய்யப்படும்.

வங்கியில் கிடைக்கும் காப்புறுதித் திட்டம் இலகுவானதாக இருந்தாலும் காப்புறுதி நிறுவனத்தில் கிடைக்கும் திட்டம் பல வழிகளிலும் சிறந்த திட்டம். காரணம் பலன் பெறுபவராக நீங்கள் விரும்பிய பெயரை நியமிக்கலாம். அதாவது அவர்கள் விரும்பியபடி அந்தப் பணத்தை செலவு செய்யலாம். வீட்டுக்கடனை கட்டலாம். அல்லது வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தலாம். வங்கி மூலம் பெறப்படும் காப்புறுதி வங்கியில் உள்ள கடன் தொகையை மட்டுமே செலுத்தும்.

■ ■ ■




## For All Your Real Estate Needs..

### Lucky Draw for New Car Will be on September,2007

**Buy or Sell through us before September16, 2007 and win a New Car****





- 2 Bedroom Condominium
- Great Location
- Well Maintained Building
- Steps to TTC & 1 Bus To Subway
- Lots Of Facilities In The Building...






**Sasi Chelvaratnam**
Sales Representative
**416.858.4828**




- Almost New Town House
- Bright And Sunny
- Unique Lay Out
- Quiet Street
- Close To All Amenities....

Call Me To Find Out About The Special Discount And Special Deposit That Is Available For Our Buyers.

Luxurious Condominium In Central Scarborough By Award Winning Builder "TRIDEL".




- Immaculate Detached Home
- Only One Year Old
- 4 Spacious Bedrooms
- 9'Ceiling On Main Floor
- Primium Lot...

## HomeLife GTA Realty Inc., Brokerage*

1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3

**Tel: 416.321.6969 Fax: 416.321.6963**

This is not intend to solicit properties currently listed for sale ** some conditions may apply *Each office independently owned and operated

# மாதாந்த காப்புறுதிக் கட்டணம்

# $11.97 மட்டுமே FOR $100,000

30 வயதுடைய ஆணுக்கு
Rate based on non smoker
10 year term insurance

30 வயதுடைய பெண்ணுக்கு
$9.90
Rate based on non smoker
10 year term insurance

சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி • வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி • கொடிய நோய்களுக்கான காப்புறுதி • குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்

# உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஓர் பாதுகாப்பு...

**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட்காப்புறுதி**
(Universal Life Insurance)

உங்கள் ஆயுட்காலம் வரை இந்தக் காப்புறுதி நீடிக்கும். இதற்கான கட்டுப்பணம் எந்தக்காலத்திலும் அதிகரிக்காது. நீங்கள் விரும்பியபடி 10,15 அல்லது 20 வருடங்களுக்கு மட்டுமே பணம் செலுத்தவேண்டும். அதன்பின்பு விரும்பினால் நீங்கள் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்; அல்லது 75 வீதத்தை கடனாகப் பெறமுடியும்.

**வைத்தியப் பரிசோதனை இல்லாத காப்புறுதி**
(Non Medical Life Insurance)

இத்திட்டத்தின் மூலம் எண்பது வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் வைத்திய பரிசோதனை இன்றி ஆயுட்காப்புறுதியை செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.

**கொடிய நோய்களுக்கான காப்புறுதி**
(Critical Illness Insurance)

Cancer, Stroke, Heart Attack, Bypass Surgery, Kidney Failure, Coma, Paralysis, Blindness, Deafness, Alzheimer, Parkinson போன்ற 23 வகையான கொடிய நோய்களில் ஏதாவது ஒன்று உங்களுக்கு ஏற்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதியாகப் பெற்றுக்கொள்ளலாம். நோய் ஏதும் ஏற்படாவிட்டால் 65வது வயதில் கட்டிய பணம் முழுவதையும் திரும்பப் பெறலாம்.

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம்**
(RESP)

கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.

கனடாவின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து உங்கள் வசதிக்கேற்ப குறைந்த செலவில் காப்புறுதி பெற்றுக் கொள்ளவும் மற்றும் காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்

Unity Life of Canada
INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance



# சிறீதரன் துரைராஜா
காப்புறுதி முகவர் (Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

digi Media Creations

# இறுக்கமான சூழலில் ஓர் இலகுவான தீர்வு

# ஈட்டுக் கடன் காப்புறுதியும் ஆலோசனையும்



சிறீதரன் துரைராஜா
- ஆயுட் காப்புறுதி முகவர் -

## ஈட்டுக் கடன் காப்புறுதி வங்கியின் ஈட்டுக் கடனுடன் இணைந்திருப்பதால் ஏற்படும் குறைபாடுகள்.

நீங்கள் இப்போது ஒரு வீடு வாங்குகின்றீர் கள்என்று வைத்துக் கொள்வோம்.அதற்காக வங்கியிடம் ஒரு பெருந்தொகைப் பணத்தை ஈட்டுக்கடனாகப் பெற்றுக் கொள்கின்றீர்கள். இத் தருணத்தில் வங்கி உங்களிடம் ஆயுட் காப்புறுதி செய்யுமாறு கேட்டார்கள். அதாவது உங்களுக்கு மரணம் ஏற்பட்டால், உங்கள் கடனைக் கட்ட வேண்டியது இல்லை அதனால் எல்லாரும் வங்கியில் கிடைக்கும் அந்த ஆயுட்காப்புறுதிக்கு சம்மதம் தெரிவித்து கையொப்பம் செய்வதுண்டு. ஆம் என்று சொல்லி விண்ணப்பத்தில் கையொப்பம் இட்டு சில நிமிடங்களில் காப்புறுதி திட்டம் அங்கீகரிக்கப்படுவதுடன் உங்கள் கடனுக்கான மாதாந்த கட்டுப்பணத்துடன் காப்புறுதிக்கான பணமும் கட்டப்பட்ட ஈட்டுக்கடனுக்கான மாதாந்தக் கட்டுப்பணத்தை (Mortage Payments) கணிப்பார்கள்.

வங்கிகளுக்கும் மற்றும் கடன் கொடுக்கும் நிறுவனங்களுக்கும் இந்தக் காப்புறுதி திட்டத்தை விற்பனை செய்வது மிகவும் இலகுவானது. காரணம் ஒருவர் வீடு ஒன்று வாங்கும் போது அவரது நோக்கம் முழுவதும் வீடு வாங்குவதிலும் அதற்கான கடனைப் பெறுவதிலும்தான் மிகவும்தீவிரமாக இருக்கும். காப்புறுதி பற்றி கவனிப்பதற்கு நேரம் மற்றும் அதற்கான தகவல்களைப் பெறுவதில் அக்கறை எதுவும் இருப்பதில்லை.

அதே நேரத்தில் நீங்கள் காப்புறுதி தேவை இல்லை என்று வங்கிகளிடம் கூறினால் நீங்கள் காப்புறுதிவாங்கவில்லை என்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்களில் கையொப்பமிட வேண்டும். வங்கிகளில் அல்லது கடன் கொடுக்கும் நிறுவனங்களில் வழங்கப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் காப்புறுதித் திட்டங்களுடன் காப்புறுதி நிறுவனங்களால் அல்லது காப்புறுதி முகவர்களால் விற்பனை செய்யப்படும் காப்புறுதி திட்டங்களும் மிகவும் வேறுபட்டவை.

வங்கியில் பெறப்படும் காப்புறுதித் திட்டங்கள் இலகுவானதாகவும் மலிவானதாகவும் முதலில் தெரியும்.ஆனால் காப்புறுதி நிறுவனங்களில் கிடைக்கும் திட்டங்களை விட விலை கூடியவை.

உதாரணமாக ஒரு கணவன் 49 வயது. அவரது மனைவி 45 வயது.Royal Bank of Canada இல் $250,000 ஈட்டுக் கடனாகப் பெறும்போது அவர்களுக்கான ஈட்டுக் கடன் காப்புறுதியின்(Mortgage Insurance) மாதாந்தக் கட்டுப்பணம்$153.92 அல்லது 1846.80 ஆக இருக்கும்.

காப்புறுதி நிறுவனமொன்றில் இத்தொகைக்கான 10வருடத் தவணைக்காப்புறுதி (Term 10) 400 தொடக்கம் 700 வரை இருக்கும். அல்லது 20வருடத்திற்கான தவணைக் காப்புறுதி $710முதல் $2000 டொலர்கள் வரை பெற முடியும்.

எனவே வங்கி மூலம் காப்புறுதி பெறுவதற்கு முன்னர் உங்களுக்குத்தெரிந்த காப்புறுதிமுகவர்களுடன் தொடர்புகொண்டு அதற்கான மாதாந்தக் கட்டுப்பணத் தொகையை தெரிந்து கொண்டால் ஒப்பீடு செய்வது இலகுவாக இருக்கும். அல்லது www.get-term.com என்ற இணையத் தளத்தில் தொடர்புகொள்வதன் மூலம் பல நிறுவனங்களின் காப்புறுதிக் கட்டணங்களை அறிந்து கொள்ள முடியும்.

சாதாரணமாக ஒருவர் வீட்டுக் கடனுக்கான காப்புறுதிபெற்றிருந்தால் அவருக்கு மரணம் ஏற்படும் போது அந்த வீட்டுக் கடனைக் கட்ட வேண்டியதில்லை. ஆனால் ஒருவரின் வீட்டுக் கடனுக்கான மாதாந்தக் கட்டுப்பணம் அவரின் மாதாந்த வருமானத்தின் 1/3 பகுதியாகவே இருக்க வேண்டும் என்பது வங்கிகளின் நிபந்தனை.எனவே ஈட்டுக்கடன் காப்புறுதி ஒருவரின்1/3 பகுதிவருமானத்தை மட்டுதே ஈடு செய்யும். மிகுதி 2/3 பகுதி வருமானத்தை ஈடு செய்வதற்கு போதிய அளவு காப்புறுதி இருப்பது அவசியம்.

நாங்கள் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் பெற்றுக் கொள்வது ஒருவரின் இழப்பால் ஏற்படும் பொருளாதார இழப்பை ஈடு செய்வதற்காகவே. எனவே காப்புறுதித் தொகை ஒரு தனிமனிதரின் கடன் தொகையை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அவரின் வருட வருமானம், அவரின் பொருளாதார வலு (Financial Value) என்பவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் உங்களில் பொருளாதார ரீதியாக தங்கி இருக்கும் உங்கள் குடும்பத்தவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கு ஆயுட் காப்புறுதி அவசியம். (உதாரணமாக உங்கள் குழந்தைகளின் உயர் கல்விக்கு தேவைப்படும் செலவுகள்).

## வங்கியில் பெறப்படும் காப்புறுதித் திட்டத்திற்கும் காப்புறுதி நிறுவனத்தில் பெறப்படும் திட்டத்திற்கும் உள்ள சில வேறுபாடுகள்.

வங்கிகளில் புகைப்பிடிப்பவர்கள்,புகை பிடிக்காதவர்கள் (Smokers and Non Smokers) அனைவரும் ஒரு வகையாகவே கணிக்கப்படுவார்கள். எனவே தனிப்பட்ட ஒருவர் காப்புறுதி நிறுவனத்திடம் காப்புறுதி செய்யும் போது அவரின் உடல்ஆரோக்கியம், வயது போன்றவை கருத்தில் கொள்ளப்படும். எனவே ஒரு புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர்கள் அல்லது நிறை கூடியவர்கள் காப்புறுதி நிறுவனத்தில் பெறுவதை விட வங்கி மூலம் காப்புறுதி செய்வது இலகுவானது.

நீங்கள் ஈட்டுக் கடனுக்குப் பின்பு வங்கி அல்லது கடன் நிறுவனத்தை மாற்ற வேண்டிய தேவை ஏற்படின் காப்புறுதியும் மாற்ற வேண்டிய நிலை ஏற்படும். காரணம் அதிகமான வங்கிகள் 5வருடத்திற்கு ஈட்டுக் கடன் தருவார்கள். அதன் பின்பு வேறு நிறுவனத்திற்கு அல்லது வேறு வங்கியில் கடன் எடுக்க மாற்றம் செய்தால், காப்புறுதியும் மாற்ற நேரிடும். அல்லது மற்றைய வங்கியில் புதிய காப்புறுதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அதனால் ஒருவரின் வயது 5 கூடி விடும். அத்துடன் ஏதாவது உடல்

67ம் பக்கம் பார்க்க...


# வயோதிபர்களுக்கான காப்புறுதி மிகக் குறைந்த செலவில்...



**சேமிப்புடன் கூடிய நிரந்தர ஆயுட் காப்புறுதி**
(Universal Life Insurance)

- இத்திட்டம் ஆயுட்காலம் வரை நீடிக்கும்
- மாதாந்தக் கட்டணம் எப்போதும் அதிகரிக்காது
- 10. 15 அல்லது 20 வருடங்கள் மட்டுமே பணம் செலுத்த வேண்டும்
- அதன் பின்பு கட்டிய பணத்தை மீளப் பெற முடியும்

**வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி**

உங்கள் வயதான பெற்றோருக்கு வைத்திய பரிசோதனை இன்றி காப்புறுதி செய்து கொள்ள முடியும். வேறு நிறுவனங்களால் நிராகரிகப் பட்டவர்களும் இணைந்து கொள்ளலாம்.

**குழந்தைகளின் உயர் கல்விக்கான சேமிப்புத் திட்டம் (RESP)**

கனடிய அரசினால் வழங்கப்படும் 20 - 40 சதவீத மானியத்துடன் எமது நிறுவனத்தால் 15 சதவீத சலுகையயும் அதிகமாக வழங்கப்படும். அத்துடன் 500 டொலர் Canada Learning Bond அரசினால் வழங்கப்படுகின்றது.

காப்புறுதி சம்பந்தமான அனைத்து ஆலோசனைகளையும் தகுந்த விளக்கத்துடன் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.



**சிறீதரன் துரைராஜா**
காப்புறுதி முகவர் (Licensed Insurance Broker)

**416.918.9771**

759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x: 407

RBC Insurance · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Unity Life of Canada

digi Media Creations

•கொடிய நோய்களுக்கான காப்புறுதி • ஈட்டுக்கடன் காப்புறுதி • வைத்திய பரிசோதனை இல்லாத காப்புறுதி • RRSP • RESP

# குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி



கொடிய நோய்களுக்கான காப்புறுதி! கொடிய நோய்கள் வருமுன்னே காப்புறுதி செய்யுங்கள்.

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

தனா மாணிக்கவாசகர்
*Broker*

## Life Insurance
**Critical Illness Insurance**



## Disability Insurance
## Mortgage Insurance

**RRSP - Start from $25**
**Loan approval within 24hrs - Bad credit no problem**
**RESP - Start from $25**
**(20%-40% Government Grant + 15% Company Bonus)**

**INSURANCE SERVICE INC.**
**Cell: 416-728-5772**
Business: 416-290-1200

# A-Z SOLUTIONS

**To Every Human Problem, There is only one easy solutions**

A - Z அனைத்துக்கும் தீர்வு

மனிதனின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இலகுவான ஒரு தீர்வே உண்டு.

ஒரு குடையின் கீழ் உங்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டுகின்றது.

**" எனது பெற்றோருக்கு வழுங்கப்படாதிருந்த பென்சன் உதவித்தொகை 22,000ஐ இரண்டு வாரங்களில் பெற்றுத்தந்தனர்"**
- பிரபல வைத்தியர்



## நீங்கள் 59 வயதைத் தாண்டிவிட்டீர்களா?
**பென்சனுக்குத் தகுதியாகலாம். வீட்டில் இருங்கள் பென்சன் தேடிவரும்.**

**நீங்கள் 65வயதிற்குக் குறைந்தவரா? CPP Disability பென்சனுக்குத் தகுதியாகலாம்.**

**நீங்கள் கடனில் மூழ்கிவிட்டீர்களா? மீளுவதற்கான வழிகள் எம்மிடம் உண்டு.**

**15 வருட அனுபவம் அழையுங்கள் ஜெயா 416.431.0707**

**பல நூற்றுக்கணக்கான வங்குறோத்து நிலைமைகள் (Bankruptcies) கையாண்ட அனுபவம் - அழையுங்கள்**

# பிரபு பொன்னம்பலம்
# 416.431.0707

**Real Estate**
கட்டிடச் சொத்துக்கள்
- Buying or Selling
- Mortgage arrangement
- Free Consultation
- Free Market Evaluation

**Insurance**
காப்புறுதி
- Life Insurance
- Wills and Estate
- RESP
- Mortgage Protection


viha fashions
விஹா பஷன்ஸ்
10 Lormel Gate, Unit 5,
Brampton, ON
L7A 2K7, Canada
Grand Opening
SALE
SEP 01, 2007
• Sivaji Sarees
• Sequence with Stone Sarees
• Silk Sarees, Kanchipuram Sarees
• Sequence Half Sarees with Stone
• Cotton Embroided Salwar Kameezes
• New Designer Top & Skirts
• Kutties Tops, Skirts & Blouses
• Lehnga Suits & Choli Kit
• Ladies Nighties & Underskirts
• Fancy Jewelleries
Tel.
905.840.7002
www.vihafashions.com,
sasi@vihafashions.com
Sandalwood Pkwy
10
Lormel Gate
Mclaughlin Rd.
Hurontario St
410
7
Bovaird Dr. W
digi Media Creations

NEW CREDIT - BAD CREDIT - NO CREDIT
BANKRUPT - NO PROBLEM
On Line - Credit Approvel, All kind of Credit Repairs
உங்கள் வியாபார முதலீடு வீட்டு முதலீடு ஆகியவற்றுக்கான பணத்தேவைகள் உடன் ஒழுங்கு செய்து தரப்படும்
Shan Kanapathipillai
416.890.2300
e-mail: shankana@juno.com
CENTUM
Looking out for your best interest

• Real Estate Law
• Business Law
YASO SINNADURAI
BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC
THE LAW OFFICES OF YASO SINNADURAI
2100 Ellesmere Rd., Suite 202
Scarborough, Ont. M1H3b7
Tel: 416•265•3456
Fax: 416•265•2770

என்றென்றும் இயற்கைப் பற்களின் ஆரோக்கியச் சிரிப்பிற்கு
பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர்
ஆதிகணபதி சோமசுந்தரம்
416.750.9969
2191 Warden Ave., Suite 3000,
Scarborough, ON

BUY AND SELL HOMES AND BUSINESS
50 ACRE INVESTMENT
0% down
139 900
Middlefield/Finch
910 Sqft Can Be Office Gen. Office, 3 Rms + Recptn. Wsrm+ Ten Rm Parking, Ground Floor 2Piece Washroom Ac Large Industrial Complex
23 POWER OF SALE AVAILABLE CALL NOW!!
CONVENIENCE STORE AVAILABLE FOR SALE FRM 29000/-
PAT PUSHPAKANTHAN
Broker of Record/Owner
OFF: 416 493 2100
Dir: 416 490 SOLD
0 dwn mortgage avail.
TOTAL COMMISSION SOLUTION 2.5%**
TOP PRODUCER 5 YEARS
EXPERIENCE!
Century 21
Professional Choice REALTY INC.
Brokerage*
200 Consumers Rd Suite 408 TORONTO, ONT. M2J 4R4
*Based on your yearly sales
**BY INDIVIDUAL PERFORMANCE from and Previous century21 company
*EACH OFFICE OWNED & OPERATE SEPERATELY

## உங்களிடம் (நீங்கள் எடுத்த) அழகான புகைப்படங்கள் இருக்கின்றனவா?

**அவற்றை நாங்கள் பிரசுரிக்க விரும்புகிறோம்.**

புகைப்படம் எடுத்தவரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், புகைப்படம், எடுக்கப்பட்ட காட்சி அல்லது எடுக்கப்பட்டவருடைய விபரங்கள் என்பவற்றுடன் நீங்கள் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பிவையுங்கள். அவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

### இம் மாத புகைப்படக் கலைஞர்

**பொன்னையா விவேகானந்தன்**

கனடாவிலும் புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் வானொலிகளைக் கேட்போருக்கு மிக அறிமுகமான பெயர். விவேகானந்தன் ஒரு புகைப்படக் கலைஞரும் கூட. பாடசாலைக் காலத்திலிருந்தே புகைப்படங்களை எடுத்துவருகிறார். அவருடைய இரண்டு புகைப்படங்கள் இங்கு.





குரங்கு கையில் பூமாலை

• சுமார் 10 வருடங்கள் Scotia வங்கியில் மோட்கேஜ் அனுபவம்
• 7 நாட்களும்... 24 மணி நேரமும் நட்பான சேவை
• குறைந்த வட்டி வீதம் • 0% Down Payment
Scotiabank
Ragavan Ramanathan
Mortgage Development Manager
• New • Switch • Refinance
Tel: 416•579•7533
Fax: 416•579•9433
ragavan.ramanathan@scotiabank.com

PROTECT YOURSELF AND YOUR LOVED ONES!
Insurance Ocean
Product we serve:
• Accident Death Insurance • Affordable Life Insurance • Critical Illness Insurance
• Disability Income Insurance • Mortgage Insurance • Permanent Life Insurance
• Pet Insurance • Term Life Insurance • Travel Insurance • No Medical Exam Insurance
We provide free training and prepare you for the certification
Now hiring at Ocean Mortgage Include: Marketing Specialist, Sales Reps.
Call today 416-321-2300
Get the best rate online @
www.insuranceocean.com
digi